15 நவம்பர் 1994 □ ரூ. 3.00
www.padippakam.com

பிளேக் நோய் பரப்பும் பெருச்சாளி அரசே

# புதிய ஜனநாயகம்




## பாரதீய ஜனதா, காங். தூண்டும் கன்னடவெறி

படிப்பகம்

www.padippakam.com

# காட் - டங்கல் எதிர்ப்பு இயக்கம்

திருப்புவனத்தில் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியின் டங்கல் - காட் எதிர்ப்பு பொதுக்கூட்டம் சந்தை திடலில் 5.9.94 அன்று நடந்தது. தோழர்கள் இராமு, பெ. தமிழ்மணி (ம.க.இ.க) ஆகியோர் உரை நிகழ்த்த, ''அடிமைச் சாசனம்'' என்ற புரட்சிகர கலைநிகழ்ச்சியும் நடைபெற்றது. பொதுமக்கள் சுமார் 700 பேர் கூட்டத்திற்கு முன்பாகவே திரண்டு இறுதி வரை கலையாது நின்றும் நிதியுதவி அளித்தும் ஆதரவு தந்தனர். இப்பகுதியில் ஓட்டுக்கட்சிகள் பத்தாயிரக்கணக்கில் செலவு செய்தும் கூட்டம் சேராதபோது கருத்துக்காக மக்கள் இப்படி திரண்டதைக் கண்டு அக்கட்சிகள் அதிர்ச்சியுற்றன. சி.பி.எம்.-லிருந்து சிலர் பு.மா.இ.மு. பக்கம் வந்து இணையவும் செய்தார்கள். இதனால் சி.பி.எம். தலைமை பொறுமிக் கொண்டு நடவடிக்கையிலும் இறங்கியது.

மடப்புரம் கிராமத்தில் உள்ள சி.பி.எம். தோழர்கள் பு.மா.இ.மு-வின் பொதுக்கூட்டம், கலைநிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தார்கள். சி.பி.எம்-ன் மாவட்டச் செயலாளருக்கு தெரிந்தவுடன் மடப்புரத்தில் ஒரு வாரம் முகாமிட்டு அணிகளை மிரட்டினார். ''கொலைகார, கொள்ளைக்கார அமைப்பு'', ''நக்சலைட்டு தீவிரவாதிகள், வெளிநாட்டிலிருந்து பணம் வாங்குபவர்கள், சாதிக்கலவரத்தை தூண்டுபவர்கள்'' என்றெல்லாம் பிரச்சாரம் செய்து அணிகளை மட்டுமல்லாமல் ஊர் மக்களையும் மிரட்டினார். அணிகளின் பெற்றோர்களைச் சந்தித்து எச்சரித்தார். கலையரங்கம் கொடுத்தவர்களையும் மிரட்டினார்கள். சி.பி.எம். தலைமையின் இந்நடவடிக்கையை முறியடித்து பகுதி மக்கள் ஆதரவுடன் 20.9.94 அன்று பொதுக்கூட்டம் நடந்தேறியது. 300-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கூடியிருக்க தோழர்கள் கணேசன், கதிரவன், வேம்பன் ஆகியோர் உரையுடன் கலை நிகழ்ச்சியும் சிறப்பாக நடந்தது. சி.பி.எம்.-ன் பொய் பிரச்சாரத்தை இனங்கண்டு கொண்டதோடு தமது கருத்தையும் வெளிப்படுத்தி பு.மா.இ.மு-வினரைப் பாராட்டினார்கள், பகுதி மக்கள்.

★ நாடு மீண்டும் அடிமையாவதையும் இந்த மதவெறி பாசிஸ்டுகளையும் எதிர்த்து பு.மா.இ.மு-வின் பொதுக்கூட்டமும் ம.க.இ.க-வின் புரட்சிகர கலை நிகழ்ச்சியும் இராமநாதபுரம் - முதுகுளத்தூரில் 6.9.94 அன்று நடந்தது. தோழர்கள் செல்வராசு, தமிழ்மணி உரை நிகழ்த்தினர். சுமார் 1000 பேர் பொதுமக்கள் திரண்டு ஆதரவளித்தது குறிப்பிடத்தக்கது. பகலில் ஒலிபெருக்கியில் ம.க.இ.கவின் பாடல் ஒலிப்பேழை ''இருண்டகாலம்'' போடப்பட்டபோது ஒரு அ.தி.மு.க.-காரன் போடக்கூடாது என மிரட்டினான். மாலை கூட்ட இறுதியில் பகுதி அ.தி.மு.க. ஒன்றியச் செயலாளரின் தம்பி குடிபோதையில் மேடையேறி கலைநிகழ்ச்சி நடத்திக் கொண்டிருந்த தோழர்களிடம் வம்பளந்தான். தாக்கவும் முற்படவே கைகலப்பானது. பிறகு போலீசு தலையிட்டு தடுத்து அவனை இழுத்துச் சென்றது. பார்வையாளர்களும் மேடைக்கருகே வந்து கலாட்டா செய்தவனுக்கு எதிராகக் குரல் கொடுத்ததோடு நிகழ்ச்சியை தொடரச் சொல்லி ஆதரவளித்தனர்.

★ மதுரையில் ''காட் - டங்கல்'' திட்டத்தை எதிர்த்து பு.மா.இ.மு., ம.க.இ.க., சார்பாக பொதுக்கூட்டம் செப். 9,10 தேதிகளில் நடத்த அனுமதி கோரப்பட்டது. 9-ந் தேதி மதவெறியர்களின் விநாயகர் சதுர்த்தி ஊர்வலம் நடக்க இருந்ததைக் காரணங் காட்டி கலவரம் ஏற்படும் என்று கூறி போலீசு அனுமதி மறுத்தது. 10-ந் தேதி சமயநல்லூரில் மட்டும் நடத்திக் கொள்ள அனுமதியளித்தது. இந்து வெறியர்களுக்குச் சாதகமாக 9-ந் தேதி பொதுக்கூட்டத்திற்கு அனுமதி மறுத்ததோடு விநாயகர் ஊர்வலத்திற்கு எதிராக சுவரொட்டி ஒட்டமாலும் இருப்பதற்காக மிரட்டல், தேடுதல் வேட்டைகளை மேற்கொண்டது.

மதுரை இந்து முன்னணியின் தலைவர் ஆறுமுக நாடார் கக்கிய இந்து வெறி பேச்சை நக்கி வாந்தியெடுத்தன, தினமலர், தினமணி போன்ற பார்ப்பன பத்திரிகைகள். விநாயகர் ஊர்வலத்திற்குப் பாதுகாப்பு தரும் பணிக்காக போலீசு துறையே முடுக்கி விடப்பட்டது. முதல்நாள் (8.9.94) ஜெய்ஹிந்த்புரத்தில் பு.மா.இ.மு. தோழர் ரவீந்திரன் வேலை செய்யும் கடையில் எஸ்.ஐ.ரவி அத்து மீறி நுழைந்து இந்து முன்னணிக்கு எதிரான சுவரொட்டி இருக்கிறதா என தேடிப் பார்த்தார். தோழர், போலீசின் அத்து மீறலைக் கண்டிக்கவே ''எனது மேலதிகாரிகள் சொன்னதைச் செய்தேன்'' என்று குழைந்து பேசிச் சென்றார், சிறிது நேரத்தில் எஸ்.ஐ. ரவி போலீசு பட்டாளத்துடன் வந்து தோழர் ரவீந்திரனை ஜெய்ஹிந்த்புரம் போலீசு நிலையத்திற்கு கூட்டிச் சென்று சுவரொட்டி ஒட்டுவது தொடர்பாக விசாரித்து விட்டு அனுப்பினார். அதே போல் செல்லூர் பகுதியிலும் போலீசு, பு.மா.இ.மு. தோழர்களை தேடி விசாரித்துள்ளது. சயநல்லூரில் ம.க.இ.க. தோழர்கள் ரங்கன், பெத்தண்ணன் ஆகியோரிடம் சுவரொட்டி தொடர்பாக விசாரித்து விட்டு மிரட்டிச் சென்றது, போலீசு. ஆனால் போலீசு மிரட்டல்களையும் அம்பலப்படுத்தி ம.க.இ.க., பு.மா.இ.மு., சார்பாக சுவரொட்டி நகரெங்கும் ஒட்டப்பட்டது.




சமயநல்லூரில் 10.9.94 அன்று நடந்த டங்கல் எதிர்ப்பு பொதுக்கூட்டத்திற்கு தோழர் பெத்தண்ணன் தலைமை வகித்தார். ஆபாச கலாச்சார சீரழிவுகளைச் சாடி பெண்கள் விடுதலை முன்னணி தோழர் சுகுணா பேசினார். விநாயகர் ஊர்வலத்திற்கு சாதகமாக பு.மா.இ.மு. மீது எடுத்த நடவடிக்கைகளை கண்டித்து தோழர் ரவீந்திரன் உரையாற்றினார். காட் - டங்கல் திட்டம் வழியாக ஆட்சியாளர்கள் இந்தியாவை விற்றுக் கொண்டிருப்பதை அம்பலப்படுத்தி தோழர் காளியப்பன் சிறப்புரையாற்றினார். கலைக்குழுவினரின் புரட்சிகர கலை நிகழ்ச்சியும் நடந்தது. இடையில் மழைத் தூறல் விழுந்தபோதிலும் கூடியிருந்த 200-க்கும் மேற்பட்ட மக்கள் கலையாமல் இறுதிவரை இருந்து ஆதரவு தந்தனர்.

★ சிதம்பரனார் மாவட்டத்தில் பு.மா.இ.மு. சார்பாக 16, 17, 18.9.94 ஆகிய மூன்று நாட்களில் பல இடங்களில் டங்கல் எதிர்ப்பு இயக்கம் தெருமுனைப் பிரச்சார வடிவில் மேற்கொள்ளப்பட்டது. 16-ந் தேதி புளியம்பட்டி, லெட்சுமிபுரம் சுற்றியுள்ள பகுதிகளில் பிரச்சாரம் செய்ததில் 200-க்கும் மேற்பட்ட மக்கள் கூடி நின்று ஆதரவளித்தனர். தமது வீட்டு நிகழ்ச்சிக்காக ஏற்பாடு செய்திருந்த ஒலி பெருக்கியை பயன்படுத்தக் கொடுத்து உதவினர். 17-ந் தேதி வ.உ.சி. பிறந்த ஒட்டப்பிடாரம், கட்டபொம்மன் வாழ்ந்த பாஞ்சாலங்குறிச்சி, முப்பிலிவெட்டி, தெற்குபரம்பூர், கட்டபொம்மனிடத்தில் சிறப்பு ஒற்றர் பிரிவு தலைவராக பணியாற்றிய தாழ்த்தப்பட்டவரான சுந்தரலிங்கம் பிறந்த கவர்ணகிரி ஆகிய கிராமங்களில் தெருமுனைப் பிரச்சாரம் செய்யப்பட்டது. கவர்ணகிரியில் மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் ஜனார்த்தனனின் கையாள் ஒருவன் தகராறு செய்து நிகழ்ச்சிக்கு இடையூறு செய்தான். பின்னர் பகுதி பெண்கள் தலையிட்டு தடுத்தனர். 18-ந் தேதி திருச்செந்தூர் தாலுகா - வெள்ளமடம், நாசரேத் பகுதிகளில் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. மக்கள் தாராளமாக நிதியுதவி செய்தனர். தோழமை அமைப்பின் ஒலிப்பேழையை 30-க்கும் மேற்பட்டு வாங்கி ஆதரவளித்தனர்.

★ இராமநாதபுரம் - காவனூர், பெருங்களூர், வயலூர், கிளியூர், குளத்தூர், பாண்டியூர், கெங்கை கொண்டான், முதலூர் ஆகிய கிராமங்களில் புதிய ஜனநாயகம் வாசகர் வட்டம் சார்பாக டங்கல் எதிர்ப்பு - தெருமுனைப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. செப்டம்பர் 7,8 தேதிகளில் நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சிகளில் கிராமந்தோறும் 300க்கும் மேற்பட்ட மக்கள் கூடியும் புத்தகம், ஒலிப்பேழைகளை வாங்கியும் ஆதரவளித்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு

ஒன்பதாம் ஆண்டு

**22-24**

1 அக். - 15 நவ. '94

உள்நாடு:
தனி இதழ்: ரூ.3.00
ஆண்டு சந்தா: ரூ.72.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 16

முகப்போவியம்: கரோ

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
இரா.சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4, சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# பாரதீய ஜனதா - காங். தூண்டும் கன்னடவெறி

தேர்தல் ஆதாயத்தைக் குறிவைத்துச் செயல்படும் ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளுக்கும் குறிப்பாக நாட்டின் ஆளும்கட்சியான காங்கிரசுக்கும், பிரதான எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாவுக்கும் மக்கள் இரத்தம் சிந்துவதையோ, உயிரிழப்பதையோ பற்றித் துளியும் கவலை கிடையாது. கர்நாடகா, ஆந்திரா இன்னும் சில மாநிலங்களில் நவம்பரில் சட்டமன்றத் தேர்தல்கள் வருகின்றன. அதில் தனது வெற்றிக்காக மக்களை உயிர்பலி கொடுக்கும் காரியங்களில் அக்கட்சிகள் இறங்கிவிட்டன. ஆந்திராவில் ''அல் கபீர்'' என்னுமிடத்தில் மாடு வெட்டுவதை பசு வதை என்று தடை செய்யக் கூறி இசுலாமிய மத எதிர்ப்பாக்கி கலவரத்தை துண்டி வருகிறது; கர்நாடாகா - ஹுப்ளி நகரில் உள்ள இசுலாமியக் தொழுகை நடத்தும் ''ஈத்தா'' மைதானத்தை மீட்பது என்கிற பெயரில் ''தேசிய''க் கொடி ஏற்ற முயன்று கலவரங்களை நடத்திச் சில உயிர்களைப் பலியிட்டது, பாரதீய ஜனதாக் கட்சி. இப்போது, கன்னட மொழி உணர்வை மொழிவெறியாகவும் பிறகு அதையே இசுலாமியருக்கு எதிரான மதவெறியாகவும் மாற்றிக் கவலரங்கள் நடத்துவதில் வெற்றி பெற்றுள்ளது. இன்னொரு பாசிச கட்சியான காங்கிரசு மற்றும் மொழி - மதவெறியினர் இதற்கு மறைமுக, நேரடி உடந்தையாக இருந்திருக்கின்றனர்.

அக்டோபர் இரண்டாம் தேதியில் இருந்து பெங்களூர் தொலைக்காட்சி நிலையம் மாலை வேளையில் 10 நிமிடம் உருதுச் செய்தி நிகழ்ச்சியைத் துவக்கியது. இது முதன்மை நேரத்தில், உருதுவைப் புகுத்த, கன்னடத்தைப் புறக்கணிப்பதாகக் கூறிக் கிளம்பிய எதிர்ப்பு சில நாட்களில் மொழி, மதக் கலவரமாக மாற்றப்பட்டது. கல்வீச்சு, ''பெட்ரோல்'' குண்டு வீச்சு, தீ வைப்பு, சூறையாடல், கத்திக்குத்து, துப்பாக்கிச் சூடு என்று ஐந்து நாட்களில் நகரமே வன்முறை - கிரிமினல் கும்பலின் பிடியில் சிக்கிச் சிதைக்கப்பட்டது. பலகோடி ரூபாய் சொத்துக்கள் நாசமடைந்தது; அதைவிட முக்கியமாக கலவரத்தில் 27 பேர் பலியானதாக அதிகாரபூர்வ செய்தி கூறினாலும் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். கத்திக்குத்துக் காயங்களுடன் அழுகிய பிணங்கள் பெரும் பாதாள சாக்கடைக் கால்வாய்களில் இருந்து இன்னமும் மீட்கப்படுகின்றன. 'பெங்களூர் தொலைக்காட்சி தற்காலிக இயக்குநர் அனீஸ் உல்.ஹக்கை இடமாற்றம் செய்து, உருது செய்தி ஒளிபரப்புவதை நிறுத்திய பிறகுதான் கலவரம் ஓய்ந்தது.

தொலைக்காட்சியில் உருது செய்தி ஒளிபரப்பும் முடிவு ஒன்றும் புதிதானதல்ல; ஏற்கனவே பாட்னா, ஐதராபாத், லக்னோ, ஸ்ரீநகர், டெல்லி, பம்பாய், கல்கத்தா, போபால் ஆகிய நகரங்களில் ஒளிபரப்பப்படுகிறது. மற்ற நகரங்களிலும் ஒளிபரப்புவதென்ற முடிவு இருந்தாலும், அமுலாக்கப்படவில்லை. அடுத்த மாதம் வரவிருக்கும் தேர்தலில் இசுலாமியரின் வாக்குகளைப் பெறும் ஆதாயம் கருதி இப்போது காங்கிரசு அரசு அதை அமுலாக்குகிறது. அதன் நோக்கம் எதுவாக இருந்தாலும், ''தேசிய'' மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு மொழியை, கர்நாடகாவில் 10 சதவீதத்துக்கும் மேலாக, பெங்களூர் நகரில் அதற்கும் மேலாக உருது பேசுவோர் இருக்கும்போது ஒரு பத்துநிமிடம், கன்னட நிகழ்ச்சிகள் பாதிக்காத வகையில் ஒளிபரப்புவதால் ஒன்றும் குடிமுழுகிப் போகாது; கன்னட மொழி அழிந்துபோகாது.

யாருமே பேச்சு வழக்கில் பயன்படுத்தாத, ஆராய்ச்சியாளர்களும் புரியாமலே புரோகிதர்களும் மட்டுமே பயன்படுத்தும் ''தேவபாடை''யான சமஸ்கிருதம் ''தேசிய'' மொழியாக அங்கீகரிக்கப்பட்டு, பலகோடி ரூபாய் செலவிடப்படுகிறது. ''தேசிய'' ஒருமைப்பாடு - பண்பாட்டு மொழி என்று பீற்றிக் கொண்டு ஒளி - ஒலி பரப்பப்படுகிறது. ஆனால் உருதுவோ நாட்டில் 10 சதவீதம் பேர் பேசும்மொழி; ஆனால், அது இசுலாமியர் பேசும் அந்நியமொழி என்று இந்துமத வெறியர்களால் முத்திரை குத்தி ஒதுக்கப்படுகிறது. உருது இசுலாமியர் மட்டும் பேசும் மொழி அல்ல. செழுமையான இலக்கிய செல்வத்தைக் கொண்ட உருதுதான் ''இந்தி சினிமா'' போன்ற நடைமுறை வழக்கில் உள்ளது; காங்கிரசு, பாரதீய ஜனதா தலைவர்களே கூட உருதுக் கவிதைகளைப் பயன்படுத்தி மேடைகளிலும், நாடாளுமன்றங்களிலும் உரையாற்றுகின்றனர். ஆகவே ஒரு ''தேசிய'' சிறுபான்மை மொழி என்கிற முறையில் அதற்கு உரிய முக்கியத்துவம் அளிப்பதே சரி.

ஆனால் உருது மொழிக்கு இசுலாமிய மதச்சாயம் பூசி பாசிச இந்து மத வகுப்புவாத நோக்கங்களுக்காக பாரதீய ஜனதா - ஆர்.எஸ்.எஸ் பரிவாரங்கள், கன்னட மொழி, இனவெறியர்களை அதற்குப் பயன்படுத்திக் கொள்கிறது. மிகப் பின்தங்கிய இனங்களில் ஒன்றான கன்னட இனம் இத்தகைய தூண்டுதல்களுக்கு எளிதில் பலியாவதை கண்டிருக்கிறோம். வடக்கே மராத்தியர்களும் தெற்கே மலையாளிகளும் பெரும்பான்மையாகவாழும் பகுதிகள் மீது உரிமை கோரினர். காவிரி நீர் பிரச்சினை போன்றவற்றை கன்னட இனவெறியர்கள் வன்முறைக் கலவரங்களாக மாற்றி ஆதாயம் அடைந்தனர். அரசு முடிவை அமுலாக்கிய வானொலி நிலைய இயக்குநர் ஒரு இசுலாமியர் என்பதற்காக இடமாற்றம் செய்வது என்பதெல்லாம் அத்தகைய வெறியர்களுக்கு மேலும் உரமூட்டுவதாகவே அமையும். தேசிய இனங்களின் உரிமைக்காகப் போராடுபவர்கள், தேசிய இனச் சிறுபான்மை, சிறுமொழி ஆகியவற்றின் உரிமைகளையும் அங்கீகரிப்பதே சரியாகும். மேலும் இப்போது உருது மொழிக்கு உரிய இடமளிப்பதை எதிர்க்கும் பாரதீய ஜனதா, காங்கிரசு பாசிஸ்டுகள்தாம் இந்தி - சமஸ்கிருதம் ஆகியவை ''தேசிய'' மொழி என்று திணிப்பதையும், பிறமொழிகளின் உரிமை மறுப்பதையும் காண வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

# பிளேக் சாவிற்கு அரசே பொறுப்பு

**எலி, கொசு, ஈ, புழுக்களும் சாக்கடை - குப்பைகளும் இந்த அரசுகளும் நீடிக்கும்வரை தொற்றுநோய்கள் தொடரும்**

பிளேக் நோய் மீண்டும் இந்தியாவில் பரவி அனைவரையும் அச்சுறுத்திக் கொண்டுள்ளது. இந்தியாவில் பலமுறை பிளேக் நோய் பாதித்திருந்தாலும் 1907-ம் ஆண்டு 13,15,892 பேர் இறந்ததுதான் அதிக அளவு. தற்போது குஜராத் - சூரத், மஹாராஷ்டிரா - பீத், டில்லி ஆகிய பகுதிகளில் பிளேக் நோய் தாக்கி அக்டோபர் 2-ந் தேதி வரை 52 பேர் இறந்துள்ளனர். இம்மூன்று பகுதிகளல்லாமல், ராஜஸ்தான், மத்தியபிரதேசம், உத்திரபிரதேசம், மேற்கு வங்காளம் உட்பட நாட்டில் 4,056 பேர் பிளேக் பாதித்து மருத்துவ சிகிச்சை பெற்று வருகிறார்கள். இவை அரசு தரப்பு புள்ளி விவரங்கள்.

செப்டம்பர் 22-ம் தேதி சூரத்தில் பிளேக் நோயால் சிலர் இறந்த செய்தி பரவியதும் நகரவாசிகள் மூன்றில் ஒரு பங்கினர் மஹாராஷ்டிரா, ஒரிசா முதலான பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தனர். சூரத், விசைத்தறி மற்றும் வைரம் பட்டைத்தீட்டும் தொழிலுக்கு பெயர் பெற்ற நகரம். இத்தொழிலகங்களில் வேலை செய்யும் 8 லட்சம் தொழிலாளர்களில் அநேகமாக அனைவரும் வெளியேறி விட்டார்கள். பல இடங்களுக்கு பிளேக் நோய் இவர்கள் மூலம் பரவியது.

பீத் மாவட்டத்தில் விவசாய உற்பத்தியே அதிகம். பிளேக் நோய் காரணமாக இங்கிருந்தும் பலர் வெளியேறியதால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. டில்லியில் பள்ளிகள், அலுவலகங்கள் (சில நாட்கள்) ஓரளவிற்கு இழுத்து மூடப்பட்டன. உ.பி, ம.பி, மே.வங்கம், ராஜஸ்தான், தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் பிளேக் தடுப்பு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. பேருந்து, ரயில் பயணிகளைச் சோதித்தே மாநிலத்திற்குள் அனுமதிக்கின்றன, இம்மாநில அரசுகள். அரசு மருத்துவமனைகளில், முக்கிய இடங்களில் பிளேக் நோய் தடுப்பு முகாம்களை தமிழக அரசு அமைத்துள்ளது. பிளேக் நோய்க்கு எதிரான எச்சரிக்கை நடவடிக்கைகளையும் வழிகாட்டிகளையும் மாநில அரசுகளும் மத்திய அரசும் விளம்பரங்கள் மூலம் அறிவுறுத்துகின்றன.

சௌதி அரேபியா, ஓமன், பஹ்ரைன், குவைத், ரஷ்யா முதலான நாடுகள் இந்தியாவுடனான விமான போக்குவரத்தையும் பிற வர்த்தகத் தொடர்புகளையும் நிறுத்திக் கொண்டன. அமெரிக்கா, வங்காளதேசம், ஐரோப்பிய நாடுகள் இந்தியாவிலிருந்து வரும் பயணிகளை பரிசோதித்தப் பின்னரே அனுமதிக்கின்றன. ஐக்கிய அரேபிய நாடுகள் விமான - வர்த்தகத் தொடர்பை துண்டித்துக் கொண்டதால் பல கோடி ரூபாய் இந்தியாவிற்கு நஷ்டமாகியுள்ளது. வளைகுடா நாடுகள் எண்ணெய் வழங்குவது தடுக்கப்பட்டுவிட்டதால் இந்தியாவிற்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஏனெனில் மூன்றில் இரண்டு பங்கு எண்ணெய் வளைகுடா நாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகிறது.

பிளேக் நோய் மிக எளிதாகப் பரவி உடனடியாக ஆளைக் கொல்லும் என்பதாலேயே, உலக நாடுகள் அலறி இந்தியாவை தனிமைப்படுத்துகின்றன. 80-களில் ஆப்பிரிக்காவில் தோன்றிய பிளேக் நோய் பரவி டான்சானியா, வியட்நாம், பிரேசில், பெரு, ஸாயிரே என பல நாடுகளைப் பாதித்து நூற்றுக்கணக்கானவர்களை பலி கொண்டது.

பிளேக் நோயின் காரணமாக இந்தியாவின் உள்நாட்டு உற்பத்தி சூரத் போன்ற முக்கிய நகரத்தில் பாதித்திருப்பது, வெளிநாடுகளின் தொடர்புகள் துண்டிப்பால் ஏற்பட்டிருக்கும் நஷ்டம் - அவமானம் போன்ற காரணங்களால் இறந்தவர்களின் எண்ணிக்கையை அரசு இருட்டடிப்பு செய்கிறது. இதுவல்லாமல் அரசும் சரி, பத்திரிகையாளர்களும் சரி பாதிக்கப்பட்ட பல பகுதிகளுக்குச் செல்லவே இல்லை. எனவே, அரசு தரும் புள்ளி விவரத்தைக் காட்டிலும் பிளேக் கண்டு இறந்தவர்களின் எண்ணிக்கை கூடுதலாக இருக்கவே வாய்ப்புள்ளது.

> பிரச்சனை எழும் நேரத்தில் மட்டும் அரசு சில கண்துடைப்பு நடவடிக்கைகளை எடுப்பதோடு சரி. தொற்று நோய் ஒழிப்புக்காகப் பல்வேறு ஆராய்ச்சிக் கமிட்டிகளிலிருந்து தடுப்புக் கமிட்டிகள் வரை நியமித்தும் கோடிக்கணக்கில் பணத்தைக் கொட்டியும் மாற்றம் ஒன்றும் இல்லை.

• • •

பிளேக் நோயை உருவாக்கும் கிருமி யெர்சீனியா பெஸ்டிஸ். இது காட்டு எலிகளிலிருந்து வீட்டு எலிகளுக்கும் பிறகு மனிதர்களுக்கும் தெள்ளுப் பூச்சி அல்லது எலி உண்ணி (Rat Flea) என்கிற ஒருவகை ஈ மூலம் பரவுகிறது. இக்கிருமி உள்ள எலி இறந்து அதன் ரத்தம் நீரில் கலப்பதாலும் பிளேக் நோய் மனிதர்களை தொற்றுகிறது. நோய் பாதித்தவரின் சுவாசக்காற்று, எச்சில், வாந்தியை முகர்தல் மூலமும் பிறருக்குத் தொற்றிக் கொள்ளும். மனிதனின் நுரையீரல், கல்லீரல், மண்ணீரல், நிணநீர் சுரப்பிகளை தாக்கி செயலிழக்கச் செய்து கடுமையான காய்ச்சல், நெஞ்சு - வயிற்று வலி, இருமல், ரத்த வாந்தி முதலியவைகளை உருவாக்கி மிக விரைவில் ஆளைக் கொல்லுகிறது. பூபானிக் (Bubonic), நிமோனிக் (Pneumonic), செப்டிசெமிக் (Septicaemic) என்பது பிளேக் நோயின் மூன்று வகைகள். முதலாவது ஆபத்து குறைவானதும் அதற்கு அடுத்த இரண்டும் ஆபத்து அதிகமானதும் ஆகும். தற்போது பீத் பகுதியில் பூபானிக்கும் சூரத்தில் நிமோனிக்கும் பாதித்திருக்கின்றன.

வெள்ளம், பூகம்பம் ஏற்படும் நேரங்களில் காட்டெலிகள் குடியிருப்பு பகுதிக்குள் புகுந்து வீட்டெலிகளுக்கு நோய்க்கிருமிகளைத் தருகின்றன. வெள்ளக் காலங்களில் சந்து பொந்துகளில் உள்ள எலிகள் செத்து நீரில் மிதப்பதால் நீர் மூலமும் ஈ மூலமும் நோய்க் கிருமிகள் எளிதாகப் பரவும். தப்தி நதியின் உக்கே அணை நிரம்பி வழிந்து வெள்ளம் சூரத் நகரை தாக்கிய சில வாரங்களுக்குப் பிறகுதான் இங்கு பிளேக் நோய் உருவானது. பீத் மாவட்டம் கடந்த ஆண்டு பூகம்பம் நிகழ்ந்த லத்தூர் - கிலாரி பகுதிகளுக்கு அருகே உள்ளது. பூகம்பத்தின் போது இப்பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டதால் மக்கள் வீடுகளை உணவு தானியக் கிடங்குகளாக மாற்றிவிட்டு வெட்ட வெளியில் கூடாரமிட்டும், வெளியூருக்கு சென்றும் வாழ்ந்தனர். இதனால் வீடுகளில் எலிகளும் எலி உண்ணிகளும் பெருகி பிளேக் நோயை இப்பகுதி மக்களுக்குப் பரப்பியுள்ளன.

ஆனால் தமிழக கிசுகிசு பத்திரிகைகள் (ஜூனியர் விகடன், நக்கீரன்) பிளேக் நோய் வந்தது பாகிஸ்தான் செய்த சதி, இந்தியா மீது தொடுத்திருக்கும் உயிரியல் யுத்தம் (Biological war) என்று சித்தரித்துள்ளன. இது இந்துமத வெறியர்களுக்கு வேண்டுமானால் தீனியாக பயன்படலாம்! 'தேசிய' ஆங்கிலப் பத்திரிக்கை வீக், தனது பாணியில் அமெரிக்கா நடத்திய உயிரியல் யுத்தங்களைச்



படிப்பகம்

www.padippakam.com

சுட்டிக்காட்டி, பிளேக் நோய் அமெரிக்கா நடத்தும் உயிரியல் யுத்தத்திற்கான சோதனை என்று எழுதியுள்ளது. பாகிஸ்தான் செய்ததற்கோ, அமெரிக்கா செய்ததற்கோ இப்பத்திரிகைகள் தகுந்த ஆதாரங்களை முன் வைக்கவில்லை.

அமெரிக்கா விஞ்ஞான - தொழில்நுட்ப சோதனை செய்ததன் காரணமாகவே போபால் விஷ வாயு படுகொலை நிகழ்ந்து ஆயிரக்கணக்கானோர் பலியாகினர். தற்போதுகூட உயிரியல் - தொழில்நுட்ப சோதனைகளுக்காக டில்லியில் பயிர்களை அழிக்கும் பூச்சி வகைகளை அமெரிக்கா உற்பத்தி செய்தது வெளிவந்துள்ளது. அமெரிக்கா பிளேக் நோய் பரப்பும் உயிரியல் யுத்தத்தில்கூட ஈடுபடுவதற்கு வாய்ப்புள்ளது. ஆனால் தற்போது சூரத், பீத் பகுதி பிளேக் பாதிப்பிற்கு அமெரிக்கா காரணம் என்பதற்கு தகுந்த ஆதாரமில்லை.

● ● ●

மஹாராஷ்டிராவில் பூகம்பம் நிகழ்ந்ததும் சுற்று வட்டார பகுதிகளில் பிளேக், காலரா முதலான தொற்று நோய்கள் பரவ வாய்ப்புள்ளது என விஞ்ஞானிகள், மருத்துவர்கள் எச்சரித்தனர். மாநில - மத்திய அரசுகளோ அலட்சியப்படுத்தி விட்டன. ஏன் தற்போது பீத் மாவட்டத்தில் பிளேக் நோய் வருவதற்கான அறிகுறிகள் பற்றி தகவல் முன்கூட்டியே கிடைத்தும் அதிகார வர்க்கமும் அரசும் அலட்சியப்படுத்தி தாமதமாகவே நடவடிக்கையில் இறங்கியன. பீத் மாவட்டத்தில் மாமலா கிராமத் தலைவர், ஊரில் எலிகளும், ஈக்களும் பெருகி விட்டதைப் பற்றி அருகிலுள்ள அரசு மருத்துவ அதிகாரியிடம் சென்று ஆகஸ்ட் 5-ந் தேதியே முறையிட்டார். அதற்குப் பின்னும் எந்த நடவடிக்கையும் இல்லாததால் ஆகஸ்ட் 22-ந் தேதி அபிமன்யு அர்ஜுன் சாப்ளே என்பவருக்கு பிளேக் நோய் வந்து பிறகு பலருக்கும் பரவியது. சில நாட்கள் கழித்து இது பிளேக் நோயாக இருக்கும் என்று சந்தேகப்பட்டு கிராமத்தில் மருந்தடிப்பது, எலி ஒழிப்பது போன்ற நடவடிக்கைகளை மெல்லத் தொடங்கியது, அரசு. சூரத்தில் பிளேக் நோய் பாதித்து வெளிவந்து பரபரப்பான பிறகே பீத் மாவட்டத்தின் பிளேக் நோயும் வெளியுலகுக்குத் தெரியவந்தது. சூரத்திலும் வெள்ளத்தால் விலங்குகள் செத்து மிதந்து கொண்டிருந்ததை அரசு அப்புறப்படுத்தாததால்தான் பிளேக் நோய் இங்கு உருவானது. பிளேக் கண்டறியப்பட்டு பகிரங்கமான பின்னரே தடுப்பு நடவடிக்கைகளை ஓரளவுக்கு முடுக்கிவிட்டார்கள், ஆட்சியாளர்கள்.

தும்பை விட்டு வாலை பிடிக்கிற கதை கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அதைத்தான் செய்து கொண்டிருக்கின்றன மத்திய - மாநில அரசுகள். பிளேக் நோய் அறிகுறிகள் அறிந்தும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்வதில் மட்டுமல்ல பிளேக் நோய் வந்தபின்னும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளிலும் வாலைத்தான் பிடித்துத் தொங்குகிறார்கள், ஆட்சியாளர்கள். நோய் பாதித்தது அறிந்ததும் சூரத் நகரை முற்றுகையிட்டு பிறபகுதி தொடர்புகளைத் துண்டித்தும் நகரவாசிகளை வெளியேறவிடாமல் தடுத்தும் நோய் பாதித்தவர்கள், பாதிக்காதவர்களை தனித்தனியே பிரித்து உரிய சிகிச்சை முறைகளை, பிற தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டும். இதை விடுத்து நகரவாசிகளை பல பகுதிகளுக்கு வெளியேற அனுமதித்து விட்டு பிற மாநில, மாவட்ட நகரங்களில் எல்லாம் நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு அக்கறை செலுத்துவதுபோல் நடிக்கிறார்கள், ஆட்சியாளர்கள்.

ஆனால் இங்கு இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும். நகரை முற்றுகையிட்டு சூரத் மக்களை வெளியேறவிடாமல் தடுப்பு நடவடிக்கையை இக்கேடு கெட்ட அரசு மேற்கொண்டிருக்குமானால் சாவு எண்ணிக்கை அதிகமாகவே இருந்திருக்கும். நோய் வராதவர்களுக்கும் தொற்றி நகரில் அநேகம் பேர் மாண்டிருப்பார்கள். ஏனெனில் சூரத்தில் அரசு எடுக்கும் நோய் தடுப்பு நடவடிக்கை அந்த லட்சணத்தில் இருக்கிறது.

தனியார் மருத்துவர்கள் அனைவரும் சூரத்தைவிட்டு வெளியேறிவிட்ட நிலையில் நோய் பாதித்தவர்கள் சிகிச்சை பெறுவதற்கும், நோய் பாதிக்காதவர்கள் தடுப்பு சிகிச்சை பெறுவதற்கும் பாழாய்ப் போன அரசு மருத்துவமனைதான் கதி. அவசரகால நடவடிக்கை எடுத்தும்கூட அரசு மருத்துவமனைகளில் மருந்து, மருத்துவர், ஊழியர், மருத்துவக் கருவிகள் எதுவும் பற்றாக்குறை நிலைதான். சிகிச்சைக்காக வரிசையில் மணிக்கணக்கில் காத்து கிடக்கிறார்கள். மருத்துவமனைகளில் இடமில்லாமல் அலைகழிக்கப்படுகிறார்கள். கொந்தளித்துப் போன மக்கள் பூட்டிக் கிடக்கும் தனியார் மருத்துவமனைகளை தாக்கி நொறுக்கினர். தனியார் மருந்து கம்பெனிகளும் வியாபாரிகளும் ஸ்ட்ரெப்டோமைசின், டெட்ராசைக்ளின் முதலிய பிளேக் நோய் தடுப்பு மாத்திரைகளை பதுக்கி தட்டுப்பாட்டை உருவாக்கி, விலையேற்றி கொள்ளையடிப்பதை அரசு வேடிக்கை பார்க்கிறது. 10 ரூபாய் மருந்து 80 ரூபாய் என பல மடங்கு விலை உயர்ந்துள்ளது. தனியார் பேருந்துகளின் கட்டணம், "மினரல் வாட்டர்" என பல விலை கூடியுள்ளன.

மேலும் எலிகளை வேட்டையாடுவது, கொசு - ஈ மருந்தடிப்பது, குப்பை - சாக்கடைகளை சுத்தம் செய்வது போன்ற பணிகள் தற்போது சிறப்பு கவனம் செலுத்தப்பட்டும்கூட அரைகுறையாகவே, ஒரு சில பகுதிகளிலேயே நடக்கின்றன. ஒரு நாளைக்கு சூரத் நகரில் குப்பை 1000 டன் குவிகிறது; இதில் 500 டன் குப்பைகள்தான் நகராட்சியால் அப்புறப்படுத்தப்படுகிறது. இப்படியே பல வருடங்களாக சேர்ந்த குப்பைகள் - சாக்கடைகளை தற்போது சில நாட்களில் அரசால் அகற்றிவிட முடியுமா என்ன? சென்னை நகரின் கூவத்தைப் போல சூரத்திலும் பல சாக்கடை ஆறுகள் ஓடுகின்றன. சூரத் நகரின் மக்களில் 28 சதவிகிதம் பேர் இந்த சாக்கடையோர "சேரி"களில் தான் வாழ்கிறார்கள். சூரத் நகராட்சித் தலைமையில் இருந்த பாரதிய ஜனதா கட்சிக்கு எதிராக தற்போது மக்கள் கொதிப்படைந்து தட்டிக் கேட்கவே கண் துடைப்புக்காக ஏ.பி.வி.பி. போன்ற மாணவர் அமைப்புகளில் சிலரை வைத்து குப்பை அகற்றும் பணி மேற்கொள்ளப்படுகிறது. தன்னார்வ குழுக்களிலிருந்து பிற சேவை நிறுவனங்கள் எதுவும் இப்பணிக்கு முன்வராமல் தலைம



பிளேக் தடுப்பு மாத்திரைக்காக பம்பாயில் நிற்கும் வரிசை



படிப்பகம்

www.padippakam.com

றைவாகிவிட்டன. இந்நிலையில் துப்புரவு தொழிலாளர்களும் அரசு மருத்துவமனை கீழ்நிலை ஊழியர்களும்தான் மருந்தடிப்பது - சுத்தப்படுத்துவது, இறந்தவர்களை அப்புறப்படுத்துவது, நோய் பாதித்தவர்களின் எச்சில் - வாந்திகளை சுத்தம் செய்வது போன்ற பணிகளை துணிந்து செய்து நகர மக்களுக்கு நம்பிக் கையளிக்கிறார்கள். இத்தனைக்கும் பிளேக் நோய் தடுப்பு ஊசி போன்ற எந்த வசதிகளும் இவர்களுக்கு செய்து தரப்படவில்லை. ஏனெனில் இம்மருந்து அரசிடம் இருப்பு இல்லை; தயாரிக்கவும் கூடுதல் செலவாகும் என்பதால் அரசு மெத்தனமாகவே நடந்து கொள்கிறது.

● ● ●

தொற்று நோய்கள் அனைத்தையும் குறிப்பாக பிளேக், காலரா, மலேரியா, மூளைக்காய்ச்சல் போன்றவற்றை முற்றிலும் ஒழித்து விட்டதாக 1960-களிலேயே அரசு கூச்சல் போட்டது. ஆனால் இந்நோய்கள் கட்டுபடுத்தக்கூடபடவில்லை; மீண்டும் மீண்டும் தாக்கி பல உயிர்களை கொண்டு செல்கின்றன. லட்சக்கணக்கான கிராமங்கள் சிறிய மருத்துவமனையும் இல்லாமல் இருப்பதால் கிராமவாசிகள் என்ன நோய் வந்து இறக்கிறார்கள் என்பதும் தெரிவதில்லை. ஏழரைநாட்டு நோய், கொள்ளை நோய், வெள்ள நோய், வயக்காட்டு காய்ச்சல் முதலியன பல பெயர்களில் கிராமத்து மக்கள் குறிப்பிடுவனவற்றில் பிளேக் போன்ற கொடிய நோய்களும் வெளித் தெரியாமல் போய்விடுகின்றன.

கிராமத்திலும் சரி, நகரத்திலும் சரி சாதாரண மக்கள் எலிகளோடு போராடித்தான் வாழ்கிறார்கள். நகரின் சந்து பொந்து இடுக்குகளில், சாக்கடை குழாய்களில், குப்பை மேடுகளில் மக்கள் எலிகளோடு ''கூட்டுக் குடித்தனம்'' நடத்துகிறார்கள். சென்னை, பம்பாய், கல்கத்தா, டில்லி, சூரத் முதலிய பெருநகரங்கள் அடுக்குமாடி கட்டிடங்களுக்கு அக்கம் பக்கமாக மண்டிக் கிடக்கும் 'சேரி'களிலும் இடமின்றி சாலையோரங்களிலும் வழிகிறது மக்கள் நெரிசல். சூரத், துணியாலைக்கும் வைரத்தொழிலுக்கும் பெயர் பெற்ற நகரம் மட்டுமல்ல பம்பாய், கல்கத்தாவிற்கு அடுத்ததாக 'சேரி'கள் நிறைந்த, குப்பைகள் குவிந்த சாக்கடை ஆறுகள் நிரம்பிய நகரமும் கூட. நகரங்களில் எலி வேட்டை, கொசு மருந்தடிப்பது போன்ற அரசு நடவடிக்கைகள் மேட்டுக் குடியினர், நடுத்தர வர்க்கத்தினர் குடியிருப்பு பகுதிகளில்தான் மேற்கொள்ளப்படுகின்றனவே ஒழிய ஒதுக்குப்புறத்தில் வாழும் 'சேரி' மக்களை தொடுவதில்லை.

பிரச்சினை எழும் நேரத்தில் மட்டும் அரசு சில கண்துடைப்பு நடவடிக்கைகளை செயவதோடு சரி. தொற்றுநோய் ஒழிப்புக்காக பல்வேறு ஆராய்ச்சிக் கமிட்டியிலிருந்து தடுப்பு கமிட்டிகள் வரை நியமித்தும் கோடிக்கணக்கில் பணத்தைக் கொட்டியும் மாற்றம் ஒன்று இல்லை. பம்பாயில் எலிவேட்டைக் கென்று தனித் துறை உருவாக்கி பொது மக்களிலிருந்து உதவிக்கு ஆட்கள் எடுத்தும் ஒரு நாளைக்கு இவ்வளவு எலிகள் என்று கொல்லவேண்டும் என்று திட்டமிட்டு செயல்பட்டும் எலிகள் பெருக்கத்தை தடைசெய்ய முடியவில்லை. ஏனெனில் அதன் இனப்பெருக்கத்திற்கான அடிப்படை அந்த அளவிற்கு பம்பாயில் நிறைந்திருக்கிறது. நோய் பரப்பும் கொசு, ஈ, எலி, பூச்சி புழு வகைகள் முற்றிலும் ஒழிப்பது ஆட்சியாளர்களின் நோக்கமாக இருக்குமானால் அதனுடன் தொடர்புடைய அனைத்து மருந்து உற்பத்தியும் மூலதனமிட்டவர்களின் கொள்ளையும் பாதிக்கப்படும். எனவே அவர்களின் பங்காளிகள் நிரந்தரத் தீர்வைப் பற்றி நினைத்துக்கூட பார்க்கமாட்டார்கள். உழைத்துக் கொட்டுவதற்கு, ஏறி சவாரி செய்வதற்கு ஆட்கள் இல்லாமல் போய்விடக் கூடாதே என்ற நோக்கத்தில் தான் சாதாரண மக்கள் நலத்தில் - வாழ்வில் அக்கறை காட்டுகிறது ஆளுங்கும்பல் .

நோய் பரப்பும் பூச்சிகள், விலங்குகள் ஒழிக்கப்படுவதால் மட்டுமல்ல சுற்றுப்புற சுகாதாரம் பேணப்பட வேண்டும்; உடல் ஆரோக்கியத்திற்கு நல்ல ஊட்டச் சத்து வேண்டும்; அப்பொழுதுதான் தொற்று நோய்களின் அடிப்படை நீங்கும். ஆனால் பணத்திற்காக வெளிநாடுகளிலிருந்து ஆலை மற்றும் அணு உலைக் கழிவுகளை இறக்குமதி செய்து இந்தியாவில் கொட்டி வைக்கிற இக்கேடுகெட்ட ஆட்சியாளர்களா உள்நாட்டில் சுகாதாரத்தைப் பேணப் போகிறார்கள்? இவர்கள் வயக்காட்டிலும் குடியிருப்பு பகுதிகளிலும் எலிகளை ஒழிப்பது இருக்கட்டும், நோய்க்கு சிகிச்சை தருகிற அரசு மருத்துவமனைகளில் உள்ள எலிகளையும், சுகாதாரக் கேட்டையும் ஒழிப்பது யார்? பாதி நோயாளியை முழு நோயாளிக்குகிற வேலையைத்தான் அரசு மருத்துவமனைகள் செய்து கொண்டிருக்கின்றன. அரசு, அடிப்படை மருந்து உற்பத்தியை நிறுத்தி, தனியாருக்கு தாரை வார்த்து விட்ட நிலையில் அரசு மருத்துவமனைகளில் கட்டண முறைகளை புகுத்துகிற நிலையில், டங்கல்-காட் ஒப்பந்தத்தின் மூலம் நமது நாட்டு பராரம்பரிய மருந்துப் பொருட்கள் பறியோய் காசாக்கப்படுகிற நிலையில், சாதாரண மக்களுக்கு நோய் வந்தால் உயிர் காப்பாற்றிக் கொள்வதே பெரும்பாடாகிவிட்டது.

நோய் எதிர்ப்பு சக்திக்கு மூலாதாரமான ஊட்டச்சத்து இல்லாமல் பெரியவர்கள் முதல் குழந்தைகள் வரை நோஞ்சான்களாக உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருப்பது கிராமங்கள் தோறும் அதிகரிக்கும் ஒன்றாகிவிட்டது. ஆந்திரா, திரிபுரா, தமிழ்நாடு, பீகார், ஒரிசா முதலான மாநிலங்களில் நெசவாளர்கள், பழங்குடியினர், விவசாயிகள், தாழ்த்தப்பட்ட மக்கள், உதிரி தொழிலாளர்கள் குடும்பம் குடும்பமாக பட்டினிச்சாவிற்கு இரையாவது நிகழ்கிறது. அரசின் நல்வாழ்வுத் திட்டங்கள் எதுவும் இவர்களுக்கு வாழ்வளிக்கவில்லை; பல்வேறு திட்டங்கள் மூலம் தரகு முதலாளிகளுக்கும் பணணையார்களுக்கும் அரசு நிதியை மடை திறந்து விடுவதால் இவர்களின் வாழ்வு பறிபோகிறது. பட்டினியால் செத்தாலும் பிளேக் நோயில் செத்தாலும் சிறிதுதான் அசைந்து கொடுத்து கருணை நடவடிக்கை எடுக்கின்றன, ஆளும் வர்க்கங்கள். உழைக்கும் மக்களின் உயிரை இறகை விட லேசானதாக எடைபோடுகின்றன. இல்லை, மக்களின் உயிர் மலையை விட கனமானது. ● ராசு



டில்லி - ஜி.பி.பந்த் மருத்துவமனை: மனிதர்களுக்கு மட்டுமல்ல நோய்க்கும் நுழைவாயில்



படிப்பகம்

www.padippakam.com

# ஏழைநாடுகளின் வளர்ச்சிக்கு மக்கள் தொகையல்ல அந்நிய கொள்ளையே தடை

ஐ.நா. மன்றம் ''மக்கள் தொகை மற்றும் வளர்ச்சி பற்றிய சர்வதேச மாநாடு'' ஒன்றினை எகிப்து நாட்டின் தலைநகர் கெய்ரோவில் கடந்த செப்டம்பர் மாதம் 5-ந் தேதி தொடங்கி 13-ந் தேதி முடிய நடத்தி முடித்தது. பல கோடிக் கணக்கான ரூபாய் செலவில் 9 நாட்களாக நடந்த இம்மாநாட்டில், 182 நாடுகளைச் சேர்ந்த ஆட்சியாளர்கள், அதிகாரிகள், தன்னார்வ குழுக்கள் மற்றும் பெண்ணுரிமை அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பதினைந்தாயிரத்துக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். 567 கோடியாக உள்ள தற்பொழுதைய உலகின் மொத்த மக்கட் தொகை 2015-ம் ஆண்டு வாக்கில் 792 கோடியாக உயர்ந்து விடும்; அதனை இம்மாநாட்டில் முடிவாக எடுக்கப்படும் செயல் திட்டங்களின் மூலம் 750 கோடிக்கும் கீழாகக் கட்டுப்படுத்துவதும், அதற்காக ''வறுமை ஒழிப்பு, பெண்ணுரிமை, பெண் கல்வி, ஆண் - பெண் சமத்துவம், பாலியல் கல்வி, மகப்பேறு நல உரிமையினை பெண்களுக்கு வழங்குதல், தேசிய மற்றும் சர்வதேசிய ரீதியில் மக்கள் புலம் பெயர்தல், நிதி ஆதாரங்கள்'' போன்ற விசயங்களில் மாநாட்டுப் பிரதிநிதிகளின் ஒருமித்த கருத்துக்களின் அடிப்படையில் ஒரு செயல் திட்டத்தை வகுத்துக் கொள்வதும் இம்மாநாட்டின் முக்கிய நோக்கங்களாக இருந்தன.

மேற்கத்திய ஏகாதிபத்தியவாதிகளும், ஐ.நா. மன்றமும் மற்றும் இவர்களது எடுபிடி தேசிய அரசாங்கங்களும் கூச்சல் போடுமளவிற்கு மக்கள் தொகை பெருக்கம்தான் உலகின் பெருவாரியான மக்கள் வறுமையில் வாடுவதற்கு முக்கிய காரணமா? மேலும் இவர்கள் டாம்பீகமாகப் பட்டியலிட்டிருக்கும் தலைப்புகளையும் அதனடிப்படையில் விவாதித்து எடுத்திருக்கும் முடிவுகளையும் வார்த்தை பிசகாமல் நிறைவேற்றுவார்களா என்பதனையெல்லாம் ஒதுக்கிவிட்டுப் பார்க்கின்றபொழுதும் இம் மாநாடு உலக மக்களின் இரண்டு முக்கிய விரோதிகளை மீண்டும் பளிச்செனப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறது.

இவர்களுள் ஒருவர் நாமெல்லாம் அறிந்த அமெரிக்காவும் பிற ஏகாதிபத்தியவாதிகளும்; மற்றொருவரோ வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் வீசியெறியப்பட்ட கத்தோலிக்க மத பீடம். இதோடு இப்பிரச்னையை ஒட்டி கத்தோலிக்க மத குருமார்கள், முஸ்லீம் மதப் பழமைவாதிகளுடன் 'புனிதக்' கூட்டொன்றையும் ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள். ஏகாதிபத்தியவாதிகள், ''உலக முன்னேற்றத்துக்குத் தடையாக மூன்றாம் உலக நாட்டு மக்கள் வதவதவெனப் பிள்ளைகளைப் பெற்றுத் தள்ளுகிறார்கள்'' எனக் குற்றஞ் சாட்டுகிறார்கள். மதப் பிற்போக்குவாதிகளோ, பெண்களுக்கு அளிக்கப்படும் சில உரிமைகள், தனது அடிப்படைகளுள் ஒன்றாக இருக்கும் ஆணாதிக்க குடும்ப நிறுவனத்தைக் கேள்விக்குள்ளாக்கும் என்பதால், அவ்வுரிமைகளை ''மேற்கத்திய சீரழிவுக் கலாச்சாரம்'' என முத்திரை குத்தித் தங்களின் கோர முகத்தைக் காட்டி வருகிறார்கள்.

### மதப்பழமைவாதிகளின் வெற்றுக் கூச்சல்

மக்கள் தொகை மாநாடு கெய்ரோவில் நடைபெறும் முன்பே, இம்மாநாட்டிற்காக நடந்த தயாரிப்புக் கூட்டங்களில், ''குடும்பக் கட்டுப்பாடு, மகப்பேறு உரிமை (Reproductive rights) கருக்கலைப்பு, பாதுகாப்பான தாய்மை'' போன்ற விசயங்களில் உறுப்பு நாடுகளிடையே கருத்தொற்றுமை ஏற்படவில்லை. போப்பாண்டவர் ஜான்பால் தலைமையிலான கத்தோலிக்க மதபீடம், பெண்களை மையப்படுத்தும் இப்பிரச்னைகளை, ''ஓரினச் சேர்க்கை, வரைமுறையற்ற பாலுறவு'' எனச் சித்தரித்தது. தனக்குப் பின்னால் கத்தோலிக்க மதத்தினர் பெரும்பான்மையாக வாழும் சில இலத்தீன் அமெரிக்க நாடுகளையும் அணி சேர்த்துக் கொண்டது. இஸ்லாமிய மதத் தீவிரவாதிகளோ ''தாராள உடலுறவைக் கொண்டு வரும் சாத்தானின் உலகம்; மத நன்னெறிகள் நிர்மூலமாகும்'' எனப் பயமுறுத்தத் தொடங்கினர்.

போப்பாண்டவர் ஜான் பால் இன்னும் ஒருபடி மேலே சென்று, ''போர், அதிகரித்து வரும் இராணுவ செலவுகள், செல்வம் ஒருவரிடம் குவிவது, வெளிநாட்டு கடன் சுமை போன்றவைதான் வறுமைக்குக் காரணம்'' என்றதோடு, ''ஐ.நா.வைக் கைப்பாவையாகக் கொண்டு அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் தனது தனிநபர் மற்றும் களி வெறியாட்ட கலாச்சாரத்தை உலகமெங்கும் திணிக்கப் பார்க்கிறது'' எனக் கண்ணாடி வீட்டினுள் இருந்து கொண்டு கல்லெறிந்த கதையாக வீரவசனம் பேசினார்.

எகிப்து நாட்டில் இயங்கும் முஸ்லீம் தீவிரவாதக் குழுக்கள் ''மாநாட்டில் கலந்து கொள்ள வரும் வெளிநாட்டினரைக் கொன்றொழித்து மக்கட் தொகையைக் கட்டுப்படுத்தப் போவதாக'' அறிவித்தன. வங்காளதேச பிரதமர் கலிதா ஜியா தனது நாட்டின் பழமைவாதிகளின் மிரட்டலுக்கு அடி பணிந்து சில்லறை காரணங்களைக் கூறி மாநாட்டுக்கு வர முடியாது என அறிக்கை விடுத்தார். ஈராக், சௌதி அரேபியா, சூடான், லெபனான் ஆகிய நாடுகள் ஷரியத்துக்குப் புறம்பாக இருப்பதாகக் கூறி மாநாட்டைப் புறக்கணித்தன. மாநாட்டில் கலந்து கொண்ட பாகிஸ்தான், எகிப்து, ஈரான், லிபியா நாட்டுப் பிரதிநிதிகள், ''ஷரியத்துக்கு எதிரானதை நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம்'' எனப் பழமைவாதிகளுக்கு உறுதியளித்தனர்.

மாநாட்டின் இறுதிநாள் வரையிலும் கத்தோலிக்க மதபீடமும் முஸ்லீம் பழமைவாதத்திற்கு அடிபணிந்த நாடுகளும் பெண்களின் உரிமையினை மையப்படுத்தும் பிரச்சனைகளில் தங்களின் பிற்போக்குப் பார்வையை விட்டுக் கொடுத்துவிடவில்லை. ''இறைவன் கொடுப்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்'' எனப் பெண்களுக்கு அறிவுரை செய்தனர். நவீன விஞ்ஞான வசதிகளோடு வாழ்ந்து வரும் போப் ஜான்பால், ''கட்டுப்பாடாக வாழ்ந்

மக்கள் தொகை மற்றும் வளர்ச்சி பற்றிய சர்வதேச மாநாடு

**ICPD '94**

> உலகின் செல்வவளத்தில் முக்கால் பங்குக்கு மேல் தட்டிப் பறித்துக் கொள்ளும் ஏகாதிபத்திய நாடுகள், வறுமைக்குக் காரணம் மூன்றாம் உலகின் மக்கட் பெருக்கம்தான் எனப் பழிபோட்டு தப்பிக்கப் பார்க்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

தால் கருத்தடையும் கருக்கலைப்பும் தேவையில்லை'' எனப் போதித்தார். இறுதியாக ஏகாதிபத்தியவாதிகள் தங்களின் அரசியல் நலன் கருதி பழமைவாதிகளோடு சமரசம் செய்து கொண்டனர்.

இதன்படி மாநாட்டின் இறுதி வரையில் ''சட்டபூர்வமான கருக்கலைப்பு'' (Legal Abortion) என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''சட்டத்திற்கு எதிரானதல்ல (not against the law) என்ற சொற்றொடரும், பருவ வயது வந்தவர்களுக்கு பாலியல் கல்வி அளிப்பதில் பெற்றோரையும் ஈடுபடுத்த வேண்டும் என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவை போல், பெண்களுக்கான மகப்பேறு உரிமை (Reproductive rights) பாலியல் உரிமை (Sexual rights) குடும்ப நிறுவனம் போன்ற விசயங்களிலும் மதப் பழமைவாதிகளின் கருத்துக்கள் ஏற்கப்பட்டன. இச் சமரசம் மதப் பிற்போக்காளர்களுக்குக் கிடைத்த வெற்றியாகும். அதேசமயம், பெண்கள் பாதிரிமார்களாவதைத் தடுத்து வரும் கத்தோலிக்க மத குருமார்கள் பெண்களுக்கு அதிகாரம் வழங்க வேண்டும் என முழங்குவதும், தங்களது வாடிகன் அரசில் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் குடியுரிமையை மறுத்து வருபவர்கள், அவர்களின் நலன் பற்றி ஒப்பாரி வைப்பதும் தான் இதில் மிகவும் நகைக்கத்தக்கதாகும். ஆனாலும் பெண்ணுரிமை அமைப்புகள், ''இனி யாரும், இங்கே விவாதிக்கப்பட்ட விசயங்களைத் தவிர்த்து விட்டு பெண்களின் நலன் பற்றி பேச முடியாது என்ற நிலை இம் மாநாட்டின் பின் உருவாகியுள்ளது'' எனச் சுட்டிக் காட்டுகின்றனர்.



கெய்ரோ மாநாட்டில் பெனாசிர் புட்டோ; மாநாட்டு அறிக்கையை எரிக்கும் கத்தோலிக்க மதபீடம்

**ஏகாதிபத்தியங்களின் மோசடித்தனம்**

மக்கள் தொகை அதிகரித்து வருவதைப் பற்றி அந்தந்த நாட்டின் அரசாங்கங்கள் - குறிப்பாக மூன்றாம் உலக நாடுகள் எடுத்துக் கொள்ளும் அக்கறையைவிட ஏகாதிபத்திய நாடுகள்தான் மிகுந்த கவலை கொள்கின்றன. ''மக்கள் தொகை அதிகரிப்புக்கு ஏற்ப ஏகாதிபத்திய நாடுகள் தங்களின் உதவித் தொகையை அதிகரிக்க வேண்டியிருக்கும்; இதோடு ஏற்கனவே நீடித்து வரும் வறுமையும் வேலை வாய்ப்பின்மையும் மக்கள் தொகை அதிகரிப்பினால் மேலும் ஆழமடைந்து ஏகாதிபத்தியங்களின் அவர்களது எடுபிடிகளின் சுரண்டலை உணர வைத்து சமூகக் கொந்தளிப்புகளை ஏற்படுத்தும்'' என்பவையே ஏகாதிபத்தியங்கள் இப்பிரச்சனையைக் கண்டு நடுங்கிப்போய் ஊதிப் பெருக்குவதற்கான காரணங்கள்.

மாநாடு தொடங்கு முன்பேயே மேற்குலக அரசுகள் ''அறிவுக்கு ஓர் அறை கூவல்'' என்ற தலைப்பிட்ட அறிக்கையொன்றைத் தயாரித்து நோபல் பரிசு பெற்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த அறிஞர்கள் மத்தியில் விநியோகித்துள்ளனர். இதில் ''இன்னும் 30 ஆண்டுகளில் மக்கள் தொகை 1100 கோடியைத் தொட்டு விடும்; நீர், நிலம், சுற்றுப்புற சூழல் போன்ற இயற்கை வளங்கள் இதனால் பாதிப்படைந்து, மாசுபட்டு அழிந்து வருகிறது. ஆசிய மற்றும் ஆப்பிரிக்க நாடுகள்தான் முதல் குற்றவாளிகள்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே சுருங்கி வரும் இயற்கை வளங்களுக்கு ஏற்ப மக்கள் தொகையினைக் கட்டுப்படுத்த வேண்டும்'' என செருப்புக்கு ஏற்ப பாதத்தை வெட்டச் சொல்லி அறிவுறுத்தினர். அமெரிக்கா நேரடியாகவே இந்தியாவையும் பாகிஸ்தானையும் எச்சரித்துப் பத்திரிகைகளுக்கு செய்தி கொடுத்தது.

ஏகாதிபத்தியங்களின் ஆதாரமற்ற இந்தக் குற்றச்சாட்டை மூன்றாம் உலக நாடுகள் மட்டுமின்றி, மேற்குலகைச் சேர்ந்த சில அறிவுத்துறையினரும் ஏற்றுக் கொள்ளவில்லை. ''கல்வி, வேலை வாய்ப்பு, மருத்துவ வசதி போன்ற அடிப்படை வசதிகளை, குறிப்பாக பெண்களுக்கு ஏற்படுத்தித் தருவதுதான் மிகச்சிறந்த மக்கள் தொகை வளர்ச்சி தடுப்பு முறை'' என அவர்கள் வாதிட்டனர். இதை ஏகாதிபத்தியவாதிகள் ஏற்றுக் கொண்ட போதிலும், 120 பக்கங்கள் கொண்ட விவாதத்திற்கான நகல் வரைவுத் திட்டத்தில், வெறும் ஏழு பக்கங்களே ளர்ச்சி குறித்து ஒதுக்கப்பட்டிருந்தது. இதோடு விவாதத்தின் பொழுது மதப் பிற்போக்காளர்கள் ''கருக்கலைப்பு'' சம்பந்தமாக வெற்றுக் கூச்சல் எழுப்பியது, ''வளர்ச்சி'' குறித்த விவாதத்தை புறந்தள்ளுவதற்கு ஏகாதிபத்திய வாதிகளுக்கு வசதியாய் அமைந்தது.

ஏகாதிபத்திய நாடுகளில் வாழும் 24 சதவீத மேட்டுக் குடியினர், தங்களின் ஆடம்பர நுகர்பொருள் கலாச்சாரத் தேவைகளுக்காக உலகின் மொத்த வளத்தில் 84 சதவீதத்தைத் தட்டிப் பறித்துக் கொள்கிறார்கள். மீதமுள்ள 16 சதவீதம்தான் மூன்றாம் உலக நாடுகளிடையே பங்கிடப்படுகிறது. இதிலும் மிகவும் வறிய நிலையிலுள்ள மூன்றாம் உலக நாடுகளுக்குக் கிடைப்பதென்னவோ வெறும் 1.6 சதவீதம்தான். இப்படி உலகின் செல்வ வளம் மிகவும் பாரபட்சமான முறையில் பங்கீடு செய்யப்பட்டுக் கொள்வதுதான் பல மூன்றாம் உலக நாடுகள் வறுமையின் கோப்பிடியில் சிக்கித் தவிப்பதற்கான மிக முக்கிய காரணம். இதை ஏகாதிபத்தியவாதிகள் விவாதத்திற்கே எடுத்துக் கொள்ளவில்லை. இதைப் போன்றே பெருகி வரும் மூன்றாம் உலக நாடுகளின் கடன் சுமையைக் குறைப்பது பற்றியும் அவர்கள் அக்கறை கொள்ளவில்லை.

இப்படி மூன்றாம் உலக நாடுகளின் மக்கள் தொகை பெருக்கத்திற்குக் காரணமாக அமையும் வறுமை, அறியாமை, வேலைவாய்ப்பின்மை போன்றவை



படிப்பகம்

www.padippakam.com

பற்றி அக்கறை கொள்ளாத ஏகாதிபத்திய உலகம், மூன்றாம் உலக நாடுகளை, ''சர்வதேச நிதி நிறுவனங்கள் தரும் உதவிக்கு ஈடாக சமூக நலத் திட்டங்களுக்குத் தங்களது நாட்டு வரவு - செலவு கணக்கில் 20 சதவீதத் தொகையை ஒதுக்க வேண்டும்'' என அறிவுறுத்தியுள்ளன. புதிய உலக ஒழுங்கமைப்பின் கீழ் சமூக நலத் திட்டங்களுக்கான ஒதுக்கீடைக் குறைத்தால்தான் கடன் தருவோம் என மூன்றாம் உலக நாடுகள் மிரட்டப்படும்பொழுது, விவாதத்தில் முன் மொழியப்பட்ட இத்தீர்மானம் ஏகாதிபத்திய நாடுகளின் மோசடிதனத்தைத்தான் வெளிக்காட்டுவதாக அமைகிறது. மேலும் மக்களின் அவர்களின் குழந்தைகளின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வக்கற்ற இவர்களுக்கு, ''இத்தனைக்கு மேல் பெற்றுக் கொள்ளாதே'' எனச் சொல்வதற்கு என்ன உரிமையும் அருகதையும் உள்ளது?

### பெண்களின் உரிமையும் நமது நிலையும்

மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவது என்ற பிரச்சனை பெண்களுக்கு வழங்க வேண்டிய உரிமைகளோடு நேரிடையாகத் தொடர்பு கொண்ட ஒன்றாகும். அவ்வுரிமைகள் ஆணாதிக்க குடும்ப நிறுவனத்தையும் பாலியல் வேலைப் பிரிவினையையும் - அதாவது பெண்கள் என்றால் பிள்ளை பெறுவது; வளர்ப்பது என்பதுதான் - கேள்விக்கு உள்ளாக்குவதால்தான் மதப் பழமைவாதிகள் ஆத்திரமடைகின்றனர்.



மேலும், அவர்கள் மேலை நாடுகளில் நிலவும் ஓரின உறவு, இளம் வயதிலேயே தவறான வழியில் தாய்மைப் பேறடைவது போன்ற ஏகாதிபத்திய கலாச்சார சீரழிவுகளை முன்னிறுத்தி இவ்வுரிமைகளை எதிர்ப்பதால், ஏகாதிபத்தியவாதிகள் மதப் பழமைவாதிகளின் பிற்போக்குதனத்தை அம்பலப்படுத்தும் தார்மீக உரிமையினை இழந்து போகிறார்கள்.

உலகில் 173 நாடுகளில் கருக்கலைப்பு அனுமதிக்கப்பட்டுள்ள போதிலும், 41 நாடுகளில் மட்டும்தான் நேரடியாக கருக்கலைப்பு சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது. பிற நாடுகளில் எல்லாம் வெவ்வேறான மருத்துவ மற்றும் உடல்கூறு காரணங்களின் கீழ்தான் அனுமதிக்கப்படுகிறது. முன்னேறிய நாடாகக் கருதப்படும் அமெரிக்காவிலோ ''கருக்கலைப்பு அனுமதிக்கப்படக் கூடாது'' என்போருக்கு அரசியல் காரணங்களுக்காக குடியரசுக் கட்சி ஆதரவளிக்கிறது. போலந்திலோ கற்பழிக்கப்பட்டு கற்பமானவர்கள்கூட கருவைக் கலைத்துக் கொள்ள இயலாது.

கருத்தடைச் சாதனங்கள் விற்பது என்ற பெயரில் தங்கள் நாடுகளில் பழுதாகிப்போன மருந்துப் பொருட்களை மூன்றாம் உலகில் கொண்டு வந்து கொட்டுவதுடன், அந்நாட்டுப் பெண்களை சோதனைச்சாலை மிருகங்களாகவும் பயன்படுத்துகின்றன ஏகாதிபத்தியங்கள்.

> ஏகாதிபத்தியவாதிகள் தங்களின் அரசியல் நலன் கருதி பெண்களுக்கான மகப்பேறு உரிமை, குடும்ப நிறுவனம் போன்ற விசயங்களில் மதப்பழமைவாதிகளோடு சமரசம் செய்து கொண்டனர்.

மேலும், ''கருவைச் சுமப்பதா அல்லது அழிப்பதா?'' என்பதைத் தீர்மானிக்கும் உரிமை இன்று பெண்களிடம் இல்லை. நடைமுறையில் கணவனோ அல்லது குடும்பத்தின் மூத்த ஆண்மகனோதான் அதைத் தீர்மானிக்கிறான். பெண்கள் படிப்பதையும் வேலைக்குச் செல்வதையும் விபச்சாரத்திற்கான அழைப்பாகச் சித்தரிக்கிறார்கள், முஸ்லீம் மதப் பழமைவாதிகள். அனைத்து மட்டத்திலும் பெண்களுக்கு அதிகாரம் என்ற மாநாட்டின் தீர்மானம் இன்று உலகில் நில்வும் பல்வேறு வகையான சமூக அமைப்புகளின் — ஏகாதிபத்திய, முதலாளித்துவ, அரைநிலவுடமை - அரைக் காலனிய — கீழ் நடைமுறை சாத்தியமானதும் அல்ல.

முதலாளித்துவவாதிகளைப் பொருத்தவரை மக்கள் என்போர் எண்ணிக்கையின் அடிப்படையில் அமைந்த கூட்டமாகும். தொழில் வல்லுநர்கள் ஓரளவானோர், அரைகுறையாகப் பயிற்றுவிக்கப்பட்ட பாட்டாளிகள் போதுமானோர், தங்களின் திடீர் தேவைக்கேற்ற வேலையற்றோர் பட்டாளம் என்றளவில் மக்கள் தொகை இருந்தால் போதுமானது. அதற்கு மேலே செல்வது அவர்களின் சுரண்டல் நலனுக்கு ஏற்றதல்ல. ஆனால் கம்யூனிஸ்டுகளைப் பொருத்தவரை மக்கள் விலை மதிப்பிட முடியாதவர்கள். காரணம், எந்தவொரு நாட்டின் வளர்ச்சிக்கோ அல்லது வறுமைக்கோ அந்நாட்டின் மக்கள் தொகை காரணமானதல்ல. அந்நாட்டில் நிலவும் உற்பத்திமுறைதான் இதன் தீர்மானகரமான காரணியாகும். இவ்வுற்பத்திமுறையின் இரு அங்கங்களுள் ஒன்றான உற்பத்தி சக்திகளில் முக்கியமானதொரு பாத்திரமாற்றுபவர்கள் மக்கள். எனவே உழைக்கக்கூடிய திறனுள்ள அனைவரையும் உற்பத்தியில் ஈடுபடுத்தி அந்நாட்டின் மக்கள் அனைவருக்கும் சிறந்ததொரு வாழ்க்கையை அளிக்க முடியும் என நாம் கருதுகிறோம்.

மேலும் கம்யூனிஸ்டுகளின் தலைமையின் கீழ் அமையும் சமுதாயங்களில் விவசாயமும் தொழிற்துறையும் சமூகமயமாக்கப்படும். அவ்விரண்டையும் திட்டமிட்டு உற்பத்தியை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த இரு பாலருக்கும் உண்டு. அதைப் போன்றே நாட்டை நிர்வகித்துச் செல்லும் அரசியல் அரங்கிலும். வெறும் பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காகவெனச் சீரழிந்து போயுள்ள இன்றைய குடும்பங்கள் மாற்றியமைக்கப்படும். கூட்டுப் பொறுப்புடன் அதே சமயத்தில் தம்பதிகளின் தனி உரிமைகள் மீற முடியாதவாறு சனநாயகப்படுத்தப்பட்டிருக்கும். பாட்டாளிகளின் அரசாங்கம் இத்தனை குழந்தைகள்தான் பெற்றுக் கொள்ள வேண்டும் என யாருக்கும் கட்டளையிடாது. மாறாக, சமூகத்தின் தேவைக்கேற்ப தாங்களாகவே குடும்பத்தை வரையறுத்துக் கொள்ளும் உயர்ந்த கலாச்சாரத்தை அவர்கள் கைக்கொண்டிருப்பார்கள்!

● — ரஹீம்



படிப்பகம்

www.padippakam.com

# கரூரில் சாதிக்கலவரம் ஆதிக்கசக்திகள் ஆதாயம்

கரூர் வட்டாரத்தில் சாதிக்கலவரம் செப்டம்பர் மாதம் பற்றி எரிந்தது. திருமான் நிலையூர், வெங்கமேடு, வீரராக்கியம் பகுதிகளில் கலவரம் நடந்து பொருட்சேதமும் உயர்சேதமும் ஏற்பட்டன. வீரராக்கியம் பகுதியில் தேவேந்திர குல பள்ளர்களின் பெயர் பலகை ஒன்று லாரி இடித்துக் கீழே விழுந்ததை, கவுண்டர்கள்தான் செய்திருக்க வேண்டும் என்று கருதி 400-க்கும் மேற்பட்ட பள்ளர் சமூகத்தினர் திரண்டு 13.9.94 அன்று சாலை மறியல் செய்தனர். பிறகு லாரி இடித்துத் தள்ளிய விவரம் தெரிந்ததும் சம்பந்தப்பட்டவர்கள் பெயர் பலகையைக் கட்டித் தருவதாக ஒப்புக் கொண்டனர்.

ஆனால் கவுண்டர்கள் பெயர்ப்பலகையை இடித்ததாக பரவிய செய்தியை வைத்து பக்கத்து ஊரான திருமான்நிலையூர் மக்களும் சாலை மறியல் செய்தனர். உரிய நடவடிக்கை எடுத்து அவர்களை சமாதானப்படுத்தாமல் சாதிவெறி பிடித்த, ஆர்.எஸ்.எஸ்-ஐச் சேர்ந்த ராமச்சந்திரன் (எஸ்.ஐ), ராஜமாணிக்கம் (இன்ஸ்பெக்டர்) ஆகியோர் தலைமையிலான போலீசு பட்டாளம் தடியடி நடத்தவே பேருந்து உடைப்பு - தீ வைத்தல் போன்ற சம்பவங்கள் நடந்தன. கவுண்டர்களில் சாதிவெறிபிடித்த நபர்களும் எதிர் தாக்குதலில் ஈடுபடவே 13,14 ஆகிய இருநாட்களும் சுற்றுவட்டாரமே செயலிழந்து போனது. வெங்கமேடு பகுதி கடைகள் சூறையாடப்பட்டன.

இச்சம்பவம் தொடர்பாக 80 பேரை போலீசு கைது செய்து (இதில் தாழ்த்தப்பட்டவர்கள் தான் அதிகம் - 60 பேர்) மத்திய சிறைக்குக் கொண்டு செல்லும் வழியில் பேருந்து விபத்துக்குள்ளாகி தாழ்த்தப்பட்டவர்கள் 2 பேர் இறந்தனர். பலர் படுகாயமடைந்தனர். இதைச் சாக்கிட்டும் மாயனூர் பகுதி பள்ளர் சமூகத்தினர் சிலர் வன்முறையில் ஈடுபட்டனர். கடைகளைத் தாக்கினர். 2 பேர் இறந்த செய்தி பரவியதும் கரூர் தாலூகா முழுவதும் ஆங்காங்கே தாக்குதல்கள், கரும்புத் தோட்டம் - வீடுகள் - பேருந்துகள் எரித்த சம்பவங்கள் நடந்தன. கவுண்டர்களும் பதில் தாக்குதலில் இறங்கவே ஒருவர் கலவரத்தில் கொல்லப்பட்டார்.

கலவரம் அடங்கிய உடன், பகுதி அமைச்சர் எம். சின்னச்சாமி தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் துக்கம் விசாரிக்கச் சென்றார். அம்மக்கள் துடப்பக் கட்டை எடுத்துக் கொண்டு "நாங்கள் பாதிக்கப்பட்ட போதும், எங்களது சேலை உருவப்பட்ட போதும் தடுத்து நிறுத்த வராமல், கலவரத்தைத் தூண்டிவிட்டுச் சென்றாய்; இப்பொழுது ஏன் வருகிறாய்" என்று கேட்டு விரட்டவே பரிவாரங்களுடன் தப்பித்தால் போதும் என ஓடிப்போனார் அமைச்சர்.

இங்கு சாதிக்கலவரம் நிகழ்த்தற்கான அடிப்படையை பல்வேறு சாதிச்சங்கங்கள் மாநாடு, பொதுக்கூட்டம், ஊர்வலம், கொடியேற்று விழா போன்றவை மூலம் உருவாக்கி விட்டன. கடந்த ஜூன் 22-ந் தேதி கொங்கு வேளாளக் கவுண்டர்கள் மாநாடு நடத்தியதைத் தொடர்ந்து வேட்டுவக் கவுண்டர்கள், சோழிய வேளாளர்கள், ஜான்பாண்டியனின் தேவேந்திர குல வேளாளர் சங்கம் ஆகியவையும் இயக்கம் எடுத்தன. ஒருவரையொருவர் தாக்கி சாதிப் பகைமையை விதைத்ததுதான் நடந்தது.

கரூர் வட்டார பகுதிமக்கள் நெசவு, உழவு போன்ற தொழில்களில் ஈடுபடும் சாதாரண உழைக்கும் மக்களே. புதிய பொருளாதாரக் கொள்கை, டங்கல் - துரோக ஒப்பந்தம் மூலம் பாரம்பரிய மிக்க நெசவு, உழவு தொழில்களை நாசமாக்கி நெசவாளர்களும், விவசாயிகளும் வாழ்விழந்து வருவதை இப்பகுதியில் கண்கூடாகப் பார்க்கலாம். இவற்றைப் பற்றியெல்லாம் வாய்திறக்காத சாதி சங்கங்கள் இவற்றிற்குக் காரணகர்த்தாவாக இருக்கும் அரசியல்வாதிகளுடன் கூட்டு சேர்ந்து கொண்டு உழைக்கும் மக்களிடையே சாதிய வெறியை விதைத்து குளிர்காய்கிறார்கள். சாதி வெறி பிடித்த ஆதிக்கசக்திகளை தனிமைப்படுத்த உழைக்கும் மக்கள் ஒன்றிணைந்து போராட வேண்டும்.



## தாழ்த்தப்பட்ட மாணவி மீது சாதிவெறியர்களின் பாய்ச்சல்

மேல் சாதி வெறிபிடித்த கவுண்டர்கள் சிலரால் கரூர், தாந்தோன்றி மலை பகுதியில் வாழும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவி மாணிக்கத்திற்கு நேர்ந்த கொடுமை இது. தாந்தோன்றி மலை அரசு மேல்நிலைப் பள்ளியில் பன்னிரண்டாவது படிக்கும் மாணவி மாணிக்கத்தை வண்டி இழுக்கும் அவரது தந்தையும் (மலைக்கொழுந்து) சத்துணவு ஆயாவாக இருக்கும் அவரது தாயும் வறுமையோடு போராடி படிக்க வைத்துக் கொண்டுள்ளனர். ஜூன் 30-க்குள் பள்ளி சிறப்புக் கட்டணம் கட்டவில்லை என்பதற்காக 1-7-94 அன்று தலைமை ஆசிரியர் ராமசாமி, மாணிக்கத்தை அழைத்து சாதியைச் சொல்லி திட்டியுள்ளார். வகுப்பறையில் மாணவ-மாணவிகள் மத்தியில் அஃறிணையில் திட்டியதோடு "நீ எல்லாம் கல்யாணம் பண்ணி புள்ள பெத்துக்க வேண்டியது தானே, படிப்பு எதுக்கு?" என்றும் கீழ்த்தரமாகத் திட்டியுள்ளார்.

பள்ளி நிர்வாகத்திற்கும் கட்டிடக் குழுவுக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை; இருந்தும் இக்குழுவில் உள்ள பொட்டுக்கடலை ஆர்.தங்கவேலு, காளியப்பனூர் வி.கே. தங்கவேலு ஆகிய கொங்கு வெள்ளாள கவுண்டர்களான சாதி வெறியர்களும் மாணிக்கம் பிரச்சினையில் தலையிட்டனர். இவர்களுடன் நிர்வாகத்திற்கு சாதகமாக உள்ள ஆசிரியர்கள் அறிவழகன், கே.சுப்பிரமணி ஆகிய கவுண்டர்களும் சேர்ந்து கொண்டு மாணவி மாணிக்கத்தை சாதியைச் சொல்லி மிகவும் அசிங்கமாகத் திட்டி இது "பறப்பய பள்ளிக் கூடமில்லை; டி.சி யை வாங்கிக் கொண்டு போ" என விரட்டினர். மாணவி மாணிக்கம் 14.7.94 அன்று கரூர் பகுதி நுகர்வோர் பாதுகாப்பு குழுவிடம் புகார் கொடுக்கவே இக்குழு தலைவர் தலையிட்டு பேசிப்பார்த்தும் பயனில்லாமல் போனது.

இதனால் மாணிக்கம், துணை ஆட்சியாளர் கோபாலகிருஷ்ணன், போலீசு அதிகாரிகள், தீண்டாமை ஒழிப்புப் பிரிவு ஆய்வாளர், கல்வித் துறை அதிகாரிகளுக்கு புகார் மனு அனுப்பினார். ஆனால் சாதிக் கவுண்



படிப்பகம்

www.padippakam.com

டர்கள் அனைவருக்கும் லஞ்சம் கொடுத்து சரிகட்டவே மௌனம் சாதிக்கின்றனர். பகுதி அமைச்சர் எம். சின்னசாமியிடம் நேரில் முறையிட்ட போது சாதி வெறிபிடித்த ஆர். தங்கவேலுவிடம் மனுவைக் கொடுத்து நடவடிக்கை எடுக்கும்படி கைகாட்டினார். மீண்டும் சந்தித்து முறையிட்ட போது சாதிவெறி தலைக்கேற தலைமை ஆசிரியர் பாணியிலேயே மிரட்டினார். நுகர்வோர் குழுவிடம் அதிகாரிகளிடம் முறையிட்டதைக் கேட்டு மிரட்டியதோடு "ஊரைப் பகைத்துக்கிட்டு உன்னால் இருந்துவிட முடியுமா, டி.சி-யில் நடத்தைக் கெட்டவள் என்று எழுதிவிட்டாள் என்ன செய்வாய்?" என்று கேட்டுள்ளார்.

எனவே பள்ளி மாணவர், மாணவிகள் மாணிக்கத்திற்கு ஆதரவாக 20.7.94 அன்று போராட்டம் நடத்தினார்கள். மேலும் அன்று நுகர்வோர் பாதுகாப்புக் குழு மாணிக்கத்திற்கு நீதி கேட்டு தலைமை ஆசிரியர் மீது உயர்நீதி மன்றத்தில் வழக்கு ஒன்றும் தொடுத்தது. இந்தப் போராட்டத்திற்கு எதிராக தலைமை ஆசிரியரும் அவரது சகபாடிகளும் பிற மாணவ மாணவியர்களை நிர்ப்பந்தித்து பேருந்து மறியல் ஒன்றையும் நடத்தினர். தலைமை ஆசிரியரிடம் நியாயம் கேட்கச் சென்ற மாணவர்கள், நுகர்வோர் பாதுகாப்புக் குழு செயலர் மீது போலீசை சாதகமாக்கிக் கொண்டு பல பொய்வழக்குகளைப் போட்டுள்ளனர்.

பின்னர் பகுதி தாசில்தார் பேச்சு வார்தைக்கு என்று இரு தரப்பினரையும் அழைத்து பேசி மாணவி மாணிக்கம் மன்னிப்பு கேட்கவேண்டும் என்று கூறினார். இதை மாணிக்கமும் நுகர்வோர் பாது காப்பு குழுவினரும் ஏற்க மறுத்தனர். பிறகு உதவி ஆட்சியாளர் அலுவலகத்தில் பேச்சு வார்த்தை நடத்த நாள் குறித்தும் பள்ளி நிர்வாகத்தினர் வராததால் நடைபெறவில்லை. உதவி ஆட்சியாளர் பெயரளவிற்கே மாணவி மாணிக்கத்தை பள்ளியில் சேர்த்துக் கொள்ளச் சொன்னார். கல்வித்துறை அதிகாரிகளும் சேர்த்துக் கொள்ள உத்தரவு பிறப்பிப்பதாக ஒப்புக்கு ஒத்துக் கொண்டனர். பள்ளியில் வந்து கேட்டதற்கு எவ்வித உத்தரவும் எங்களுக்கு வரவில்லை என்று கூறி பள்ளியில் சேர்க்க மறுத்துவிட்டனர். இது வரை பட்ட அவமானங்கள், இன்னல்களோடு இன்று மாணிக்கத்தின் படிப்பும் கேள்விக்குறியாகிவிட்டது. கொங்கு வேளாளக் கவுண்டர்களின் சாதி வெறிக்கு சம்மட்டி ஆதாரமாக உள்ளது, இச்சம்பவம். மாணவி மாணிக்கத்திற்கு ஆதரவாக பகுதி புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியும் சுவரொட்டி இயக்கம் எடுத்து வருகிறது.

**உத்தர்கண்ட் விவகாரம்:**

# இட ஒதுக்கீட்டை எதிர்க்கும் மேல்சாதியினர் போராட்டம்

இட ஒதுக்கீடு விவகாரம் மீண்டும் பூதாகரமான பிரச்சினையாக எழுந்து உத்திரப்பிரதேச மாநிலத்தை ரணகளமாக மாற்றியுள்ளது. இட ஒதுக்கீட்டு முடிவை எதிர்த்தும், எட்டு மலை மாவட்டங்களை உள்ளடக்கிய "உத்தர் கண்ட்" தனி மாநிலம் கோரியும் மேல் சாதியினர் போராட்டத்தைத் தீவிரப்படுத்தி வருகின்றனர். போராட்டத்தை ஒடுக்க போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டிலும், மேல் சாதியினர் நடத்தும் எதிர்த்தாக்குதலிலும் இதுவரை 40-க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

உத்திரப் பிதேசத்தில், வடக்கே இமய மலைச்சரிவை ஒட்டியுள்ள இந்த எட்டு மாவட்டங்களிலும் ஏறத்தாழ 80 சதவீதம் பேர் பிரமாணர்கள் மற்றும் மேல் சாதி இந்துக்களாவர்; 15 சதவீதம் பேர் தாழ்த்தப்பட்டவர்; ஏறக்குறைய 3 சதவீதம் பேரே பிற்பட்ட சாதியினர். தாழ்த்தப்பட்டோர் - பிற்பட்டோர் என்ற பெயரில் கூட்டணி அமைத்து ஆட்சிக்கு வந்துள்ள முதல்வர் முலயம் சிங் யாதவ், அண்மையில் தனது மாநிலம் முழுவதுமுள்ள பிற்பட்டோர் அனைவருக்கும் கல்வியிலும் அரசு வேலை வாய்ப்பிலும் 27 சதவீத இட ஒதுக்கீடு அமுலாக்கப்படும் என்று அறிவித்தார். ஏற்கனவே இட ஒதுக்கீடு எதிர்ப்புக் கிளர்ச்சி பற்றி எரிந்த உ.பி.யின் சமவெளிப் பகுதியில் இந்த ஒதுக்கீடு குறித்து இப்போது தீவிர எதிர்ப்பு இல்லை. ஆனால் மேல் சாதியினர் பெரும்பான்மையாக உள்ள மலை மாவட்டங்களில் எதிர்ப்பும் போராட்டமும் பெருகத் தொடங்கியது. ஏனெனில், இப்பகுதியில் 27% இட ஒதுக்கீடு அமுலானால், அரசு வேலை வாய்ப்பை சமவெளிப் பகுதியைச் சேர்ந்த பிற்பட்டோர் கைப்பற்றிக் கொள்வர். இப்பகுதியில் பிற்பட்டோர் 3% ஆக இருக்கையில், அதிகார வர்க்கத்தில் மட்டும் 27% பேர் இருப்பர். இதே போல உயர் கல்விக்கான கல்லூரிகளிலும் பிற்பட்டோருக்கான ஒதுக்கீடு அமுலாகும். இதனால் உயர்கல்வியிலும், அரசு வேலை வாய்ப்பிலும் இது வரை தாம் அனுபவித்து வந்த வாய்ப்புகள் பறி போகும் என்பதால் மேல் சாதியினர் இம் முடிவை எதிர்த்துப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். "உ.பி.யில் நாங்கள் இருந்தால்தானே இட ஒதுக்கீட்டு முடிவை எங்கள் மீது திணிக்க முடியும்? இமயமலைச் சரிவை ஒட்டியுள்ள 8 மாவட்டங்களை உள்ளடக்கிய "உத்தர் கண்ட்" எனும் தனி மாநிலம் எங்களுக்கு வேண்டும்" என்று அவர்கள் போர்க் கொடி தூக்கியுள்ளனர்.

கடந்த செப்டம்பர் முதல் நாளன்று இட ஒதுக்கீட்டு முடிவை எதிர்த்தும், தனி மாநிலம் கோரியும் மலை மாவட்ட மக்கள் ஆர்ப்பாட்டம், பேரணி நடத்திய போது போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 11 பேர் பலியாகினர். அதைத் தொடர்ந்து இப்பிராந்தியம் முழுவதும் போராட்டங்களும் கிளர்ச்சிகளும் பெருகத் தொடங்கின. இப்பிராந்தியம் முழுவதும் அரசு நிர்வாகம் செயலிழந்து கிடப்பதோடு, காலவரையறையற்ற ஊரடங்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டு, போலீசும் துணை ராணுவப் படைகளும் குவிக்கப்பட்டுள்ளன.

உ.பி.யின் மலை மாவட்டங்களில் வளர்ச்சிப் பணிகள் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதை எதிர்த்தும் தனி மாநிலக் கோரிக்கையை முன் வைத்தும் இப்பிராந்திய மக்கள் நீண்ட காலமாகப் போராடி வந்துள்ளனர். ஆயினும் இதர எல்லையோர மாநிலங்களைப் போலவே, இப்பகுதியிலும் உரிய வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளாமல் மத்திய அரசு தொடர்ந்து புறக்கணித்து வருகிறது. அதேசமயம், இம் மக்களின் ஓட்டு வங்கியை இழந்து விடாதிருக்க உ.பி. மாநில சட்ட மன்றத்தில் எல்லா ஓட்டுக் கட்சிகளும் சேர்ந்து தனி மாநிலம் அமைப்பதை ஆதரித்து ஏற்கனவே இரண்டு முறை தீர்மானம் நிறைவேற்றியுள்ளன.

இது ஒரு புறமிருக்க, உ.பி.யில் பாரதீய ஜனதாவின் ஆட்சி அமைந்து விடக் கூடாது என்பதற்காக முலயம் சிங்கின் சமஜ்வாடிக் கட்சி, கன்ஷிராமின் பகுஜன் சமாஜ் கட்சி ஆகியவற்றின் கூட்டணி ஆட்சியை காங்கிரசு, ஜனதா தளம் மற்றும் போலிக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஆதரித்து வந்தன. ஆனால் முலயம் சிங், பிற்பட்டோரின் - குறிப்பாக யாதவ சாதியினரின் - தனிப் பெருந் தலைவராக

**"உத்தர்கண்ட்" பகுதியிலுள்ள பெரும்பான்மையினர் ஒடுக்கப்படும் மலைவாழ் மக்களோ, தேசியஇனச் சிறுபான்மையினரோ அல்ல. அவர்கள் பார்ப்பன்ர்களும் மேல்சர்தியினரும்தான்!**



படிப்பகம்

www.padippakam.com

நடந்து கொள்ள முயற்சிக்கிறார். அதே போல கன்ஷிராம் தாழ்த்தப்பட்டோரின் தலைவராகக் காட்டிக் கொள்ள முயற்சிக் கிறார். அதிகார வர்க்கம் மற்றும் போலீசுத் துறைகளில் இருவருமே தமது கையாட்களை முறைகேடான வழிகளில் திணித்து வருகின்றனர். அரசுப் பதவிகள் - சனமானங்களைப் பகிர்ந்து கொள்வதில் இவ்விரு கட்சிகளுக்குமிடையே ஏற்பட்ட 'லடாய்' காரணமாக ஆட்சி கவிழ்ந்து விடுமோ என்று பலர் பீதியடைந்தனர். பகுஜன் சமாஜ் கட்சி எம். எல்.ஏ.க்கள் சிலரைத் தம் கட்சிக்கு இழுக்க முயன்றார் முலயம் சிங். இதனால் கன்ஷிராமும் அவரது கட்சியின் பொதுச் செயலாளரான மாயாவதியும் கூட்டணியை முறித்துக் கொள்வோம் என்று எச்சரிக்கத் தொடங்கியதும், ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள முலயம் சிங், அவர்களிடம் ''பணிந்து'' போகத் தொடங்கினார். தனது அமைச்சரவையில் கல்வி மந்திரியின் பதவியைப் பறித்து மாயாவதியைச் சமாதானப் படுத்தி ஆபத்திலிருந்து தப்பித்துக் கொண்டார்.

இந்நிலையில் பகுஜன் சமாஜ் கட்சியை வாயடைக்கச் செய்து நெருக்கடியை திசை திருப்பவும், தனது நிலையை பலப்படுத்திக் கொள்ளவும் பிற்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை அமுலாக்க முலயம் சிங் தீர்மானித்தார். இம்முடிவை மேல் சாதியினர் - குறிப்பாக மலை மாவட்டங்களின் உள்ளவர்கள் கடுமையாக எதிர்ப்பார்கள் என்பது அவர் அறியாததல்ல. ஆனாலும், இப் பிராந்திய மக்களின் வாக்குகளைப் பற்றி முலயம் சிங்கும், கன்ஷிராமும் கவலைப்படவில்லை. மலைப்பிராந்தியம் அல்லாத சமவெளிப் பகுதியிலுள்ள பிற்பட்டோர் - தாழ்த்தப்பட்டோரின் வாக்குகளே தமது தேர்தல் வெற்றிக்குப் போதுமானவை என்றே அவர்கள் கருதுகின்றனர். கடந்த தேர்தலிலும் மலை மாவட்டங்களில் இவர்களது கூட்டணிக்கு இரண்டு இடங்கள்தான் கிடைத்துள்ளன. எனவேதான் 'உத்தர் கண்ட்' போராட்டத்தைப் பற்றி கவலைப்படாமல், அரசு எந்திரத்தைக் கொண்டு மிருகத்தனமாக ஒடுக்கி வருகிறது, ஆளும் கூட்டணி. தனி மாநிலக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டியது மத்திய அரசுதான் என்று பொறுப்பை அதன் மீது சுமத்தி விட்டு தப்பித்துக் கொள்கிறது.

'உத்தர்கண்ட்' போராட்டம் தீவிரமடையத் தொடங்கியதும், பள்ளி - கல்லூரிகளை இழுத்து மூடிய முலயம் சிங் அரசு, செப்டம்பர் 13-ம் தேதியன்று மாநிலம் முழுவதும் இட ஒதுக்கீட்டை ஆதரித்து கடையடைப்பு நடத்தியது. சில பகுதிகளில் மேல் சாதியினரும் ஆர்.எஸ்.எஸ். பாரதீய ஜனதா குண்டர்களும் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கத் தொடங்கியதும் சமஜ்வாடி - பகுஜன் சமாஜ் கட்சிக் குண்டர்கள் போலீசாரோடு சேர்ந்து கொண்டு இரு தரப்பினரும் வன்முறை வெறியாட்டங்களில் இறங்கினர். மாநிலம் முழுவதும் 30-க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் நடந்த இத்தகைய வன்முறை - துப்பாக்கிச் சூடு - குண்டு வீச்சுத் தாக்குதல்களில் 12 பேர் கொல்லப்பட்டனர். இக்கடையடைப்புப் போராட்டத்தை எதிர்த்து அலகாபாத் உயர் நீதிமன்றத்தை மேல் சாதி நீதிபதிகளும் வழக்கறிஞர்களும் இயக்கியதைக் கண்டு ஆத்திரமடைந்த சமாஜ்வாடி கட்சிக் குண்டர்களும் போலீசாரும் நீதிமன்றத்தைச் சூறையாடி, வழக்கறிஞர்களைத் தாக்கியதோடு துப்பாக்கிச் சூடும் நடத்தினர். அலகாபாத் நீதிபதிகள், உச்சநீதி மன்றத்திடம் உடனடியாக புகார் செய்ததும் ராணுவம் அங்கு பாதுகாப்புக்காக அனுப்பப்பட்டது. அதைத் தொடர்ந்து உச்ச நீதிமன்றம், மத்தியப் புலனாய்வுத் துறையைக் கொண்டு இச்சம்பவம் பற்றி விசாரணை நடத்தி அறிக்கையைப் பெற்றுள்ளது.

**சாதி அடிப்படையில் தனக்கென நிரந்தரமான பாதுகாப்புள்ள மாநிலத்தை உருவாக்கிக் கொள்ளும் நோக்கத்தோடுதான், ''உத்தர்கண்ட்'' போராட்டத்தைத் தீவிரப்படுத்தி வருகிறது, பாரதீய ஜனதா. இந்த லட்சணத்தில் முலாயம் சிங்கையும் கன்சிராமையும் சாதிவெறியர்கள் என்று சாடுகிறது.**

இதே போல, ''உத்தர்கண்ட்'' பகுதியில் செப் 12-ம் நாளன்று நடந்த தர்ணா, வேலைநிறுத்தம், பேரணிகளில் போலீசார் மிருகத்தனமாக தாக்கினர். முசோரி, டேராடூன், கதீமா நகர்களில் போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 8 பேர் பலியாகியுள்ளனர். அக்டோபர் 2-ம் நாளன்று டெல்லியில் தமது கோரிக்கையை வலியுறுத்துவதற்காக ஆயிரக்கணக்கான ''உத்தர்கண்ட்'' ஆதரவாளர்கள் பேருந்துகளில் சென்ற போது, அவர்களை முசாபர்நகர் அருகே வழி மறித்த உத்திரப் பிரதேச ஆயுதப்படை போலீசார், கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தியதோடு, சிதறியோடிய மக்கள் மீது தடியடியும் நடத்தினர். பேருந்துகளிலிருந்து பெண்களை அருகிலிருந்த கரும்பு வயல்களுக்கு இழுத்துச் சென்று பாலியல் வன்முறையை ஏவினர்.

மேல் சாதியினரின் போராட்டத்தை முலயம் சிங் அரசு வன்முறையை ஏவி ஒடுக்கிய ஆத்திரத்தில், மேல் சாதியினரும் பாரதீய ஜனதா குண்டர்களும் எதிர்த்தாக்குதல் வன்முறையில் இறங்கினர். நைனிடால், ஜுலாகர் முதலான இடங்களில் மேல் சாதி வெறியர்கள் போலீசு நிலையத்தையே சூறையாடி, 5 போலீசாரைக் கொன்றனர். செப்டம்பர் 13-ந் தேதி நடந்த கடையடைப்புப் போராட்டத்தின் போது கன்னாஜ் பகுதியின் சமஜ்வாடி தலைவர் கல்லுபத்தான் என்பவரை முன்னாள் பாரதீய ஜனதா எம்.எல்.ஏ. துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார். இது தவிர பிற்பட்ட சாதியைச் சேர்ந்த போலீசு டி.எஸ்.பி. இன்ஸ்பெக்டர்கள் சிலரைக் குறிவைத்து கொன்றொழித்தனர். அண்மையில் சாமோலி மாவட்டத்திலுள்ள கர்ணபிரயாகை எனுமிடத்தில் உத்தர்கண்ட் மேல் சாதிக் கும்பல், 5 போலீசாரைத் தாக்கிப் படுகொலை செய்துள்ளது. உத்தர்கண்ட் பகுதியிலுள்ள சிறுபான்மையினரான பிற்பட்டோர் - தாழ்த்தப்பட்டோர் மீதும் மேல் சாதி வெறியர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இப்படி இரு தரப்பிலும் சாதிய வன்முறைக் கொலை வெறியாட்டங்கள் நடந்துள்ள நிலையில் பார்ப்பன மேல்சாதி 'தேசிய'ப் பத்திரிகைகள் போலீசின் வன்



முலயம்சிங் அரசு நடத்திய ''பந்த்''-ஐ எதிர்த்து கடைகளைத் திறந்தோர் மீது போலீசின் தாக்குதல்



படிப்பகம்

www.padippakam.com

முறையை மட்டும் பெரிது படுத்தி முல யம்சிங் அரசைச் சாடுகின்றன. மலை மாவட்டங்களில் பார்ப்பன - மேல் சாதி யினர் பெரும்பான்மையாக உள்ளதை மூடிமறைத்து "மலைவாழ் மக்கள்" என்று குறிப்பிட்டு ஏய்க்கின்றன. இட ஒதுக்கீடு அமுலானால் இப்பிராந்திய மக் களின் வாழ்வே பறிபோய்விடும் என்று மிகைப்படுத்தப்பட்ட விபரங்களைக் கூறி பீதியூட்டுவதோடு, அவர்களது போராட்டம் நியாயமானதைப் போல வும் சித்தரிக்கின்றன.

இதில் வேடிக்கை என்னவென்றால், எந்தவொரு தனி மாநிலக் கோரிக்கை யையும் - சுய நிர்ணய உரிமை, மாநில சுயாட்சி, மாவட்ட சுயாட்சி கவுன்சில் எதுவானாலும் கடுமையாக எதிர்த்து, இவற்றை பிரிவினைவாதம் என்று சாடும் பாரதீய ஜனதா, "உத்தர்கண்ட்" தனி மாநிலக் கோரிக்கையை ஆதரித்து தீவிர மாகப் போராடுகிறது. இதற்கு அடிப்ப டையே அக்கட்சியின் இடஒதுக்கீடு எதிர்ப்பு - மேல்சாதி வெறிதான். உத்தர் கண்ட் பகுதி நீண்ட காலமா கப் பின் தங்கிய நிலையிலுள் ளது என்றும் அதிகாரத்தைப் பரவலாக்கி சிறிய மாநிலங் களை அமைப்பது அவசிய மானதுதான் என்று அத்வா னியும் ஜோஷியும் நியாய வாதம் பேசுகின்றனர். ஆனால் "ஜாட்" சாதியினர் பெரும்பான்மையாக உள்ள மேற்கு உ.பி.யை தனி மாநி லமாக்க அஜித்சிங் கோருவ தைப் பற்றி பாரதீய ஜனதா வாய் திறக்க மறுக்கிறது. சாதி அடிப்படையில் தனக்கென நிரந்தரமான, பாதுகாப் புள்ள மாநிலத்தை உருவாக் கிக் கொள்ளும் நோக்கத் தோடுதான் அது உத்தர் கண்ட் போராட்டத்தைத் தீவி ரப்படுத்தி வருகிறது. மேல் சாதி இந்துக்களின் கட்சியாக தன்னை நிரூபித்துக் காட்டிய பாரதீய ஜனதா, இந்த லட்ச ணத்தில் முலயம் சிங்கையும் கன்ஷிராமையும் சாதி வெறியர்கள் என்று வெட்கமின்றி சாடிக் கொண்டிருக் கிறது. முலயம்சிங் ஆட்சியைக் கலைக் கக் கோரிப் போராடுகிறது.



"உத்தர்கண்ட்" தனிமாநில கோரிக்கைக்குப் போராடி கைதாகும் பா.ஜ.க. தலைவர் முரளி மனோகர் ஜோசி; கீழே - உ.பி. காங். தலைவர் என்.டி.திவாரி



இந்நிலையில், உ.பி.யில் சட்டம் - ஒழுங்கு சீர்குலைந்து வன்முறை தலைவி ரித்தாடுவதாகக் கூறி, முலயம் சிங் அர சுக்கு அளித்த வரும் ஆதரவை வாபஸ் பெற்று அதைக் கலைக்க வேண்டும் என்று மாநிலக் காங்கிரசார் போர்க் கொடி தூக்கியுள்ளனர். உத்தர்கண்ட் பகு தியைச் சேர்ந்த மேல்சாதிக்காரரும், மாநி லக் காங்கிரசுத் தலைவருமான என்.டி. திவாரி தன் பின்னே கனிசமான எம். எல்.ஏ, எம்.பிக்களைத் திரட்டிக் கொண்டு டெல்லி கட்சித் தலைமையை எதிர்த்துக் கலகம் செய்து வருகிறார். ஆனால் நரசிம்மராவ் கும்பலோ, எதிர் கால நலன்களைக் கணக்கில் கொண்டு, முலயம்சிங் ஆட்சியைக் கலைக்கவோ, உத்தர்கண்ட் தனி மாநிலக் கோரிக் கையை ஏற்கவோ மறுத்து விட்டது.

ஏனெனில், ஆந்திராவிலும் கர்நாட கத்திலும் சட்ட மன்றத் தேர்தல்கள் நடை பெறவுள்ள நிலையில் இப்படி ஆட்சி யைக் கலைத்தால், அது எதிர்க்கட்சிக ளின் பிரச்சாரத்துக்கு சாதகமாக அமைந் துவிடும். இதைவிட, உ.பி. அரசைக் கலைத்தால், நாடு முழுவதும் பிற்பட் டோர் தாழ்த்தப்பட்டோர் மற்றும் முஸ் லிம்களிடம் காங்கிரசின் செல்வாக்கு மேலும் சரிந்து செல்லாக் காசாகிவிடும். இதோடு, என்.டி. திவாரி கோஷ்டியின் நிர்ப்பந்தத்தை ஏற்றுப் பணிந்து போனால், இதைப் பார்த்து அர்ஜுன்சிங், சரத்ப வார், சோனியா கோஷ்டிகளும் தைரியம டைந்து கலகம் செய்ய ஆரம்பித்தால், ராவ் கும்பலுக்குப் பேராபத்தாகிவிடும். இதனாலேயே டெல்லி தலைமை முல யம்சிங் ஆட்சியைக் கலைப்பதில்லை என்று அறிவித்துள்ளது. அதேசமயம் உத்தர்கண்ட் மக்களிடம் நம்பிக்கை பெறு வதற்காக, மாவட்ட வளர்ச்சிக் கவுன்சில் அமைக்கப் பரீசிலிப்பதாகக் கூறுகிறது.

தொகுப்பாகக் கூறினால், முக்கிய மாக இட ஒதுக்கீட்டை எதிர்த்து மேல் சாதியினர் நடத்தும் போராட்டம்தான் உத்தர்கண்ட் தனி மாநிலக் கோரிக்கையா கும். உத்தர்கண்ட் பகுதியிலுள்ள பெரும் பான்மையினர் ஒடுக்கப்படும் மலை வாழ் மக்களோ, தேசிய இனச் சிறுபான் மையினரோ அல்ல. அவர்கள் பார்ப்ப னர்களும் மேல் சாதி இந்துக்களும் தான். சாதிய அடிப்படையிலான இத்தகைய தனி மாநில அல்லது மாவட்ட சுயாட்சிக் கோரிக்கையை நாம் எந்த வகையிலும் ஆதரிக்க முடியாது. நடப்பது சாதியச் சண்டை. அரசு பதவிகள், சலுகைகள், சன்மானங்களைப் பெற பிற்பட்ட மேல் சாதியினருக்கும், முற்பட்டோருக்கும் இடையிலான மேல் சாதி - மேட்டுக்குடி யினரின் சண்டை. இதிலே எத்தரப்பை யும் நாம் ஆதரிக்க முடியாது. இட ஒதுக் கீடு ஆதரவானாலும், எதிர்ப்பானாலும், அனைத்துப் பிரிவு உழைக்கும் மக்களை யும் அடக்கி ஒடுக்கிச் சுரண்டும் ஆளும் வர்க்கங்களுக்குச் சேவை செய்கிற அரசு எந்திரத்தில் பதவியைப் பிடிப்பதற்கான போட்டிதான். இதை மூடி மறைத்து விட்டு இத்தனை நாளும் பசப்பிவந்த ஓட் டுக் கட்சிகள் இப்போது சாதிய அடிப்ப டையில் பகிரங்கமான போராட்டத்தில் இறங்கி விட்டதையே உ.பி. விவகாரம் தெளிவாக்கிக் காட்டுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

### மார்வாடி எதிர்ப்புப் போராட்டம்:

# மறைக்கப்பட்ட உண்மைக்கு மணியரசன் குழு வாக்குமூலம்

''மார்வாடி எதிர்ப்பில் மறைக்கப்படும் உண்மைகள்'' என்றொரு கட்டுரை 1994 ஜூன் 15 புதிய ஜனநாயகம் இதழில் எழுதியிருந்தோம். அதற்குப் பிழைப்புவாதி பெ.மணியரசன் கும்பல் (அவர்களது தற்போதைய அவதாரம் தமிழ்தேசப் பொதுவுடமைக் கட்சி) தனது ''தமிழர் கண்ணோட்டம்'' '94 ஜூலை ஏட்டில் ''புதிய ஜனநாயகம் - மார்வாடிகளுக்கு மறைமுக வக்காலத்து'' என்ற தலைப்பில் ஒரு ''பதிலை'' எழுதியிருக்கிறது.

வாதப் பிரதிவாதங்களில் அதன் மையப் பகுதியை விட்டு விட்டுத் திசை திருப்பி, சம்பந்தமில்லாத அல்லது இரண்டாம்பட்ச விவகாரத்தை முன்னிறுத்தித் தன்னை நியாயப்படுத்த முயல்வது திருவாளர் ஈ.எம். சங்கரன் நம்பூதிரியின் வாதமுறை. அவரது பள்ளியில் பாடங் கற்ற சீடர்கள் அல்லவா மணியரசன் கும்பல்; அதனால் அதே பாணியில் நமக்கு எதிரான வாதங்களை வைத்திருக்கிறது.

''மார்வாரி எதிர்ப்பில் மறைக்கப்படும் உண்மைகளாக'', புதிய ஜனநாயகம் எழுதியிருந்தவை பின்வருமாறு:

★மார்வாரி எதிர்ப்புப் போராட்டத்தையொட்டி, ''தமிழ்நாடு வந்தேறிகளின் வேட்டைக்காடு'' என்கிற பிரசுரத்தை மணியரசனது சகபாடி நெடுமாறன் வெளியிட்டிருந்தார். அதில் ''வெளிநாடுகளுக்குச் சென்ற தமிழர்களும் சரி, வெளி மாநிலங்களுக்குச் சென்ற தமிழர்களும் சரி, அனைவரும் சுரண்டிப் பிழைக்கப் போனவர்கள் அல்லர். தங்கள் உழைப்பினால் அந்த நாடுகளின் வளத்தைப் பெருக்கி தாங்களும் வாழ்வதற்காகவே சென்றவர்கள். அந்நாடுகளில் வட்டிக் கடைகள் நடத்தி அல்லது தொழில் வணிக நிலையங்கள் நடத்தி கோடி கோடியாகச் சம்பாதிப்பதற்குச் சென்றவர்கள் அல்ல'' என்று எழுதியிருக்கிறார். இது ஒரு அப்பட்டமான புளுகு; உண்மையை மூடி மறைப்பது என்று சான்று காட்டி புதிய ஜனநாயகம் எழுதியிருந்தது.

''இன்று இந்தியாவின் பெரும் தொழிற்சாலைகள் அனைத்தும் இவர்களிடம் (ஷேக்வாதி மார்வாரி பரம்பரை) தான் இருக்கின்றன. இன்று இந்தியாவில் உள்ள எந்தப் பெரும் தேசிய முதலாளிகளை எடுத்துக் கொண்டாலும் சரி, அவர்கள் ஷேக்வாதி மார்வாரி என்னும் பரம்பரையைச் சேர்ந்தவர்களாகவே இருப்பார்கள். இவர்களின் மூதாதையர்களின் வரலாற்றைப் பார்த்தால் அவர்கள் இராஜஸ்தான் பாலைவனப் பகுதிகளில் இருந்து பொருளீட்ட வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்து வந்தவர்களாகத்தான் இருப்பார்கள்'' என்று விடுதலையில் இராசேந்திரன் என்பவர் எழுதியதை நெடுமாறன் தனது பிரசுரத்தில் கட்டம் கட்டி வெளியிட்டுள்ளார் (அழுத்தம் நாம்). இதில் ''இன்று இந்தியாவின் பெரும் தொழிற்சாலைகள் அனைத்தும் ஷேக்வாதி மார்வாரிகளிடம்தான் இருக்கின்றன'' என்பது உண்மையல்ல. அதேபோல ''இன்று இந்தியாவில் உள்ள எந்த பெரும் தேசிய முதலாளிகளை எடுத்துக் கொண்டாலும் சரி அவர்கள் ஷேக்வாதி மார்வாரி என்னும் பரம்பரையைச்சார்ந்தவர்களாகவே இருப்பார்கள்'' என்பதும் உண்மையல்ல. டாடா, இந்துஜா, கிர்லோஸ்கர், சிம்சன், டி.டி.கே, டி.வி. சுந்தரம் ஐயங்கார், சேஷசாயி, சிவநாடார் (கம்ப்யூட்டர் துறை), தாப்பர், வாடியா, மோடி, சர்க்கார், மாமன் மாப்பிள்ளை, (கன்னட) பாய், மல்லையா, ஓபுல்ரெட்டி இப்படி மார்வாரி-குஜராத்தி அல்லாத இந்தியத் தரகு பெருமுதலாளிகளும், கோகோ கோலா, பெப்சி, டன்லப், ஐ.பி.எம், யூனியன் கார்பைடு, கோல்கேட்-பாமாலிவ், பாண்ட்ஸ், நெஸ்ட்ல் இப்படி ஏராளமான வெளிநாட்டு கம்பெனிகளும்கூட உள்ளன. ''மார்வாரி-குஜராத்தி பனியாக்களே பல மாநிலங்களிலும் அகில இந்திய அளவிலும் செல்வாக்கு செலுத்துகிறார்கள்'' (மேற்படி பு.ஜ. பக்.9) என்பதைக் கூறும் அதே சமயம், பிற தரகு பெருமுதலாளிகள், வெளிநாட்டு ஏகாதிபத்திய முதலாளிகளின் பங்கு மார்வாரி எதிர்ப்பில் மறைக்கப்படும் உண்மை என்று சான்றுகளோடு எழுதினோம்.

தமிழ்த் தரகு முதலாளிகள் விசயத்தில்
தன்னுரிமை முன்னணியின்
கொள்கை



★இதேபோல, தமது ''பூர்வீக'' பகுதிகளை விட்டு வெளியேறி பிற பகுதிகளில் வணிக-வட்டித் தொழில்கள் நடத்தி, பிரிட்டிஷாரின் பனியாக்களாகி, தரகு வணிகப் பணியாளர்களாகி, பிறகு தொழிற்துறையில் முதலீடு செய்து தரகு பெரு முதலாளிகளாகி, நாட்டுத் துரோகிகளாக பிரிட்டிஷாரோடு கூடிக் குலாவியவர்கள் மார்வாரி-குஜராத்தி பனியாக்கள் மட்டுமல்ல; தமிழ்நாடு உட்பட வேறு பிற பகுதிகளைச் சேர்ந்த, வேறுபிற ''இன''த்தைச் சேர்ந்த, தரகு, பெருமுதலாளிகளும் இப்படிச் செய்து வளர்ந்து, ஆதிக்கம் வகிக்கின்றனர். இந்த உண்மையும் மார்வாரி எதிர்ப்பில் மறைக்கப்படுவதாக புதிய ஜனநாயகத்தில் சான்றுகளோடு விளக்கியிருந்தோம்.

★ ''பிரிட்டிஷ்காரர்களின் நேச சக்தியாளர்கள், பிரிட்டிஷ்காரர்களின் நிறுவனங்களிலே பணியாற்றினார்கள். பிரிட்டிஷ்காரர்களின் அந்த நிறுவனங்களை வாங்கி சொந்தமாகத் தொழிற்சாலைகளைத் துவக்கினார்கள்'' என்று விடுதலை இராசேந்திரன் எழுதியதை நெடுமாறன் எடுத்தாண்டிருக்கிறார். இதில் ''பிரிட்டிஷ்காரர்கள் வெளியேறியபோது அந்த நிறுவனங்களை வாங்கி சொந்தமாகத் தொழிற் சாலைகளைத் துவக்கினார்கள்'' என்பது உண்மையல்ல பிரிட்டிஷார் இங்கிருந்தபோதே அவர்களின் பனியாக்களாக, தரகு வணிக முதலாளிகளாகவும், பிறகு பிரிட்டிஷ் கூட்டோடு ஆலைகள் துவங்கி தரகு முதலாளிகளாகவும் மாறினர் என்பதுதான் உண்மை. இதேபோல வேறுபிற பகுதிகளைச் சேர்ந்த தரகு முதலாளிகளும் உருவாகியிருந்தனர்; பின்னர் வேறுபிற ஏகாதிபத்தியங்களுடன் கூட்டு வைத்துக் கொண்ட தரகு அதிகார முதலாளிகளாகவும் உருவாகினர் என்பதுதான் உண்மை; பிரிட்டிஷ்காரர்கள் வெளியேறிய போது அவர்களுடைய தொழிற்சாலைகள், நிறுவனங்கள் பாதுகாக்கப்படுவதோடு, வேறுபிற ஏகாதிபத்திய ஏகபோகங்கள் முதலீடு செய்யவும் கொள்ளையிடவும் உறுதியளிக்கப்பட்டு அவ்வாறே நடக்கிறது; அந்நியர்களின் கொள்ளை என்கிறபோது மார்வாரி-


படிப்பகம்

www.padippakam.com

குஜராத்தி பனியாக்களின் கொள்ளை - சுரண்டல் - ஆதிக்கம் பற்றி மட்டும் தான் ''மார்வாரி எதிர்ப்பில்'' இருக்கிறதே தவிர அந்நிய ஏகாதிபத்திய ஏகபோக முதலாளிகளின் கொள்ளை - சுரண்டல் - ஆதிக்கம் பற்றிய உண்மை மறைக்கப்படு கிறது. இதையும் புதிய ஜனநாயகம் சான் றுகளுடன் எழுதியிருந்தது(பக்.10)

★ ''மார்வாரி-குஜராத்தி பனியாக் களிடம் பறிபோன தமிழர் பெருந்தொ ழில்கள் என்று பட்டியலிடுகையில் அப் பட்டமாகவே தரகு முதலாளிகளான கரு முத்து செட்டியார் குடும்பம், முத்தையா செட்டியார் குடும்பம், எஸ். விசுவநாதன் (என்பீல்டு நிறுவனம்), கோவை ராம கிருஷ்ணன் (சவுத் இந்தியா விஸ்கோஸ் லிட்.), ஜி.கே சுந்தரம் (லட்சுமி மில்ஸ்) போன்றவர்களுக்காக வக்காலத்து வாங் குகிறார், நெடுமாறன்.

''தமிழகத்தில் வணிக-ஆலை மூல தனத்தில் இறங்கிய செட்டியார் மற்றும் பார்ப்பனக் குடும்பங்கள் (ஏ.சி. முத் தையா செட்டியார், ஆர்.கே.சண்முகம் செட்டியார், எஸ்.என் சங்கரலிங்கம், சேஷசாயி, டி.வி. சுந்தரம், குப்புசாமி அய்யர், எஸ்.எஸ். வாசன், டி.டி. கிருஷ் ணமாச்சாரி, அனந்தராமகிருஷ்ணன், பார்த்தசாரதி அய்யர், சி.ஆர்.சீனிவாசன் முதலானவர்கள்) ஆங்கிலேய ஏகாதிபத் தியத்தின் இளைய பங்காளிகளாகவே - இடைத்தரகர்களாகவே இருந்தனர். ஹார்வி, பாரி முதலிய ஏகாதிபத்திய நிறு வனத்துடன் கூட்டு சேர்ந்து தரகு வேலை செய்தவர்கள், போகப் போக சில ஆலை களையும் சொந்த மாக்கிக் கொண்டனர். இன்றும் இவர்களின் குடும்பத்தினர் பல் வேறு அந்நிய ஏகாதிபத்திய முதலாளிக ளுடன் கூட்டுச் சேர்ந்தே உள்ளனர். மேலும் இன்று 'மார்வாரி'-குஜராத்தி பனியாக்களுடன் தொழில்முறை கூட்டா ளிகளாக தமிழின பனியாக்கள் உள்ளதை யும் பார்க்கிறோம். இவை பற்றியெல் லாம் தன்னுரிமை முன்னணியினர் வாய் திறவாமல் மூடி மறைக்கிறார்கள்''. இவ் வாறு புதிய ஜனநாயகம் அம்பலப்படுத்தி யிருந்தது(பு.ஜ.பக்;10)

மேற்கண்டவைகளை ''மார்வாடி எதிர்ப்பில் மறைக்கப்படும் உண்மைக ளாக'' சான்றுகளுடன் புதிய ஜனநாயகம் எழுதியிருந்தபோதும் காமாலை கண் மணியரசன் கும்பலுக்கு இவை தெரிய வில்லை. ''மறைக்கப்பட்ட ரகசியங்க ளைக் கையும் களவுமாகப் பிடித்து வெளி யிடுகிறது போலும் என்று எதிர்பார்ப்பில் யாரேனும் படித்தால் ஏமாற்றமே மிஞ் சும்!'' என்று பு.ஜ. வின் கட்டுரை பற்றி புளுகுகிறது, அக்கும்பல்.

இவ்வாறு மார்வாரி எதிர்ப்பில் மறைக்கப்படும் உண்மைகள் என்று எது வுமே நமது கட்டுரையில் இல்லை என்று அந்த இதழின் மூன்றாம் பக்கம் எழுதி விட்டு ஐந்தாம் பக்கம் பின்வருமாறு எழு துகிறது மணியரசன் கும்பல்:

''.... என பழ. நெடுமாறன் தனது பிரசுரத்தில் பட்டியலிட்டு இருப்பவைக ளில் சேட்டுக்களின் ஆதிக்கம் உள்ளது என்பது உண்மைதான். ஆனால் இந்நி கழ்ச்சிப் போக்கு இந்தியா முழுவதும் நிகழ்கிற ஒன்றாகவும் 'மார்வாரி'- குஜராத்தி பனியாக்களிடம் மட்டும் என் றில்லாமல் பார்சி, முஸ்லீம், மற்றும் பிற தேசிய இன பனியாக்களிடம் இருந்தும் வருகிற தாக்குதலாகவும் உள்ளது. இதை மறுப்பதும் மறைப்பதும் எந்த தேசிய இனத்திற்கும் தன்னுரிமையை - விடுத லையைத் தேடித்தராது (பு.ஜ.'94 ஜுன்15). தமிழ்த் தேசத் தன்னுரிமை முன்னணி மறைத்ததாகச் சொல்லப்படும் உண்மை இதுதான். இந்த 'இரகசியத் தைத் தான்' பு.ஜ. கையுங்களவுமாகப் பிடித்து ஊரறிய அம்பலப்படுத்தியிருக்கி றது'' (தமிழர் கண்ணோட்டம் '94 ஜூலை பக்.5).

இதுதான் நம்பூதிரி பாணி புளுகு. முதலில் நாம் பட்டியலிட்டுக் காட்டிய வாறு ''மார்வாரி எதிர்ப்பில் மறைக்கப்ப டும் உண்மைகள்'' அந்த பு.ஜ கட்டுரை யில் இருந்தபோதும், முதலில் அப்படி எதுவுமே இல்லை என்று புளுகுகிறது மணியரசன் கும்பல்; பிறகு அவற்றில் ஒன்றே ஒன்றை எடுத்து மட்டும் எழுதி ''இதுதான்'' வேறொன்றுமில்லை என்று புளுகுகிறது. அதன் பொருளையும் பின் வருமாறு திரித்துச் சொல்லுகிறது:

> நெடுமாறன் - மணியரசன் பட்டியல்போட்டு வக்காலத்து வாங்கும் தமிழ்நாட்டு முதலாளிகள் பலரும் துரோகமிழைத்து மார்வாரி - குஜராத்தி இன்னும் பிற தரகு முதலாளிகளுடன் ஏகாதிபத்திய முதலாளிகளுடன் தமிழ்நாட்டை அந்நியர்கள் கொள்ளையிடவும் ஆதிக்கம் செலுத்தவும் கூட்டுச் சேர்ந்துள்ளவர்கள் என்பதுதான் பு.ஜ. வைக்கும் விமர்சனம்

''இந்தியா முழுவதும் பொதுவாகப் பெரு முதலாளிகள் பொருளாதாரத் தாக் குதல் - பொருளாதார ஆதிக்கத்தைப் பற்றி மட்டுமே பு.ஜ கூறுகிறது. அதைத் தன்னுரிமை முன்னணி மறுக்கவில்லை. தமிழ்த் தேசத் தன்னுரிமை முன்னணி இப் போராட்டத்தில் எடுத்துக் கொண்ட பிரச் சினை அது அல்ல''. (தமிழர் கண்ணோட் டம் '94 ஜூலை பக்.5 அழுத்தம் நாம்)

மணியரசன் கும்பல் பு.ஜ.விலி ருந்து எடுத்துக் காட்டும் மேற்கோளை யும், அதற்கு அக்கும்பல் கொடுக்கும் வியாக்கியானத்தையும் ஒப்பிட்டுப் பாருங்கள் அதன் நம்பூதிரித்தனம் புரி யும். இந்தியா முழுவதும் பொதுவாகப் பெருமுதலாளிகள் நடத்தும் பொருளா தாரத் தாக்குதல் - பொருளாதார ஆதிக் கத்தையா இங்கே பு.ஜ. கூறுகிறது? அதை ''மட்டுமே பு.ஜ. கூறுகிறது'' என்று மேலும் ஒரு புளுகு பாருங்கள்! அக்கும் பல் வியாக்கியானம் செய்திருப்பதற்கு மாறாக நாம் எழுதியிருப்பது, சேட்டுக்க ளின் ஆதிக்கம் என்னும்'' இந்நிகழ்ச்சிப் போக்கு இந்தியா முழுவதும் நிகழ்கிற ஒன்றாகவும், 'மார்வாரி'-குஜராத்தி பனி யாக்களிடம் மட்டும் என்றில்லாமல் பார்சி, முஸ்லீம் மற்றும் பிற தேசிய இன பனியாக்களிடம் இருந்தும் வருகிற தாக் குதலாகவும் உள்ளது'' என்பதாகும். அதாவது 'மார்வாரி'-குஜராத்தி பனி யாக்கள் மட்டுமின்றி மற்ற பிற பனியாக்க ளின் பொருள்தாரத் தாக்குதல், ஆதிக் கம் இருப்பதைத்தான் பு.ஜ. இங்கே சுட் டிக்காட்டி இருந்தது.

''தமிழ்நாடு வந்தேறிகளின் வேட் டைக்காடு'' என்று பிரசுரம் போட்டு, போராட்டம் நடத்துபவர்கள், ''மார்வாரி ''-குஜராத்தி பனியாக்கள் மட்டும்தான் தமிழ்நாட்டுக்கு வந்தேறி, வேட்டைக் காடாக்கியவர்கள், அவர்கள் தவிர வேறு பிற பனியாக்கள் அப்படிக் கிடையாது என்பதாக தன்னுரிமை முன்னணி மறைப் பதை நாம் எடுத்துக் காட்டினோம். த.தே.த.மு. இப்போராட்டத்தில் எடுத் துக் கொண்ட பிரச்சினை, பொதுவான தைக் குறிப்பானதுடன் இணைக்கும் நடைமுறை என்றும், அதன் அடிப்படை யில்தான் மார்வாரி பெருமுதலாளிக ளைக் குறிப்பாக எதிர்ப்பதாகவும் தனது நிலையை மணியரசன் கும்பல் நியாயப்ப டுத்த முனைகிறது.

ஆனால் நமது வாதத்தின் சாரம் இது தான். பார்ப்பனீய - பார்ப்பன சனாதன வருணாசிரம சாதி ஆதிக்கத்தை எதிர்ப் பது என்பது குறிப்பாக பார்ப்பனர் சாதி- வருணப் பிரிவினரை மட்டும் எதிர்ப்பது தான் என்று கூறி பெரியார் - வீரமணியும் அவரது முன்னோடிகளும் சீடர்களும் குறுக்கிச் சுருக்கி பார்ப்பனரல்லாத மேல் சாதி நிலவுடமை - தரகு முதலாளி வர்க் கப் பிரிவினரை ஆதரிக்கின்றனர்; சங்கர மடங்களையும், ஜீயர் மடங்களையும் எதிர்க்கும் அதே சமயம் பார்ப்பனரல் லாத மேல் சாதி ஆதிக்கம் வகிக்கும் மடா திபதிகளையும் ஆதீனகர்த்தர்களையும் அரவணைத்துக் கொள்கின்றனர்; அதே போல மணியரசன் - நெடுமாறன் கும் பல், மார்வாரி-குஜராத்தி முதலாளிக ளின் பொருளாதாரத் தாக்குதல் - ஆதிக் கத்தை எதிர்க்கும் அதே சமயம் பொது வில் மற்ற பிற தரகு பெருமுதலாளிகளின்



படிப்பகம்

www.padippakam.com

குறிப்பாக தமிழ் தரகு பெருமுதலாளிகளின் சுரண்டல் - கொள்ளை - ஆதிக்கத்தை மூடி மறைக்கின்றனர், நியாயப்படுத்துகின்றனர் என்பதுதான் பு.ஜ. விமர்சனம்.

திராவிட இயக்கத்தினரது பார்ப்பன எதிர்ப்பில் உள்ள தவறைச் சுட்டிக் காட்டுவதால் நம் மீது பார்ப்பன முத்திரை குத்தி அவர்கள் அவதூறு செய்கின்றனர்; அதுபோலவே மார்வாரி எதிர்ப்பில் மறைக்கப்படும் உண்மைகளைச் சொல்வதாலேயே நாம் திட்டமிட்டு மறைமுகமாக மார்வாரிகளுக்கு வக்காலத்து வாங்குகிறோம் என்றும் மார்வாரி-குஜராத்தி சேட்டுகள் மீது பாயும் ஆயுதத்தைத் திசை திருப்பி விடவேண்டும் அல்லது கூர் மழுங்கச் செய்ய வேண்டும் என்பதுதான் நமது உள்நோக்கம் என்றும் மணியரசன் கும்பல் அவதூறு செய்கிறது.

ஆனால் அவர்கள் நாம் விமர்சிப்பது போலவே தமது குறுகிய, குருட்டு தேசிய இனவாதக் கொள்கையைப் பின்பற்றி, மார்வாரிகள் எதிர்ப்பில் சில உண்மைகளை மறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளதையே மீண்டும் வெளிப்படுத்தி உள்ளனர். இந்தியாவின் பெருந் தொழிற்சாலைகள் அனைத்தும் ஷேக்வாதி மார்வாரி பரம்பரையினரிடம் தான் உள்ளன; இந்தியாவில் உள்ள எந்த பெரும் தேசிய முதலாளிகளை எடுத்துக் கொண்டாலும் ஷேக்வாதி பரம்பரையினர்தாம் என்று விடுதலை இராசேந்திரனிடம் இருந்து தவறான கருத்தை நெடுமாறன் எடுத்தாண்டிருந்ததைச் சொன்னோம்.

இப்போது மேற்படி உள்நோக்கத்தோடு மார்வாரி-குஜராத்தி சேட்டுகளின் வரிசையில் மற்ற பிற முதலாளிகளை ஒப்பிட்டு பு.ஜ. பேசுகிறது என்றும், ''எத்தனை முஸ்லீம்கள் பெருமுதலாளிகளாக இருக்கிறார்கள்? அல்லது அவர்கள் சொல்வதுபோல் தரகுப் பெரு முதலாளிகளாக எத்தனை பேர் இருக்கிறார்கள்? ஒருவரும் இல்லை. டாட்டாவைத் தவிர பார்சியில் எத்தனைபேர் பெருமுதலாளிகள்?'' (தமிழர் கண்ணோட்டம் '94 ஜூலை பக்.6) என்று மறுப்பதன் மூலமும் மணியரசன் கும்பல் நமது விமர்சனம் சரியானது என்பதை ஒப்புக் கொள்கிறது. முஸ்லீம், பார்சிக்கள் மட்டுமல்ல பிற தேசிய இனத்தைச் சேர்ந்த தரகு பெருமுதலாளிகளும் உள்ளனர் என்றும் அதற்கான சான்றுகளோடு நாம் எழுதியிருந்தோம். அவர்களில் முஸ்லீம் பார்சிகளை மட்டும் குறிப்பிட்டுக் கேள்விகளை அடுக்கியிருக்கிறது மணியரசன் கும்பல். இந்தக் கேள்விகளுக்கு அதே பு.ஜ. இதழிலும், இந்த இதழிலும் பதில்கள் எழுதி உள்ளோம்.

நமது விமர்சனங்களுக்குப் பதில் கூற வக்கில்லாத மணியரசன் கும்பல், ''மார்வாரிகள் மட்டும்தான் சுரண்டுகிறார்களா, மற்றவர்கள் சுரண்டவில்லையா, ஏன் தமிழர்களே சுரண்டவில்லையா என்பதுதானே பு.ஜ.வாதத்தின் சாரம்'' என்று தமது குரு நம்பூதிரி பாணியில் கொச்சைப்படுத்தியும் திரித்தும் உரையெழுதி வாதங்கள் வைக்கிறது. ஆனால் பொதுவில் எல்லா முதலாளிகள், குறிப்பாக எல்லா தமிழ்த் தேசிய முதலாளிகள் சுரண்டுவதை எதிர்க்க வேண்டும் என்பது நமது வாதமல்ல. மார்வாரி-குஜராத்திகளின் ஆதிக்கம் - சுரண்டலே மிகுந்திருக்கும் அதே சமயம் தமிழர் உட்பட மற்றபிற தரகு அதிகார முதலாளிகளைப் பற்றிய உண்மை மறைக்கப்படுகிறது என்பதுதான் நமது விமர்சனத்தின் சாரம்.

இதுதான் மணியரசன் நெடுமாறன் கும்பலின் உச்சகட்டப் பித்தலாட்டம்: ''முதலாளிய சமூகம் நிலவுகின்ற ஒரு தேசத்தில் - உள்நாட்டு முதலாளிகள் ஆதிக்கம் செலுத்துவதற்கும் வெளிநாட்டு முதலாளிகள் ஆதிக்கம் செலுத்துவதற்கும் வேறுபாடில்லையா? ஒரு நாடு தேசிய முதலாளிகள் அரசைப் பெற்றிருப்பதற்கும் அந்நிய முதலாளிகள் காலனியாக இருப்பதற்கும் வேறுபாடு இல்லையா? சமூக வளர்ச்சியின் படிநிலைகளைப் புரிந்து கொண்ட ஒரு மார்க்சியவாதி, ஆக்கிரமிக்கும் அந்நிய முதலாளிகளையும் உள்நாட்டு முதலாளிகளையும் சமமாகக் கருதமாட்டார்.

''அந்நிய முதலாளியும் சுரண்டுகிறான், உள்நாட்டு முதலாளியும் சுரண்டுகிறான், இதில் என்ன வேறுபாடு காண்பது என்று பேசுவது செயலூக்கம் இல்லாதவர்களின் வெற்றுப்பேச்சு.




''தனிப்பட்ட கருமுத்து தியாகராஜ செட்டியார் குடும்பமோ, கோவை ராம கிருஷ்ணன் குடும்பமோ முறையே மீனாட்சி மில்லையும் சிறுமுகை விஸ்கோஸ் தொழிற் சாலையையும் இழந்துவிட்டார்களே என்ற கவலை அல்ல எங்கள் கவலை. தமிழர்களிடமிருந்து தொழில்களை வணிகத்தை மார்வாரி-குஜராத்தி சேட்டுக்கள் கைப்பற்றுவதன் மூலம் ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தின் அரசியல், பொருளாதார, பண்பாட்டுத் துறைகளில் அந்நியர் ஆதிக்கம் மேலோங்கி விட்டதே என்பது எங்கள் கவலை''. (த.க. '94 ஜூலை பக்.7,8)

இவ்வாறு, ''தமிழ் முதலாளிகளுக்குத் தன்னுரிமை முன்னணி வக்காலத்து வாங்குவதாக பு.ஜ. புளுகுகிறது'' என்று மணியரசன் கும்பல் இட்டுக்கட்டி வாதம் புரிந்துள்ளது. இதன் மூலம் அது வக்காலத்து வாங்கும் முதலாளிகள் தமிழ் முதலாளிகள் - உள்நாட்டு முதலாளிகள்தான் என்று நியாயப்படுத்துகிறது. இது ஒரு அப்பட்டமான பொய்! நெடுமாறன் மணியரசன் பட்டியல் போட்டு வக்காலத்து வாங்கும் முதலாளிகள் பலரும் தமிழ் நாட்டுக்குத்துரோகமிழைத்து, மார்வாரி-குஜராத்தி, இன்னும் பிற தரகு முதலாளிகளுடனும், ஏகாதிபத்திய ஏகபோக முத



படிப்பகம்

www.padippakam.com

லாளிகளுடனும், தமிழ்நாட்டை அந்நியர்கள் கொள்ளையிடவும் ஆதிக்கம் செலுத்தவும் கூட்டுச் சேர்ந்துள்ளவர்கள் என்பதுதான் பு.ஜ.வைக்கும் உண்மையான விமர்சனம். ''என்ஃபீல்டு'' விசுவநாதன், ''சிம்சன்-ஸ்பென்சர்'' சிவசைலம், அனந்த கிருஷ்ணன், ஈசன் குருப், டி.வி.எஸ். குருப், சிறுமுகை விஸ்கோஸ், முன்பு மேட்டூர் மால்கோ ராமகிருஷ்ணன் குடும்பம், ''ஸ்பிக்'' செட்டியார் குடும்பம், டி.டி.கே. குருப், ஜி.கே. சுந்தரம் குருப், லட்சுமணசாமி முதலியார் குருப் இப்படிப்பட்டவர்கள் வெறுமனே தமிழ் முதலாளிகளா? உள்நாட்டு முதலாளிகளா? இவர்களது தொழில் நுட்பம், மூலதனம், நிர்வாகம் போன்றவற்றில் ''அந்நியர்'' கூட்டுக் கிடையாதா? இவர்கள் தமது சுரண்டலை மீண்டும் தமிழ்நாட்டில் மட்டுமே மூலதனமிடுபவர்கள் என்று கூறமுடியுமா? இவர்கள் தமிழர்களைச் சுரண்டி வெளியில் கொண்டு சென்று மூலதனமிடவும் குவிக்கவும் செய்வதில்லையா? இப்படிச் செய்பவர்கள் தமிழ்நாட்டவர்கள் என்பதாலேயே தமிழ் தேச முதலாளிகள் - உள்நாட்டு முதலாளிகள் ஆகிவிடுவார்களா?

''தமிழ்நாடு அயலவர்களால் பொருளாதாரம், பண்பாடு அரசியல் வழிகளில் ஆக்கிரமிக்கப்படுகிறது. இந்த அயலவர்கள் இந்தியாவிற்கு வெளியே இருந்தும் வருகிறார்கள்; இந்தியாவில் இருந்தும் வருகிறார்கள். இந்தியாவிற்கு வெளியே உள்ள அயலவர்களைத் தமிழ்நாட்டிற்குள் அழைத்து வருவதே இந்தியாவில் இருந்துவரும் அயலவர்கள்தாம்'' என்று மணியரசன் கும்பல் மேலும் புளுகுகிறது. மேலே சொன்ன தரகு பெரு முதலாளிகள் பிற இந்திய முதலாளிகளையும் ஏகாதிபத்திய ஏக போக முதலாளிகளையும் தமிழ்நாட்டுக்குள் அழைத்து வருவதில்லையா? டன்லப், யூனியன் கார்பைடு, மெஸ்மேஜர், ஐ.டி.எம், பான்ட்ஸ், இங்கிலீஷ் எலக்ட்ரிகல்ஸ், ஈ.ஐ.டி பாரி, என்பீல்டு, லேலாண்டு இன்னும் பிற பன்னாட்டு ஏகாதிபத்திய அந்நியர்கள் நேரடியாகவே தமிழ்நாட்டுக்குள் நுழையவில்லையா? இப்போது அந்நிய ஏகாதிபத்திய நுழைவுக்கு அகலக் கதவு திறந்துவிடும் மைய அரசுக் கமிட்டிக்கு பொறுப்பாளராக ப.சிதம்பரம் இல்லையா?

பின்வரும் கூற்றில் மணியரசன் கும்பல் தனது பித்தலாட்டத்தை தானே வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொள்கிறது: ''தமிழ் முதலாளிகள் உண்மையான தேசிய முதலாளிகளாக இருந்து அந்நிய முதலாளிகளை எதிர்த்தால் அவர்களை ஆதரிப்போம். மார்வாடி-குஜராத்தி சேட்டுக்களோடு கூட்டுச் சேர்ந்து கொள்ளும் தமிழ் முதலாளிகளை எதிர்க்கிறோம்'' (த.க. '94 ஜூலை பக்.8)

இந்தக் கும்பல் வக்காலத்து வாங்கும் மேற்சொன்ன ''தமிழ்'' முதலாளிகளில் உண்மையான தேசிய முதலாளிகளாக இருந்து அந்நிய முதலாளிகளை எதிர்ப்பவர்கள் என்று யாரையாவது கூற முடியுமா? அதேபோல மார்வாடி-குஜராத்தி சேட்டுக்களோடு கூட்டுச் சேர்ந்து கொள்ளும் தமிழ் முதலாளிகள் என்று இந்த கும்பல் அடையாளங்காட்டி யாரையாவது, எப்போதாவது எதிர்த்ததுண்டா? இரண்டுமே கிடையாது!

இந்த இலட்சணத்தில் நம்மைப் பார்த்து தமிழ்த் தேச தன்னுரிமையை ஆதரிப்பதாக வேடம் போடுகிறோம் என்று அவதூறு செய்கிறது மணியரசன் கும்பல். ஆனால் ''அனைத்திந்தியப் புரட்சி பேசும் புதிய ஜனநாயகம் மார்வாரி-குஜராத்தி சேட்டுக்களை உள்நாட்டு முதலாளிகளாகக் கருதுகிறது. தமிழ்த் தேசத் தன்னுரிமைப் புரட்சிக்காகப் போராடும் நாங்கள் மார்வாரி குஜராத்தி சேட்டுக்களை அந்நிய முதலாளிகளாகக் கண்டறிந்து கூறுகிறோம்'' என்று நமது நிலையைத் திரித்துச் சொல்லி தனது நிலையை நியாயப்படுத்த முயல்கிறது மணியரசன் குழு.

> திராவிட இயக்கத்தினரது பார்ப்பன எதிர்ப்பில் உள்ள தவறைச் சுட்டிக் காட்டுவதால் நம் மீது பார்ப்பன முத்திரை குத்தி அவர்கள் அவதூறு செய்கின்றனர். மார்வாரி எதிர்ப்பில் மறைக்கப்படும் உண்மைகளைச் சொல்வதாலேயே, நாம் திட்டமிட்டே மறைமுகமாக மார்வாரிகளுக்கு வக்காலத்து வாங்குகிறோம் என்று மணியரசன் குழு அவதூறு செய்கிறது.

தமிழ்நாட்டவர்கள் என்பதாலேயே அந்நியருக்கு சோரம் போகும் தமிழ்த் தரகு அதிகார முதலாளிகளையும் தமிழ்நாட்டு முதலாளிகள்; இந்தக் கட்டத்தில் எதிர்க்கப்பட வேண்டியவர்கள் அல்ல என்று மணியரசன் கும்பல் வாதிடுகிறது. ஆனால் அதுபோல இந்தியர்கள் என்பதாலேயே மார்வாரி-குஜராத்தி சேட்டுகள் உட்பட எந்தத் தரகு அதிகார முதலாளிகளையும் உள்நாட்டு முதலாளிகள் என்று நாம் கருதுவதில்லை.

அனைத்திந்தியப் புரட்சித் திட்டத்தைக் கொண்டிருந்தாலும் அதன்படியே கூட தேசிய இன ஒடுக்கு முறையைக் கடைப்பிடிக்கும், அதற்குத் துணைபோகும் எல்லா முதலாளிகளை எதிர்த்துப் போராட வேண்டும் என்கிறோம். இந்த அடிப்படையில்தான் மார்வாரி எதிர்ப்பில் மணியரசன் - நெடுமாறன் கும்பல் மறைத்திடும் உண்மைகளை எடுத்துச் சொல்லும் அதேசமயம் அவர்கள் போராட்டத்தின் நியாயத்தை நாம் மறுக்கவில்லை என்று எழுதினோம். ஆனால் இதைப் புதிய ஜனநாயகத்தின் தற்குறித்தனம் என்று தலைப்பிட்டு, நாம் குட்டிக்கரணம் போடுவதாகவும், இரண்டுங்கெட்டான் நிலை எடுப்பதாகவும் அவதூறு செய்கிறது, மணியரசன் கும்பல்.

''தமிழ்த் தேச தன்னுரிமை பற்றி புதிய ஜனநாயகத்துக்கென்று சொந்தக் கொள்கைத் திட்டமோ, தீர்மானமோ போராட்டமோ கிடையாது. ஆனால் தன்னுரிமைக்காகப் போராடும் நம்பிக்கைக்குரிய கட்சி மா.லெ. இந்தியப் பொதுவுடைமைக் கட்சி மாநில அமைப்புக் குழுதானென்று அவ்வப்போது பீற்றிக் கொள்கிறது'' என்று பச்சையாகப் புளுகுகிறது. மணியரசன் கும்பல்.

நம்பூதிரி - ராமமூர்த்தி - ஜோதிபாசு ஆகிய போலிக் கம்யூனிஸ்டகளுடன் சேர்ந்துக் கொண்டு ''நக்சலைட்டுகள் - சி.ஐ.ஏ.கள், பிளவுவாதிகள்'' என்று இந்தக் கும்பல் அவதூறு செய்து வந்த நமது கட்சி அதன் தொடக்க நாளில் இருந்தே தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை தன் திட்டத்திலும் தீர்மானங்களிலும் போராட்டங்களிலும் கொண்டுள்ளது என்பதுதான் உண்மை. புதிய ஜனநாயகம் தொடங்கிய சில இதழ்களிலேயே ''தமிழகம் புறக்கணிக்கப்படுகிறது'' என்று அட்டைப்படச் சிறப்புக் கட்டுரை எழுதினோம்; பிறகு அது திராவிட இயக்கத்துக்கு வால்பிடிப்பது என்கிற மாற்றார்களின் அவதூறுக்குப் பதில் எழுதினோம். ''இந்து - இந்தி - இந்துஸ்தானம்'' என்கிற அடிப்படையை முதன்முதலாக விளக்கி நமது தோழமை ஏடான ''புதிய கலாச்சாரம்'' எழுதியது. இவை ஏறக்குறைய 9 ஆண்டுகளுக்கு முன்பு. அப்போது இந்த தன்னுரிமை முன்னணியே கிடையாது. அதன்பிறகு பல பிரச்சினைகளிலும் தன்னுரிமையை வலியுறுத்தி போராடி வந்திருக்கிறோம். இந்த மணியரசன் - நெடுமாறன் கும்பலைப் போல தன்னுரிமையை ஒரு பிழைப்புவாத வழியாக தெரிந்தெடுத்துக் கொண்டவர்கள் அல்ல நாம். ஆகவே தன்னுரிமை அவர்களின் இலட்சியமல்ல, எப்படி அவர்களின் பிழைப்புவாத வழியாக இருக்கிறது என்பதை அடுத்த இதழில் காண்போம். அதோடு ''புதிய ஜனநாயகம் - மார்வாடிகளுக்கு மறைமுக வக்காலத்து'' என்று தலைப்பிட்டுவிட்டு முன்னுரையாகவும் முடிவுரையாகவும் சம்பந்தமில்லாது ''புதிய ஜனநாயக''த்துக்கு எதிராக அக்கும்பல் எழுதியுள்ள அவதூறுகளுக்கும் பதிலைக் காண்போம். தொடரும்



படிப்பகம்

www.padippakam.com

# பஞ்சாப் முதல்வர் பேரனின் பாலியல் ரௌடித்தனம்

தீவிரவாதிகளின் கொலைப்பட்டியலில் உள்ள முக்கிய பிரமுகர்களின் குடும்பத்தாருக்குத் தரப்படும் போலீசு பாதுகாப்பைக் கேடாகப் பயன்படுத்திக் கொண்டு, பஞ்சாப் முதல்வரின் பேரன் நடத்திய காம வெறி ரௌடித்தனம் மெதுவாகக் கசிந்து இப்போது நாறத் தொடங்கியுள்ளது.

சுற்றுலாவுக்காக இந்தியா வந்துள்ள காடியா டோரண்ட் என்ற பிரெஞ்சு நாட்டு இளம் பெண் தனது நண்பர்களுடன் பஞ்சாபிலுள்ள மோஹாலி என்ற சிறு நகரத்தில் தங்கியிருந்தார். கடந்த ஆகஸ்ட் 31-ந் தேதியன்று இவரை வழிமறித்த பஞ்சாப் முதல்வரின் பேரனாகிய குர் கிரத் சிங், தன்னோடு இரவு தங்குமாறு அழைத்தான். அவர் மறுத்துவிட்டு ஓடி விடவே, அன்று நள்ளிரவில் அவரது அறைக் கதவை பஞ்சாப் போலீசு தட்டியது. போதை மருந்து பதுக்கி வைக்கப்பட்டுள்ளதா என்று சோதனையிட வந்ததாகப் புளுகிய போலீசார், காடியாவின் நண்பர்களைத் துப்பாக்கி மட்டையால் தாக்கிவிட்டு, அவரைப் பதிவெண் இல்லாத காரில் கடத்திச் சென்றனர். ஆயுதப் போலீசார் காவலில் இருந்த பங்களா ஒன்றில் அடைக்கப்பட்ட அவரிடம், குர்கிரத் சிங் தன்னை "பாபி" என்று அறிமுகப்படுத்திக் கொண்டு பாலியல் சேட்டைகளை ஆரம்பித்தான். அவனோடு அவனது நண்பர்களும் சேர்ந்து கொண்டு அப்பெண்ணை மானபங்கப்படுத்தியதுடன் கும்பலாக கற்பழிக்கவும் முயன்றனர். மறுநாள் அவரை வேறொரு விடுதிக்குப் போலீசு பாதுகாப்புடன் கொண்டு சென்றபோது, அவர்களிடமிருந்து தப்பித்த அப்பெண், தனது நண்பர்களோடு சேர்ந்து போலீசிடம் புகார் செய்தார்.

இக்காமவெறி கடத்தலின் பிரதான நாயகன் முதலமைச்சரின் பேரன்தான் என்பதை போலீசார் அறிந்திருந்ததால், புகாரைப் பதிவு செய்ததற்கு மேல் வேறெந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பின்னர், பிரெஞ்சுத் தூதரகம் மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு நெருக்குதல் கொடுத்த பிறகுதான், எட்டு நாட்கள் கழித்து குர்கிரத் சிங் கைது செய்யப்பட்டான். குற்றவாளிகளை அடையாளம் காட்டிய பின்னரும், "கற்பழிப்பா நடந்து விட்டது?" என்று திமிராகப் பேசி வருகிறார் முதல்வர் பியாந்த் சிங். பாதிக்கப்பட்ட அப் பெண் தொடர்ச்சியாக இங்கு தங்கி வழக்கைத் தொடர முடியாத நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, அப்பெண்ணிடம் நைச்சியமாகவும் மிரட்டியும் பேசி வழக்கை ரத்து செய்ய மாநில அரசும் போலீசாரும் முயன்று வருகின்றனர்.

முதல்வர் பியாந்த்சிங்கின் பேரன்கள் பெண்களிடம் முறைகேடாக நடப்பது முதன்முறையாக நடந்ததல்ல. கர்கிரத் சிங் என்ற மற்றொரு பேரன், தான் படித்த பள்ளியிலுள்ள மாணவிகள் சால்வார் கமீஸுக்குப் பதிலாக கவர்ச்சியான குட்டைப் பாவாடை அணிந்து வர வேண்டுமென தனது பாதுகாப்புப் போலீசாரைக் கொண்டு மிரட்டினான். முதல்வரின் மகள் வழிப் பேரனாகிய அமன்தீப், காமவெறி பிடித்து சில இளம் பெண்களைத் துரத்திச் சென்றபோது, அவர்கள் குருத்துவாராவில் தஞ்சம் புகுந்து தப்பித்தனர். மேலும் தற்போது கைதாகியுள்ள குர்கிரத்சிங் தான் தங்கியிருந்த விடுதிக்கு பல பெண்களை போலீசு துணையுடன் மிரட்டி இழுத்து வந்து காமக் களி வெறியாட்டம் போட்டு வந்ததாகவும் செய்திகள் வருகின்றன.

சீக்கிய தீவிரவாதத்தை முறியடிப்பது என்ற பெயரில் ஏற்கனவே பஞ்சாப் போலீசார் நடத்தி வரும் பாலியல் வன்முறைகளைப் பட்டியல் போட்டு மாளாது. அதுவும் போதாதென்று அரசியல் பிரமுகர்களின் வாரிசுகளும் இப்போது இறங்கி விட்டார்கள். இந்த லட்சணத்தில் பஞ்சாபில் தீவிரவாதத்தை முறியடித்து, அமைதியையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்டி விட்டதாகக் கூறி முதல்வர் பியாந்த்சிங்குக்கு அதி உயர்ந்த விருது அளிக்க வேண்டுமென அவரது எடுபிடிகள் கோரி வருகின்றனர், வெட்கக் கேடு!




பஞ்சாப் முதல்வர் பியந்த் சிங்குடன் அவரது பேரன் குர்கிரத் சிங். உள்ளே: பாதிக்கப்பட்ட சுற்றுலாப் பயணி காடியா டோரண்ட்

# அன்று வியட்நாம் இன்று இந்தியா

உயிரியல் தொழில் நுட்ப விஞ்ஞானத்தில் ஏற்பட்டுள்ள மாபெரும் முன்னேற்றத்தைச் சாதகமாக்கிக் கொண்டு பல்வேறு ஏகாதிபத்திய நிறுவனங்கள் புதிய வகைக் கொள்ளையில் இறங்கியுள்ளன. அந்துப் பூச்சி, வண்டுகள், வெட்டுக்கிளி, எறும்புகள் முதலான பூச்சி இனங்களை இந்தியாவிலிருந்து கடத்திச் செல்லும் ஏகாதிபத்திய நிறுவனங்கள், அவற்றின் உயிர் மூலக் கூறுகளைப் பகுத்து ஆராய்ச்சி செய்து, அவற்றுடன் புதிய வகை உயிர் மூலக்கூறுகளைச் சேர்த்து இப் பூச்சியினங்கள் புதியவகை முட்டைகளை இடுமாறு செய்கின்றனர். இம்முட்டைகளிலிருந்து வெளிவரும் பூச்சிகள் வெகுவிரைவில் பல்கிப் பெருகி பயிர்களை பெருமளவில் நாசம் செய்து விடும். பின்னர் இப்பூச்சிகளைக் கட்டுப் படுத்துவதற்கான தனிச்சிறப்பான பூச்சி மருந்துகளை ஏகாதிபத்திய நிறுவனங்கள் விற்பனை செய்வதன் மூலம் கொள்ளை லாபத்தை ஈட்ட முடியும்.

கடந்த ஆகஸ்ட் 15-ம் தேதியன்று டெல்லி விமான நிலையத்தில், 30,000-க்கும் மேற்பட்ட அந்துப் பூச்சி, வெட்டுக்கிளி, எறும்புகள், வண்டுகளைக் கொண்ட 4 அட்டைப் பெட்டிகளுடன் இரு ஜெர்மானியப் பயணிகள் கைது செய்யப்பட்டனர். இமாசலப் பிரதேசத்தில் ரோடாங் கணவாய் பகுதியில், உயிரியல் ஆராய்ச்சியாளர்கள் என்று கூறிக் கொண்டு வண்ணத்துப் பூச்சிகளைச் சேகரித்த இரு ஜப்பானியர்



படிப்பகம்

www.padippakam.com



கள் கடந்த மாத இறுதியில் கைதாயினர். இவர்கள் உயிர் மூலக்கூறு ஆராய்ச்சிக்காகவே இவற்றைக் கடத்திச் செல்ல முயன்றுள்ளனர் என்று இந்திய விவசாய ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானிகள் வெளிப்படையாக குற்றம் சாட்டியுள்ளனர்.

கடந்த ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் டெல்லியிலும் அதைச் சுற்றியுள்ள நோய்டா, காசியாபாத், பரிதாபாத் நகரங்களிலும் பெருமளவில் வெட்டுக்கிளிகள் படையெடுத்தன. மரங்கள், பயிர்கள், வீடுகள், வாகனங்கள் என எங்கு பார்த்தாலும் வெட்டுக்கிளிகள் மொய்த்தன. சூடான் நாட்டில்தான் இத்தகைய பசு மஞ்சள் நிற வெட்டுக்கிளிகள் உள்ளன. அவை எப்படி இந்தியாவுக்கு வந்தன என்று புரியாமல் விவசாய ஆராய்ச்சியாளர்கள் கவலை கொண்டனர். ஏனெனில் இத்தகைய புதிய வகை வெட்டுக்கிளிகளை அழிக்க நவீன மருந்துகள் இந்தியாவில் இல்லை. இவை "ராபி" பருவப் பயிர்களை பெருமளவில் நாசம் செய்து விட்டன. இது ஏகாதிபத்தியங்களின் ரகசியமான உயிரியல் யுத்தம் தான் என்று இந்திய விஞ்ஞானிகள் அறுதியிடுகின்றனர்.

வியட்நாம் போரின்போது அமெரிக்கா, "ஏஜெண்ட் ஆரஞ்சு" எனும் நச்சு ரசாயனப் பொடியை விமானம் மூலம் தூவி பயிர்களை நாசமாக்கிய போது உலகமே இக்கொடுஞ் செயலை எதிர்த்து குரலெழுப்பியது. ஆனால், இன்று நாட்டை விற்கும் துரோகிகளின் ஆட்சியில் எதிர்ப்பே இல்லாமல் அதே வகையான கொடுமை இந்தியாவில் நடந்தேறி வருகிறது.

## ஹெய்தி: அமெரிக்க ஆக்கிரமிப்பும் இந்தியாவின் விசுவாச சேவையும்

மத்திய அமெரிக்காவிலுள்ள சின்னஞ்சிறு நாடான ஹெய்தியில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவது என்ற பெயரில் அமெரிக்க வல்லரசு அந்நாட்டை முற்றுகையிட்டு ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. முன்பு சோமாலியாவில் நடந்தது போல அமெரிக்கப் படை வீரர்கள் கொல்லப்படுவார்கள் என்ற அச்சம் காரணமாக இந்நடவடிக்கைக்கு அமெரிக்க மக்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் ஹெய்தியைச் சுற்றி கடற்படைகளை நிறுத்தி அச்சுறுத்தி, முன்னாள் அமெரிக்க அதிபர் கார்ட்டர் மூலம், ஹெய்தியின் ராணுவ சர்வாதிகாரிகளுடன் ரகசிய பேச்சுவார்த்தை நடத்தி அமெரிக்கா ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

இதன்படி, ராணுவ ஆட்சியாளர்கள் அக்டோபர் 15-ந் தேதி பதவி விலக வேண்டும். அமெரிக்காவில் தஞ்சமடைந்துள்ள முன்னாள் அதிபர் அரிஸ்டைடிடம் அதிகாரத்தை ஒப்படைக்க வேண்டும். ராணுவ ஆட்சியாளர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும். அவர்கள் நாட்டை விட்டு ஓடத் தேவையில்லை. அமெரிக்கா தலைமையிலான 15,000-க்கும் மேற்பட்ட பன்னாட்டு அமைதிப் படைகளின் மேற்பார்வையில் ஜனநாயக சீரமைப்புப் பணிகள் நடைபெறும் என்று ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்வொப்பந்தப்படி, ஹெய்தியின் ராணுவ ஆட்சியாளர்கள் அக். 15-ந் தேதி வரை எந்த அட்டூழியம் செய்தாலும் அமெரிக்கா அதை கேள்வி கேட்காது. மேலும், இந்த ஒப்பந்தம் பற்றி முன்னாள் அதிபர் அரிஸ்டைடிடம் கலந்தாலோசிக்கவில்லை. ஹெய்தியிலுள்ள ஐ.நா தூதரிடமும் தெரிவிக்கவில்லை. தன்னைப் புறக்கணித்து விட்டு தன்னிச்சையாக அமெரிக்கா தலையிடுவதாக அரிஸ்டைடு புலம்புகிறார். ஐ.நா. தூதர் பதவி விலகி எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். ஆயினும் அமெரிக்காவின் அடாவடித்தனத்தை அதன் "ரப்பர் ஸ்டாம்ப்"பாகச் செயல்படும் ஐ.நா. மன்றம் அங்கீகரித்து ஆதரித்துள்ளது. இதுதான் அமெரிக்காவின் ஜனநாயத்தை நிலை நாட்டும் நடவடிக்கையாகும்.

உண்மையில், ஹெய்தியின் ராணுவக்கும்பலை வீழ்த்தி விரட்டுவது அமெரிக்காவின் நோக்கமல்ல. ராணுவக் கும்பலையும் முன்னாள் அதிபர் அரிஸ்டைடு கும்பலையும் மாறி மாறி மோதவிட்டு ஹெய்தியில் நிரந்தரமாகத் தலையிடும் கட்டைப் பஞ்சாயத்துக்காரனாக மேலாதிக்கம் செலுத்தவும், கியூபா உள்ளிட்டு மத்திய அமெரிக்க நாடுகளை மிரட்டிப் பணிய வைக்கவும்தான் அமெரிக்கா இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் இறங்கியுள்ளது.



"நாங்கள் சிங்கள மக்களின் எதிரியல்ல" பி.பி.சி. வானொலிச் செய்தியாளர் ஆனந்தியிடம் பேட்டியளிக்கும் பிரபாகரன்

இந்த அயோக்கியத்தனமான ஆக்கிரமிப்பை இந்திய அரசு ஆதரித்துள்ளதோடு, அந் நாட்டில் எதிர்ப்பாளர்களை ஒடுக்குவதற்காக அமெரிக்கப் படைக்கு உதவியாக 5000 பேர் கொண்ட இந்திய 'அமைதிப்படை'யையும் அனுப்பி உள்ளது. தற்போது ஹெய்தியிலுள்ள பன்னாட்டுப் படைகளில் இந்திய அமைதிப்படையே மிகப் பெரியதாகும். இது பற்றி நாடாளுமன்றத்தில்கூட தெரிவிக்காமல், விசுவாச சேவை செய்து வருகிறது, தேச விரோத ராவ் கும்பல். போலிக் கம்யூனிஸ்டுகள் உள்ளிட்டு எந்தவொரு ஓட்டுக்கட்சியும் இந்த வெட்கக் கேட்டை எதிர்த்து வாய் திறக்கவில்லை. நமது வரிப்பணத்தை உறிஞ்சிக் கொழுக்கும் இந்திய ராணுவத்தை அமெரிக்காவுக்குச் சேவை செய்ய அனுப்பும் அயோக்கியத்தனத்துக்கு இந்திய மக்கள் ஒரு போதும் துணை போக முடியாது. ஏகாதிபத்தியங்களுக்கு வெளிப்படையாகவே பாதபூஜை செய்யும் ராவ் கும்பலுக்கு எதிராக பெரும் படையாய்க் கிளர்ந்தெழ வேண்டும்.

## ஈழம்: இடைக்கால ஏற்பாடு தீர்வாகாது

இலங்கையின் புதிய பிரதமர் சந்திரிகா, யாழ்குடாப் பகுதியில் பொருளாதாரத் தடைகளை நீக்கி,



படிப்பகம்

www.padippakam.com

புலிகளுடன் சமாதானப் பேச்சு வார்த்தைக்குத் தயாராக உள்ளதாக அறிவித்துள்ளார். இதற்கென தனி தூதுக் குழு அமைத்துள்ளார். புலிகளும் நான்காண்டுகளுக்குப் பிறகு நடைபெறும் இப் பேச்சு வார்த்தையை வரவேற்றுள்ளனர். தாம் பிடித்து வைத்திருந்த சில சிங்கள இராணுவத்தினரை விடுதலை செய்தனர். அக்டோபர் மத்தியில் முதற்கட்ட பேச்சு வார்த்தை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அமைதிப் பேச்சு வார்த்தைக்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தும் வகையில் சிங்கள ராணுவம் முற்றாக போர் நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும் என்று புலிகள் கோருகின்றனர். சந்திரிகா அரசு இதை ஏற்க மறுத்து வரம்புக்குட்பட்ட ராணுவ நடவடிக்கைகள் நீடிக்கவே செய்யும் என்றும் இது சமாதானப் பேச்சு வார்த்தையை எவ்வகையிலும் பாதிக்காது என்றும் கூறுகிறார்.

இலங்கையில், வரும் நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள அதிபர் தேர்தலில் பிரதமர் சந்திரிகா போட்டியிட உள்ளார். சிங்களர் மட்டுமின்றி தமிழ் மக்களின் ஆதரவும் தேவை என்பதால், ஆரம்ப சூரத்தனங்களுடன் தன்னை சமாதானத் தூதுவராகக் காட்டிக் கொள்கிறார். இந்நிலையில் அரசியல் முன்முயற்சியைப் பெறவும், உலக அரங்கில் தனிமைப்படாமல் இருக்கவும், புலிகளும் பேச்சு வார்த்தைக்கு முன் வந்துள்ளனர்.

இதற்கிடையே தமிழ் மீனவர்களைத் தொடர்ந்து தாக்கி தொல்லைப் படுத்தி வந்த இலங்கை கடற்படையின் போர்க்கப்பலை கடந்த செப்டம்பர் 19-ந் தேதி கடற்புலிகள் தாக்கி அழித்தனர். இதற்குப் பதிலடியாக ஒரு வாரத்திற்குள், பலாலி அருகில் 30 புலிகளை சிங்கள ராணுவம் கொன்றுள்ளது. சமாதான முயற்சிக்கு சந்திரிகா அரசு விரும்பினாலும் சிங்கள இனவெறி ராணுவம் அதற்குத் தயாராக இல்லை; பாசிச முறையில் பயிற்றுவிக்கப்பட்ட சிங்கள இனவெறி ராணுவத்தை மீறி சந்திரிகா, சுதந்திரமாக செயல்படவும் முடியாது என்பதையே இத்தாக்குதல் நிரூபித்துக் காட்டுகிறது.

மறுபுறம், யாழ்குடாப் பகுதியிலுள்ள தமது இணையான அரசை ஏற்று அங்கீகரிக்கும் பட்சத்தில் ஓர் இடைக்கால ஏற்பாட்டுக்குத் தயாராக இருப்பதாக புலிகளின் முக்கிய பிரமுகரான ஆன்டன் பாலசிங்கம் பேட்டியளித்துள்ளார். இதேபோல புலிகளின் தலைவர் பிரபாகரன், நாங்கள் சிங்கள மக்களை நேசிக்கிறோம்; நாங்கள் அம் மக்களின் எதிரி அல்ல; சிங்கள மக்கள் இனவெறி சக்திகளைத் தனிமைப்படுத்த வேண்டும் என்று அறைகூவல் விடுத்துள்ளார். ஆனால் இத்தனை காலமும் அத்தகையதொரு முயற்சிக்கு புலிகள் கடுகளவு கூட முயற்சித்ததில்லை. அப்பாவி சிங்கள சிவிலியன்களை மட்டுமல்ல, முஸ்லீம்களையும் வடக்கு மாகாணத்திலிருந்து விரட்டியும் மிருகத்தனமாக படுகொலை செய்தும் வெறியாட்டம் போட்டுள்ளனர் என்பதே யாவரும் அறிந்த உண்மை.

இரு வேறுபட்டட இனங்கள் உள்ள ஒரு நாட்டில் ஒடுக்கும் பெருந்தேசிய இனம் உழைக்கும் மக்களின் ஆதரவின்றி, ஒடுக்கப்படும் தேசிய இன மக்கள் எந்தவொரு உரிமையையும் ஒரு போதும் பெற முடியாது. இதே காரணத்தால் தான், நீண்ட நெடுங்காலமாக சுய நிர்ணய உரிமைக்குப் போராடி வந்த அயர்லாந்து விடுதலை இயக்கமான "சின்ஃபின்", ஒடுக்கும் பெருந்தேசிய இனமான இங்கிலாந்து மக்களின் ஆதரவைப் பெறத் தவறியதால், இப்போது விரக்தியும் சோர்வும் அடைந்து, ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு சமரச சரணடைவுப் பாதையில் வீழ்ந்துள்ளது. எனவே, சிங்கள உழைக்கும் மக்கள் தமிழீழ மக்களின் சுய நிர்ணய உரிமையை தார்மீக ரீதியில் ஏற்குமளவுக்குக் கூட இல்லாத நிலையில், புலிகளும் சந்திரிகா அரசும் ஓர் இடைக்கால ஏற்பாட்டைச் செய்தால் கூட அது நிலைத்து நிற்காது. மீண்டும் இனவெறிக்கும் துரோகத்துக்குமே அது இட்டுச் செல்லும். அதோடு புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் எந்த வகையான தீர்வைக் கண்டாலும் அது ஈழம் ஒரு பாசிச ஆதிக்கத்தின் பிடியில் இருந்து விடுபட்டதாகாது. இந்தப் படிப்பினைகளை தமிழீழ மக்கள் உணர்ந்து சிங்கள உழைக்கும் மக்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெறும் வகையிலும் ஈழத்தில் ஒரு ஜனநாயக அமைப்பை ஏற்படுத்தும் வகையிலும் செயல்பட வேண்டியது இன்றைய அவசரத் தேவையாக உள்ளது.

## ஈரச்சாணி இறக்குமதிக்கு எதிராக ஆர்ப்பாட்டம்



மாட்டு சாணம் இறக்குமதியை எதிர்த்து மாடு, சாணியுடன் டில்லியில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

ஹாலந்து நாட்டிலிருந்து இந்திய அரசு 30 லட்சம் டன் ஈரச்சாணியை இறக்குமதி செய்யும் அநியாயத்தை எதிர்த்து, டெல்லி பால்வள யூனியனைச் சேர்ந்த விவசாயிகள், "நாங்கள் 15,000 டன் ஈரச்சாணியை இலவசமாகத் தருகிறோம். அரசு ஏற்கத் தயாரா?" என்று போர்க்கொடி தூக்கியுள்ளனர். அண்மையில் மாட்டு வண்டிகளில் சுதேசி சாணியை ஏற்றிக் கொண்டு, "இந்தியச் சாணி இலவசம்! இலவசம்!" என்று முழங்கிய படியே நாடாளுமன்றத்தில் கொட்டுவதற்காக அவர்கள் ஊர்வலமாகச் சென்றனர். ஆனால் டெல்லி போலீசார் இந்த நூதன ஊர்வலத்தை நகரினுள் நுழையவிடாமல் யமுனைக் கரையிலேயே மறித்து, அவர்கள் மீது தடியடி நடத்திக் கைது செய்துள்ளனர். ஏகாதிபத்திய விசுவாசிகளான எருமைத் தோல் கொண்ட ஆட்சியாளர்களுக்குப் புரியும் மொழியில் போராட்டம் நடத்தியுள்ள விவசாயிகள், அடுத்த கட்டமாக தமது மாடுகளுடன் மறியல் செய்யப் போவதாக அறிவித்துள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com

# மின் வாரியத்தின் அடக்குமுறை

தமிழ் நாடு மின்சார வாரியத்தில் கடந்த 19.1.94 அன்று 84 ஆயிரம் தொழிலாளர்களுக்காக வேலைப்பளு மற்றும் ஊதிய உயர்வு தொடர்பான ஒப்பந்தம் சில துரோகத் தொழிற்சங்கங்களால் போடப்பட்டது. ஒப்பந்தத்தின் மூலம் 52,193 புதிய பதவிகளை ரத்து செய்தும் 'தேசிய உற்பத்தித் திறன் குழு'' பரிந்துரையின் படி சுமார் 40 ஆயிரம் தொழிலாளர்களை ஆட்குறைப்பு செய்ய ஒத்துக் கொண்டும் தொழிலாளர்களின் முதுகில் மேலும் 28% முதல் 130% வரை வேலைப்பளுவினை உயர்த்தியும் தொழிலாளர்களுக்கு விரோதமாக செயல்பட்டன. ஏ.இ.எஸ்.யு. (AESU), சம்மேளனம் போன்ற நிர்வாக கைக்கூலி சங்கங்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதோடு இதற்கு வக்காலத்து வாங்கிப்பேசி நடைமுறைப்படுத்துவதற்கு தீவிரமாகவும் முயற்சித்து வருகின்றன. சி.ஐ.டி.யு. (CITU), சங்கம் சடங்கு முறையாக எதிர்ப்பினை காட்டி வருகிறது. பிற ஓட்டுக் கட்சி சங்கங்களோ மௌனம் சாதிக்கின்றன.

தமிழ்நாடு மின்வாரிய மதிப்பீட்டுப் பணியாளர் சங்கம் (A.S.U.), ''கேட்டகிரி'' சங்கமாக இருந்தபோதிலும் தொழிலாளர் விரோத ஒப்பந்தத்தை எதிர்த்துப் போராடி வருகிறது. ஒப்பந்தத்திற்கு முன்பிருந்தே அனைத்துத் தொழிலாளர்களுக்கும் சம ஊதியம், பத்தாண்டு முடிந்த தொழிலாளர்களுக்கு பதவி உயர்வு போன்ற கோரிக்கைகளுக்காகப் போராடியது. ஊதிய உயர்வு என்பது நாட்டில் நிலவும் விலை வாசி, மனித வாழ்நிலைக்கான சூழல் - தேவை, தொழிலாளர்களின் சக்தி விரயம் ஆகியவற்றின் அடிப்படையில் இருக்க வேண்டுமே தவிர, வேலைப்பளுவோடு இணைத்துப் பேசக் கூடாது போன்ற முழக்கங்களை வைத்து போராட்டத்தில் ஈடுபட்டது.

பெருகி வரும் மின் இணைப்புகளுக்கு இணையாக மதீப்பீடு பணியாளர்களை மின்வாரியம் புதிதாக நியமிப்பதில்லை. 89-க்குப் பின் 4 வருட காலமாக ஆள் எடுக்கப்படவில்லை. இதனால் கூடலூர், திருப்பூர், தர்மபுரி, பெரியார், திருவண்ணாமலை பகுதிகளில் சுமார் 5 லட்சம் பயனீட்டாளர்களின் மின் அளவீடு வருடக்கணக்கிலும் கணக்கிடப்படாமல் உள்ளன. இதுவல்லாமல் வசூலாகாத தொகையை வசூலிப்பது, புதிய இணைப்புகளைக் கொடுப்பது, பழுது - பராமரிப்பு வேலைகள் கூடுவது என வேலைப் பளு அதிகரித்தே வருகிறது. இவற்றையெல்லாம் இருக்கும் தொழிலாளர்கள் மீதே திணித்துக் கூடுதல் நேரத்தில் வேலை வாங்கிக் கொள்கிறது, நிர்வாகம். இந்த ஆண்டு 1000 பேர் புதிதாக ஆள் எடுப்பதாக அறிவித்திருப்பதுகூட யானை வாய்க்குப் போடும் சோளப் பொரி மாதிரியாகவே இருக்கும். ஏற்கனவே சுமார் 5000 பணியிடங்கள் காலியாக உள்ளன. இந்நிலையில் தனியார்மயம், நவீனமயம் என்ற பெயரில் ஆட்குறைப்புவேறு நடக்கிறது.

எனவே, ஏ.எஸ்.யு., ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுத்ததுடன் எதிர்ப்புத் தெரிவித்து 15.2.94-இல் வேலை நிறுத்தமும் 8.7.94-இல் கண்டன ஆர்ப்பாட்டமும் 15.7.94-இல் மீண்டும் வேலை நிறுத்தமும் 8.8.94-இல் வெற்றி கிட்டும் வரை தொடர் உண்ணாவிரதப் போராட்டமும் நடத்தியது. இதனால் சங்கப் பொறுப்பாளர்கள் 66 பேர் சென்னை போலீசால் கைது செய்யப்பட்டனர். சிறையிலும் நான்கு நாட்கள் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

தற்போது சங்கப் பொறுப்பாளர்கள் நிர்வாகத்தினால் தர்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட நிலையிலும் உறுதியுடன் எந்த ஓட்டுக்கட்சியையும் சாராது போராடி வருகின்றனர். ஏ.எஸ்.யு-சங்கம் நிர்வாகத்தின் அச்சுறுத்தல், பழிவாங்குதல், குழப்புதல் போன்ற தாக்குதலுக்கு எதிராக இன்று வரை சமரசமின்றி போராடி வருவதால் தொழிலாளர்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளது. போராட்டத்தை பிற துரோகத் தொழிற்சங்கங்களைப் போல் வெட்டிக் குறுக்கி விடாமல் பரந்துபட்ட மக்களிடமும் எடுத்துச் செல்வதோடு தனியார்மயம் போன்ற புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவுகளுக்கு எதிராகவும் போர்க்குரலை ஒருங்கிணைக்க வேண்டும்.

— தகவல்: பகலவன், மதுரை

# மதுரை போலீசின் மற்றொரு கொலை

போலீசு மிருகங்களின் கோரப் பசிக்கு மதுரையில் இன்னொரு அப்பாவியின் உயிர் பலியாகியிருக்கிறது. மதுரை, தெற்குவெளி வீதியில் ஒரு கோயில் சொத்து தொடர்பாக ஒரே 'சமூகத்தைச் சேர்ந்த இரு கோஷ்டிகளுக்கிடையே மோதல் நிலவி வருகிறது. உயர் நீதிமன்றத்தில் வழக்கும் ஆர்.டி.ஓ. விசாரணையும் இது தொடர்பாக நடந்து வருகிறது. கடந்த 9.9.94 அன்று கோயிலில் நுழைந்தது தொடர்பாக சுப்பு மற்றும் முருகன் (25) இருவருக்குமிடையே தகராறு ஏற்பட்டு, சுப்பு போலீசு நிலையத்தில் புகார் கொடுத்தார். 10.9.94 அன்று ராமசுப்பு என்பவர் தலைமையில் வந்த போலீசு பட்டாளம் மீனாட்சி திரையரங்கு அருகில் முருகனை பிடித்துத் தாக்கி இழுத்துச் சென்றது. போலீசு நிலையத்தின் வாயிற்படியில் வைத்தே பலமாக தாக்கினர். பின்னர் நிலையத்திற்குள் இழுத்துச் சென்றும் கண்மூடித்தனமாகத் தாக்கி, இறந்து விடுவார் என்று தெரிந்தவுடன் பாண்டிய வேளார் தெரு அருகே கொண்டுவந்து போட்டுவிட்டனர். சிறிது நேரத்தில் இறந்து போன முருகனை நண்பர்கள் தான் வீட்டிற்கு கொண்டு சேர்த்துள்ளனர்.

முருகன் இறந்த செய்தி கிடைத்ததும் போலீசார் முருகன் வீட்டிற்கு வந்து மிரட்டி பிணத்தை உடன் எரிக்கும்படி செய்தனர். இதற்குண்டான காரியங்களை செய்ய அடியாட்படையை விட்டு வைத்துச் சென்றனர். முருகனின் குடும்பத்தினரை போலீசு நிலையத்திற்கு அழைத்துச் சென்று குடிபோதையில் இறந்ததாக எழுதி வாங்கிக் கொண்டது, போலீசு. மேலும் முருகன் தாக்கப்பட்டதைப் பார்த்த சாட்சிகளையும் போலீசு மிரட்டி வருகிறது.

— தகவல்: பு.மா.இ.மு., மதுரை


வாழும் உரிமையை
வழங்க மறுக்கும்
போலி ஜனநாயகத்தை
புரிய வைக்கும் ஒரு நூல்

—எமது முதல் வெளியீடாக—

**கோவிந்த முக்கோத்தி-இன்**
**வதைக்கப்படும் மக்களும்**
**புதைக்கப்படும் உரிமைகளும்**

விலை: ரூபாய் ஏழு

(அஞ்சலில் பெற விரும்புவோர் நூல் விலையுடன் பதிவஞ்சல் கட்டணம் ரூ.8/- சேர்த்து எமது முகவரிக்கு ''மணி ஆர்டர்'' செய்யவும்)

**கீழைக்காற்று**
வெளியீட்டகம்
10, ஔலியா சாகிப் தெரு
எல்லீசு சாலை, சென்னை - 2.




படிப்பகம்

www.padippakam.com

# ''கோலா''க்களின் யுத்தம் 'சுதேசி'களின் கேலிக்கூத்து

''இந்தியனாய் இரு! இந்தியப் பொருட்களையே வாங்கு! என்று முழக்கம் இன்று கேலிக்குரியதாகிவிட்டது'' என்று எழுதுகிறது காங்கிரசு ஆதரவு நாளேடான ''டைம்ஸ் ஆப் இந்தியா'' வெளிநாட்டுக் கூட்டு இல்லாமல், இந்தியர்களைத் தவிர வேறு எதையும் இந்தியர்களால் இனி உற்பத்தி செய்ய முடியாமல் போய் விடுமோ?'' என்கிறது 'பிசினஸ் வேர்ல்டு' எனும் ஆங்கில இதழ். இப்படி அவர்களே வெட்கப்படும் அளவுக்கு அன்னியக் கூட்டுக்களில் இறங்கி விட்டது துரோகி ராவ் கும்பல். மிக அரிதான, நாட்டுக்கு மிக அவசியமான தொழிற் கூட்டு என்றால் கூட அவர்களால் நியாயப்படுத்த முடியும். ஆனால் மிட்டாய், குளிர்பானம், ஐஸ்கிரீம், உருளைக்கிழங்கு வறுவலுக்குக்கூட அன்னியக் கூட்டுக்கும் நேரடி முதலீட்டுக்கும் தாராள அனுமதியளித்து நாட்டைத் தவணை முறையில் ஏலம் போட்டு வருகிறது இக்கும்பல்.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல, உலகின் மிகப்பெரிய குளிர்பான நிறுவனமான கோகோ கோலா இந்தியாவில் மீண்டும் காலூன்றிவிட்டது. 1977-ல் அன்றைய ஜனதா ஆட்சிக்காலத்தில் இந்தியா வெளியேற்றிய அமெரிக்காவின் பன்னாட்டு நிறுவனமான கோகோ கோலா இப்போது எவ்விதக் கட்டுப்பாடுகளுமின்றி 100% நேரடி முதலீடு செய்துள்ளது. எட்டாண்டுகளுக்கு முன்பு பாசிச ராஜீவ் ஆட்சிக் காலத்தில் உலகின் குளிர்பான விற்பனையில் இரண்டாவது இடத்தை வகிக்கும் பெப்சி கோலா, வோல்டாஸ் நிறுவனத்துடன் கூட்டுச் சேர்ந்து ஏற்கனவே இங்கு வேரூன்றியுள்ளது. அதுவும் போதாதென்று, உலகின் குளிர்பான விற்பனைச் சந்தையில் 46% -ஐக் கைப்பற்றியுள்ள பன்னாட்டு பகாசுர நிறுவனமான கோகோ கோலாவும் இப்போது அனுமதிக்கப்பட்டுள்ளது. ''நீ இங்கு மீண்டும் வந்ததில் மகிழ்ச்சி!'', ''அனுபவியுங்கள் கோகோ கோலா!'' முதலான முழக்கங்களுடன் பெருநகரங்களில் சிவப்புச் சட்டை அணிந்த சிறுவர்களைக் கொண்டு ஊர்வலம் நடத்தி, மக்களைக் கவர்ந்திழுக்கிறது கோகோ கோலா.

கோகோ கோலா வெறுமனே வெளிநாட்டு குளிர்பானமல்ல; அது அமெரிக்க ஆதிக்கத்தின் அடையாளச் சின்னம். அதன் வருகையால் இந்தியாவிலிருந்த பெயரளவிலான 'சுதேசி' குளிர்பான நிறுவனங்கள் நலிவடைந்து முடங்கி விட்டன; அல்லது கோகோ கோலாவின் ஒரு அங்கமாகிவிட்டன. இதற்கு முன்பு இந்தியாவின் குளிர்பான விற்பனையில் முன்னணி வகித்த 'தம்ஸ்-அப்', இன்று கோகோ கோலாவின் ஒரு அங்கமாக மாறிவிட்டது. இதைக் கண்ட பெப்சிகோலா, பம்பாயில் பிரபலமான ''டியூக்'' குளிர்பான நிறுவனத்தை விழுங்கி விட்டது. இன்று பன்னாட்டு நிறுவனங்களான பெப்சியும், கோகோ கோலாவும் தான் களத்தில் நிற்கின்றன.

குளிர்பானங்கள் மட்டுமல்ல; அனைத்துப் பெருந்தொழில் நிறுவனங்களும் கூடப் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களால் விழுங்கப்படுகின்றன; அல்லது அதனுடன் இணைக்கப்படுகின்றன. கடந்த ஆறு மாதங்களில், ஹெயின்ஸ் நிறுவனம் குழந்தை உணவு தயாரிக்கும் கிளாஸ்கோ நிறுவனத்தை விழுங்கியது. கோல்கேட் நிறுவனம், பற்பசை-பற்குச்சி தயாரிக்கும் சிபாகாவை இணைத்துக் கொண்டது. பெரும் தரகு முதலாளியான டாடா, தனது டாம்கோ நிறுவனத்தை இந்துஸ்தான் லீவர் நிறுவனத்துடன் இணைத்து விட்டார். கெல்வினேட்டர் நிறுவனம் விர்பூல் நிறுவனத்தால் கபளீகரம் செய்யப்பட்டுள்ளது.

பன்னாட்டு நிறுவனங்களின் படையெடுப்பால் இந்தியக் கம்பெனிகள் தாக்குப் பிடிக்க முடியாத சூழ்நிலை மட்டுமல்ல; சுற்றுப்புற சூழலும் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது

அமெரிக்காவில் பெப்சி குளிர்பானத்தைக் குடித்துவிட்டு வீசியெறிப்படும் பிளாஸ்டிக் டப்பாக்களும் குப்பிகளும் டன் கணக்கில் இந்தியாவில் - அதுவும் தமிழகத்தில் கொண்டு வந்து கொட்டப்படுகிறது. சென்னை அருகே திருவள்ளூரிலுள்ள ''ஃப்யூச்சரா இண்டஸ்ட்ரீஸ்'' எனும் ஆலையில் மலைபோல் குவிந்து கிடக்கும் பெப்சி டப்பாக்கள், பாதுகாப்பற்ற முறையில் சுத்தம் செய்யப்பட்டு சிறு சிறு துகள்களாக (ஸ்கிராப்) மாற்றப்படுகின்றன. பின்னர் இந்த ஸ்கிராப் மணலியிலுள்ள வேறொரு ஆலைக்கு அனுப்பப்பட்டு, மீண்டும் பிளாஸ்டிக் பொருட்களாக மறுஉருவாக்கம் செய்யப்படுகிறது.



''பெட்'' எனச் சுருக்கமாகக் குறிப்பிடப்படும் பாலி எத்திலீன் டெரிப்தாலேட் என்ற ரசாயனத்தால் செய்யப்பட்ட பெப்சி டப்பாக்களைத் தயாரிக்கும் போது ஏற்படுகிற சுற்றுச்சூழல் பாதிப்பை விட, இவற்றைத் துகள்களாக்கி மறுஉருவாக்கம் செய்யும் போது ஏற்படும் பாதிப்பு மிகக் கொடியது. பெப்சி-கோலா டப்பா புகையால் தோல் எரிச்சல், வெடிப்பு, கண்கள், நுரையீரல் பாதிப்புகள் ஏற்படும்.

ஆண்டுக்கு 55 லட்சம் டன் பிளாஸ்டிக் பொருட்களைத் தயாரிக்கும் அமெரிக்காவில், ஒருமுறை பயன்படுத்திய பிறகு தூக்கியெறியும் பிளாஸ்டிக் குப்பைகளைக் குவித்து வைக்க போதிய இடமில்லை. இவற்றைக் கடலில் கொட்டியோ மண்ணில் புதைத்தோ அழிக்கவும் முடியாது. எரித்தாலும் நச்சுப்புகையால், சுற்றுச்சூழல் பாதிக்கும். பாதுகாப்பான முறையில் எரிக்க டன் ஒன்றுக்கு ஏறத்தாழ ஒரு லட்ச ரூபாய் செலவாகும். மேலும் ''பெட்'' ரக பிளாஸ்டிக் பொருட்களை மீண்டும் ரசாயனப் பொருளாக்கும் ரீ-சைக்கிளிங் வேலைக்கு டன் ஒன்றுக்கு சுமார் ரூ.5000 வரை தான் செலவாகும்.

எனவேதான் அமெரிக்காவில் ஆபத்தான, சுற்றுச்சூழலைப் பாதிக்கக் கூடிய அதிக செலவு பிடிக்கக்கூடிய பிளாஸ்டிக் குப்பைகளை அழிக்கும் வேலையை இந்தியா போன்ற ஏழை நாடுகளின் தலையில் கட்டிவிடுகின்றனர். ஏகாதிபத்தியங்களோடு கூட்டு சேர்ந்துள்ள தரகு நிறுவனங்கள் மூலம் இந்தியா மட்டுமின்றி உலகெங்குமுள்ள ஏழை நாடுகளுக்கு இவ்வாறு பிளாஸ்டிக் குப்பைகளை டன் கணக்கில் ஏற்றுமதி செய்து, அந்நாடுகள் அமெரிக்காவின் குப்பைத் தொட்டியாக மாற்றப்படுகின்றன.

இந்த உண்மைகளை அறிந்திருந்த போதிலும் ஓட்டுக் கட்சிகள் அனைத்தும் ராவ் கும்பலின் தாராளமயக் கொள்கைக்குச் சடங்குத்தனமான எதிர்ப்பு தெரிவித்துவிட்டு சமரசமாகிப் போய்விட்டன. நாட்டை மறு அடகு வைக்கும் ராவ் கும்பலுக்கு எதிரான மாற்றுக் கொள்கையோ திட்டமோ இக்கட்சிகளிடம் கிடையாது. ஆனாலும் எதிர்க்கட்சிகளாய் இருப்பதால், ஓட்டுப் பொறுக்கும் நோக்கத்தோடு, பன்னாட்டு ஏகபோக நிறுவனங்



படிப்பகம்

www.padippakam.com

களை எதிர்ப்பதாகக் கூறி சுதேசி கேலிக் கூத்துக்களை நடத்தி வருகின்றன.

பன்னாட்டு தொழிற்கழகங்களுக்கு எதிராக ''சுதேசி ஜக்ரான் மஞ்ச்'' எனும் அமைப்பின் கீழ் பற்பசை, உருளைக்கிழங்கு வறுவல் முதலான நுகர்பொருட்களை ஆகஸ்ட் 15 முதல் விற்கப் போவதாக இந்துவெறி ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் அறிவித்தன. அகமதாபாத்திலுள்ள மகளிர் அமைப்பு தயாரிக்கும் ''லிஜ்ஜத்'' அப்பளம், ஊறுகாய்களையும் உள்ளூர் சிறு விற்பனையாளர்களின் இத்தகைய நுகர்பொருட்களையும் வீடுவீடாக விற்பனை செய்யப்போவதாகவும் அறிவித்தனர். பெப்சியின் உருளைக்கிழங்கு வறுவல் 100 கிராம் ரூ.19.00 எனில், தமது சுதேசி வறுவல் ரூ.6.00 க்கு விற்கப்படும் என்று ஆரவாரம் செய்தனர்.

கடந்த ஆண்டு இதே போல ''ப்ராமிஸ்'' எனும் 'சுதேசி' பற்பசையைப் பிரபலப்படுத்தி இவர்கள் விளம்பரம் செய்தனர். ஆனால் இன்று இந்த பற்பசை நிறுவனம் ''ப்ராக்டர் அண்டு கேம்பிள்'' எனும் பன்னாட்டு நிறுவனத்தின் ஓர் அங்கமாகிவிட்டது. ஆர்.எஸ்.எஸ். கோமாளிகள் இனி கோபால் பல்பொடியையும், சந்திரிகா சோப்பையும் பிரபலப்படுத்துவார்களா என்று தெரியவில்லை. சேவைத் துறைகள் கூட இன்று காட் மற்றும் ஐ.எம்.எப் நிபந்தனைகளின் படி பன்னாட்டு நிறுவனங்களுக்குத் திறந்துவிடப்படும் நிலையில், நாளை லிஜ்ஜத் அப்பளமும், சந்திரிகா சோப்பும் பன்னாட்டு நிறுவனங்களின் ஓர் அங்கமாக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆர்.எஸ்.எஸ். கும்பலைப் போலவே, ஜனதா தள(ஜி) தலைவரான ஜார்ஜ் பெர்னாண்டஸ் ஆகஸ்ட் 14 அன்று பம்பாயில் கோகோ கோலா - பெப்சிக்கு மாற்றாக புதிய சுதேசி குளிர்பானத்தை நிறுவப்போவதாக அறிவித்தார். நலிவடைந்த உள்நாட்டுக் குளிர்பான நிறுவனங்களின் கூட்டு முயற்சியாக இந்த சுதேசி பானம் அமையும் என்றும் ''சமஜ்வாடி அபியன்'' எனும் அமைப்பின் கீழ் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படும் என்றும் ஆரவாரம் செய்தார். கடைசியில் இந்தத் திட்டம், இன்னுமொரு சுதேசி கேலிக் கூத்தாக புஸ்வாணமாகிவிட்டது. சுருக்கமாகச் சொன்னால், போலிக் கம்யூனிஸ்டுகள் உள்ளிட்டு எந்தவொரு ஓட்டுக் கட்சியும், ''நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ''காட்'' அமைப்பிலிருந்து இந்தியாவை விடுவிப்போம்; பன்னாட்டு நிறுவனங்களை வெளியேற்றுவோம்'' என்று வெற்று வாக்குறுதி அளிக்கக் கூடத் தயாராக இல்லை.

மறு உருவாக்கத்திற்கான பெப்சி டப்பாக்கள்; குப்பைத் தொட்டியா இந்தியா?



ஆக ரோத்தமான்ஸ், செஸ்டர்ஃபீல்டு-சிகரெட்டுகள்பாட்டா-அடிடாஸ்-ஹுரா காலணிகள், உடுப்புகள், பெப்சி கோகோ கோலா குளிர்பானங்கள், தயார் நிலை உணவு வகைகள், டிஸ்கோ நடன அரங்குகள் - இந்தத் திசையில்தான் ''தேசிய'' பொருளாதார, கலாச்சார வாழ்க்கையை அமைக்க அவர்கள் துடிக்கிறார்கள். வறுமைக் கோட்டுக்குக் கீழே வாடும் நாட்டின் 50% மக்கள் இவற்றில் எதையுமே தொட்டுக்கூட பார்க்க முடியாது. சினிமாவிலும் தொலைக்காட்சியிலும் பார்த்து ஏங்கத்தான் முடியும்.

ஐந்து நட்சத்திர விடுதிகளிலே, நீச்சல்குளக்கரையிலே, டிஸ்கோ, நடன அரங்குகளிலே நொறுக்குத் தீனி தின்று கொண்டே, பெப்சி - கோக் உறிஞ்சிக் கொண்டே, சிகரெட்டுகளைப் புகைத்துத் தள்ளும் நாட்டின் 5 சதவீதமே உள்ள அந்த மேட்டுக் குடிமக்கள் சுகபோகமாக வாழ்வதற்கு ஆட்சியாளர்கள் மேலும் பல வசதிகள் செய்து தருகிறார்கள். இந்தியக் கடற்கரைகளிலிருந்து மீனவர்கள் விரட்டியடிக்கப்பட்டு நிர்வாண கேளிக்கை விடுதிகள் நிறுவப்படுகின்றன. வெளிநாடுகளிலிருந்து ஆபாசத் திரைப்படங்களும் கலர் வீடியோக்களும் இறக்குமதியாகின்றன.

அந்நிய மோகம் இப்போது அந்நிய வெறியாக மாறிவிட்டது. ஐந்து சதவீத மேட்டுக் குடிகளின் இந்த வெறி, வெம்பிப் பழுத்த நடுத்தர வர்க்கத்தின் செல்லப் பிள்ளைகளையும், உதிரிப் பாட்டாளி வர்க்க இளைஞர்களையும் தொற்றிக் கொண்டு விட்டது. கடலிலே மிதக்கும் குளிர்பான மூடியின் மீது முக்கால் நிர்வாணமாகக் கும்மாளமடிக்கும் இளைஞர்களும் பெண்களும்; ஒரே பாட்டிலில் ஆணும் பெண்ணும் உறிஞ்சிக் குடிக்கும் நகர்ப்புற விளம்பரப் பலகைகள்; அருவியோரங்களில், நடன அரங்குகளில் ஆணும் பெண்ணும் ஆடிக் கொண்டே பொங்கி வழியும் குளிர் பானத்தைச் சுவைக்கும் விளம்பர சினிமா. இந்த அந்நிய மோகத்தின் நேர் விளைவுதான் பெப்சி-கோகோ கோலா சீரழிவுக் கலாச்சாரம்.

## கோகோ கோலாவில் சாராயம்

அமெரிக்காவில் கோகோ கோலா குளிர்பானத்தில் ஆல்கஹால் (சாராயம்) கலக்கப்பட்டுள்ளதென்று மார்க் பெண்டர்கிராஸ்ட் என்னும் ஆய்வாளர் ''கடவுளுக்காக, நாட்டிற்காக, கோகோ கோலாவிற்காக'' எனும் நூலில் அம்பலப்படுத்தியுள்ளார். கடந்த ஆண்டு ஆகஸ்ட் முதல் நாளன்று பிரிட்டனின் ''சன்டே டைம்ஸ்'' நாளேடு இத்தகவலை வெளியிட்ட போது, கோகோ கோலா நிறுவனம் பெண்டர்கிராஸ்ட் கூறும் பார்முலா (தயாரிக்கும் முறை) தவறானது என்று கூறியது. கோகோ கோலாவின் பார்முலா ஒரு நூற்றாண்டு காலமாக ரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளதால், பெண்டர்கிராஸ்ட் கூறும் பார்முலா போலியானது என்று வாதிட்டது.

ஆனால் 'சன்டே டைம்ஸ்' பத்திரிகை, பெண்டர்கிராஸ்ட் அளித்த பார்முலாவின்படி ஒரு கோகோ கோலா வைத் தயாரித்தது. குளிர்பான சுவை நிபுணர்கள் 10 பேரை அழைத்து அவர்களிடம் ஒரிஜினல் கோகோ கோலா, தான் தயாரித்த கோகோ கோலா, பெப்சி மற்றும் பிற குளிர்பானங்களை அவற்றின் பெயரை மறைத்து அருந்தச் சொல்லியது. தாங்கள் குடித்த பானம் எது என்று அவர்களிடம் கேட்ட போது, பெரும்பாலோர் சன்டே டைம்ஸ் தயாரித்ததுதான் கோகோ கோலா என்று கூறியுள்ளனர். இது தவிர, மலேசியாவில் இயங்கும் நுகர்வோர் சங்கம், கோகோ கோலாவில் ''கிளிசரீன்'' எனும் மிருகக் கொழுப்பு இருக்கக்கூடும் என சில சோதனைகளிலிருந்து கூறுகிறது. கோகோ கோலாவில் சாராயம், கிளிசரீன் அடங்கியிருப்பதை அதன் தயாரிப்பாளர்கள் திட்டவட்டமாக மறுக்கவில்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் குடிதண்ணீருக்காக மைல் கணக்கில் மக்கள் அலைகிறார்கள். வறுமையும் வறட்சியும் காரணமாக பட்டினியால் சாகிறார்கள். கும்பி கூழுக்கு அழும் போது கொண்டைக்குப் பூ வைத்த கதையாக நாட்டு நலன் என்று கூறிக்கொண்டு பன்னாட்டு நிறுவனங்களின் பகற்கொள்ளைக்குக் கதவை அகலத் திறந்துவிட்டுக் கூத்தடிக்கிறது துரோகி ராவ் கும்பல். ஏகாதிபத்திய விசுவாசமே ராவ் கும்பலின் சுவாசமாகிவிட்ட பிறகு, இனி வருமாண்டு 'சுதந்திர' தின விழா நிகழ்ச்சியை தொலைக்காட்சியில் வழங்கும் விளம்பர தாரர்களாக பெப்சி, கோகோ கோலா நிறுவனங்கள் இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.



படிப்பகம்

www.padippakam.com




*● 'இஸ்லாம்' குறித்த தங்களின் தவறான தகவலையும், தவறான கண்ணோட்டத்தையும் சுட்டிக்காட்ட விழைகிறேன்.*

*1. இஸ்லாத்தின் நிறுவனர் நபி என்று குறிப்பிட்டிருந்தீர்கள் - இது தவறு. இஸ்லாத்தின் அடிப்படை ஆதாரங்களான குர்ஆன், ஸஹீஹான ஹதீஸ்படி இஸ்லாத்தை வகுத்தளித்தது அகிலங்களின் இறைவனை அல்லாஹ்தான். நபி என்பவர் தீர்க்கதரிசி மற்றும் இறைத்தூதரேயாவார்.*

*2. இஸ்லாம் - ''ஒடுக்கப்பட்ட மக்களை விடுவிப்பது'' என்கிற அம்சத்தை முன்னிறுத்தி தோன்றியது'' இது தவறு. இஸ்லாம் என்கிற வார்த்தைக்கு 'கட்டுப்படுதல்' (SUBMISSION) என்று பொருள். அதாவது மனிதன் தன் வாழ்வின் எல்லாத்துறைகளிலும், அல்லாஹ் காட்டிய வழியில் கட்டுப்படுதல் என்பதாகும்.*

*3. சாலமன் ருஷ்டி நூலுக்குத் தடை. சல்மான் ருஷ்டி என்பவர் முஸ்லீமாகப் பிறந்து, பின்னர் ஓடுகாலியாகி, ஏகாதிபத்திய சக்திகளால் தத்தெடுக்கப்பட்டு, பயிற்றுவிக்கப்பட்டவர். யூத, கிறிஸ்தவ ஏகாதிபத்தியத்தின் நேர்விரோதமான இஸ்லாமையும் முஸ்லீம்களின் உயிருக்கும் மேலான முஹம்மத் நபியையும் பற்றி ஆதாரமற்ற புனை சுருட்டுக் கதைகளினடிப்படையில் ஓடுகாலி ருஷ்டி மூலம் குணப்படுகொலை செய்ய முயன்ற மேற்குலக ஏகாதிபத்தியத்திற்கும், அதன் விசுவாசிகளுக்கும், அவர்களுக்கு புரியும் மொழியிலேயே கொடுத்தது முஸ்லீம் உம்மத் (சமுதாயம்)*

*இஸ்லாத்தின் மூலாதாரமான குர்ஆனும், உறுதியான ஹதீஸ்களும் மற்றும் நபிகளாரின் ஆதாரப்பூர்வ வாழ்க்கை வரலாறும் திறந்த புத்தகங்களே. இவற்றினடிப்படையில் எழும் சந்தேகங்களையும், வினாக்களையும், கருத்துக்களையும் ஆரோக்கியமான விவாதம் மூலம் சந்திக்க முஸ்லீம் உம்மத் தயாராகவே உள்ளது. சல்மான் ருஷ்டியின் கழிசடை விமர்சனத்தையும், திரைமறைவில் இவரை இயக்கும் ஏகாதிபத்திய கும்பலையும் தாங்கள் புரியாமலிருப்பது ஆச்சரியத்தையே தருகிறது.*

*4. ஷரியத் - பெண்ணுரிமை மணச்சட்டம் இதுபற்றி ஆதாரப்பூர்வ இஸ்லாமிய அடிப்படையில் விளக்கம் சிறுகையேடான, 'பெண்ணுரிமை பேணிய இஸ்லாம்' என்ற நூலை இத்துடன் இணைத்துள்ளேன். இதுபற்றி தங்களின் மேலான கருத்துக்களை எதிர் பார்க்கின்றோம். தாங்கள் இனிமேல் இஸ்லாம், நபி, ஷரியத் சம்பந்தப்பட்ட விஷயங்களை தங்கள் வெளியீடுகளில் எழுதும்போது தவறான தகவல்களடிப்படையில் எழுதி எம் உணர்வுகளைப் புண்படுத்தமாட்டீர்கள் என உறுதியாக நம்புகிறோம்.*

— சா.மு.அ. முகம்மது பஷீர் ஆரிஃப்,
காயல்பட்டினர்.

★ ஒரு இசுலாமிய மதவாதியின் நிலையில் இருந்து பார்ப்பதால் தான் நாம் எழுதுவது தவறான தகவல் அடிப்படையிலானதாகவும் கேள்வியாளரது உணர்வுகளைப் புண்படுத்தக் கூடியதாகவும் தெரிகிறது. பகுத்தறிவு மற்றும் எதார்த்த நோக்கில் இருந்து பார்த்தால் அது அவ்வாறு இல்லை என்பதுதான் உண்மை.

''செமிட்டிக்'' பூர்வகுடி மக்களின் ஒரு பிரிவான ''பதூயின்'' இனக்குழுக்கள் அராபியப் பாலைவனப் பிரதேசத்தில் ஆங்காங்குள்ள சோலைகளிலும், விளிம்புகளிலும் நாடோடிகளாக வாழ்ந்தவர்கள். இவர்கள் ஓரிடத்தில் குடியமர்ந்து நகர - வர்த்தக சமூகமாக மாறியபோது எதிர்கொண்ட பல்வேறு சீரழிவுகள், நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட்டார் முகமது நபி. அராபியத் தீபகற்பத்தின் வடமேற்கில் உள்ள கடற்கரை வர்த்தக நகரமான மக்காவில் ஆதிக்கம் செலுத்தி, வந்த எல்லாம் வல்ல இறைவனின் புனித இல்லமாக கருதப்படும் ''காஃப்துல்லா''வைப் பராமரிக்கும் உரிமை பெற்ற குரைஷி இனத்தைச் சேர்ந்தவர், முகமது நபி. இவர் மக்கா நகருக்கு அருகில் உள்ள ''ஹிரா'' மலைக் குலையில் சில ஆண்டுகள் தியானத்தின் இருந்த போது தனது 40-வது வயதில் தலைமை தேவ தூதர் கேபிரியல் மூலமாக ''அல்லாஹ்'' தனக்கு அருளியதுதான் ''குர்ஆன்'' என்றார். ''குர்ஆன்'' என்றாலே ''ஓதப்பட்டது'', ''ஓதக்கூடியது'' என்று பொருள்படும் என்பது நாம் அறிந்ததே. ஆனால் ''கேபிரியல் மூலம் குர்ஆனை நபிக்கு அல்லாஹ்'' அருளினார் என்பதற்கான ஆதாரம் எதுவும் கிடையாது. ''எழுதவும் படிக்கவும் தெரியாத முகமது நபி ''குர்ஆனை'' இயற்றியிருக்க முடியாது. ஆகவே, இது அல்லாஷ் அருளியதுதான்'' என்று சில குர்ஆன் தர்ஜமாக்களில் எழுதப்பட்டுள்ளது. பல்வேறு மத வேத, புராண, இதிகாசங்களும் நாட்டுப்புற இலக்கியங்களும் எழுதப் படிக்கத் தெரியாதவர்களால் இயற்றப்பட்டுள்ளன; எனவே மேற்கண்ட வாதத்தை ஆதாரமாக ஏற்க முடியாது.

ஹீரா குகையில் முகமது நபி தியானம் மேற்கொள்வதற்கு முன்பாகவே அன்றைய அராபிய மக்களின் சீரழிவுகள், நெருக்கடிக்குத் தீர்வுகாண மக்கா நகர இளைஞர்களைத் திரட்டி சில முயற்சிகளிலும் ஈடுபட்டிருந்தார். குறிப்பாக நகரத்தில் பொருளாதார ரீதியில் கீழ்நிலையில் இருந்தவர்களை பெரும் வர்த்தகர்கள் ஒடுக்கும் கொடுமைக்கு எதிராகப் போராடும், ''ஹில்ஃப் அல்-ஃபுதுல்'' என்று வீரர் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டபோது அதில் பங்கேற்றார்; பின்னாளில் அதைப் பெருமையுடன் கூறிக் கொண்டார். இத்தகைய முயற்சிகளின் தொடர்ச்சியாகத் தான் அன்றைய அராபியாவில் நிலவிய சமூக, பொருளாதார, மத நம்பிக்கை கேடுகளைக் களைவதற்காக ஒரு புதிய மதத்தை நிறுவுவது என்று முடிவு செய்தார். அப்போது சம அதிகாரம் பெற்றிருந்த சமூக இனக்குழுக்கள் அனைத்துக்கும் மேலான தலைமைப் பொறுப்பில் மட்டுமல்ல, தனது இன - குலக் குழுவுக்கே கூட தலைவராக இல்லாத முகமது தன்னை மட்டுமே முன்னிறுத்தி தன் பெயரால் அதைச் சாதிக்க முடியாது என்று கருதினார். எனவே எல்லாம் வல்ல இறைவனான ''அல்லாஹ்'' தன்னைத் தேவதூதராக நியமித்து, தலைமைத் தேவதூதர் கேபிரியல் மூலமாக ''குர்ஆனை'' அருளியதாக அறிவித்தார். ஒரு குறிப்பிட்ட கால தியானத்துக்குப் பிறகு இறைவன் அருள்பாலித்து, ''ஞானம்'' வழங்கியதாக மத போதகர்கள் கூறிக் கொள்வது ஒன்றும் புதிதல்ல. ஒன்று அவர்கள் இதைத் திட்டமிட்டுச் செய்கிறார்கள் அல்லது ''ஹாலுசினேஷன்'' என்று கூறப்படும் பொய்த் தோற்றத்தைத் தாமே நம்புகின்றனர். ஹிரா குகை தியானத்தின் முடிவில் முகமது நபிக்கு ''ஓதப்பட்டது'' குர்ஆனின் 96-வது அத்தியாத்தில் உள்ள முதல் ஐந்து வசனங்கள் மட்டுமே. அதன் பிறகு 23 ஆண்டுகளாக அவ்வப்போது கேபிரியல் மூலமாகத் தனக்கு ஓதப்பட்டதாகக் கூறிக் கொண்ட வசனங்களை உள்ளடக்கி ''குர்ஆன்'' பூர்த்தியானது. இந்த வசனங்கள் எல்லாம் நடைமுறைப் பிரச்சினைகள், அனுபவங்கள் அடிப்படையில் வகுக்கப்பட்டவை, ஒன்றுக்கொன்று மாறுபட்ட, முரண்பட்ட அம்சங்கள் நிறைந்தவை என்பதை குர்ஆனை தர்க்க ரீதியாகவும், விமர்சன பூர்வமாகவும் ஆய்ந்தறியும் எவரும் காணமுடியும். ''குர்ஆன்'' வசனங்களை முகமது நபி வெளிப்படுத்திய கால வரிசைப் படி தொகுக்கப்பட்டிருந்தால் இதை எளிதில் புரிந்து கொள்ள முடியும். ஏனென்றால் மக்காவில் முகமது வாழ்ந்தவரை பல்வேறு சமூக, பொருளாதார அநீதிகளையும், சீரழிவுகளையும்-சாடியும் புதிய மத, ஆன்மீக போதனைகளையும், அதைப் பின்பற்றுவோருக்கு எதிராக இழைக்கப்பட்ட சமூக, பொருளாதார புறக்கணிப்பு, கொடுமைகளை எதிர் கொள்வதற்கான வழிமுறைகள் தீர்வுகளையும் குர்ஆனின் மக்கா சுராக்கள் கொண்டிருக்கின்றன. ஆனால் முகமது மதினாவுக்குக் குடியேறிய பிறகு இசுலாம் ஒரு மத நிறுவனமாக மாறியதோடு புதிதாகத்



படிப்பகம்

www.padippakam.com

தோன்றிய அரசு அமைப்புக்குரிய சித்தாந்தமாகவும், வழிகாட்டியாகவும் மாறிய நெறிகளை ''குர்ஆனி''ன் மதினா சுராக்கள் கொண்டிருக்கின்றன. ஆகவே, ''குர்ஆனை'' முகமது நபிதான் வகுத்தார் என்று நம்புவதிற்கே இடமுண்டு.

அடுத்து, குர்ஆனோடு ஸஹீஹான ஹதீதின்படியும் இஸ்லாம் வகுக்கப்பட்டதாக கேள்வியாளரே கூறுகிறார். ஹதீத் என்பதே முகமது நபியின் வாழ்க்கை, அற்புதங்கள், போதனைகளின் தொகுப்பாகிய மரபுச் செய்திகளை உள்ளடக்கியவை தான். முகமதுவின் வாழ்நாளில் குர்ஆனும், ஹதித்தும் தொகுக்கப்படவில்லை. முகமது இறந்தபோது அவரது உரைகளும், போதனைகளும் அடங்கிய குறிப்புகள் தாம் இருந்தன. மூன்றாவது காலிஃபான உத்மான் ஆட்சிக் காலத்தில், ஏறக்குறைய கி.பி.650 வாக்கில் தான் அவை தொகுக்கப்பட்டு, புனிதநூலாக அறிவிக்கப்பட்டது. ஒன்பதாம் நூற்றாண்டில்தான் புகாரி, முஸ்லீம் இபின் அல்-ஹாஜாஜ் போன்ற இசுலாமிய இறையியல் அறிஞர்களால் முகமதுவின் மரபுச் செய்திகள் தொகுக்கப்பட்டன. ஹதீத்தில் உள்ள சுன்னாக்களைக் கூட முஸ்லீம்கள் அனைவரும் ஏற்பதில்லை. மேலும் அதிகாரபூர்வமான ''குர்ஆன்'' அனைத்து இசுலாமியருக்கும் ஒன்றுதான் என்றாலும், அதற்கு காலத்துக்குக் காலம்,

> **ஒரு குறிப்பிட்ட கால தியானத்துக்குப் பிறகு இறைவன் அருள்பாலித்து, ''ஞானம்'' வழங்கியதாக மத போதகர்கள் கூறிக் கொள்வது ஒன்றும் புதிதல்ல. ஒன்று அவர்கள் இதைத் திட்டமிட்டுச் செய்கிறார்கள் அல்லது ''ஹாலுசினேஷன்'' என்று கூறப்படும் பொய்த் தோற்றத்தைத் தாமே நம்புகின்றனர்.**

நாட்டுக்கு நாடு மாறுபட்ட பல்வேறு வியாக்கியானங்களும், நெறி முறைகளும் வகுக்கப்பட்டு அதற்கேற்ப ஷியா, சுன்னி, இஸ்மாயிலி அஹமதியா ஆகிய பெரும் பிரிவுகள் உட்பட நூற்றுக்கணக்கான பிரிவுகளை உள்ளடக்கியதுதான் முஸ்லீம் மதம். எல்லாவற்றுக்கும் மேலாக முஸ்லீம் மதம் என்பது தமது போதனை ஏற்றுச் செயல்படுத்தக் கூடியவர்களைக் கொண்ட ஒரு மத அமைப்பு - நிறுவனம் என்கிற முறையில் அதை உருவாக்கியவர் முகமது நபிதான். இந்த விவரங்கள் அனைத்தும் காட்டுவது என்ன? இசுலாமிய மதம் என்பது ''அல்லாஹ்'' தான் நிறுவினார் என்பது மத நம்பிக்கைதான்; வரலாற்று உண்மை அல்ல.

மேய்ச்சல் நிலம் சார்ந்த நாடோடிப் பொருளாதாரத்தில் இருந்து நகர-வர்த்தகப் பொருளாதாரத்துக்கு மாறிய போது அன்றைய மக்கா நகர சமூகம் இனக்குழு சமத்துவ அமைப்பு சிதைந்து போனது. இனக்குழுவின் கூட்டு வாழ்க்கை முறையும் சிதைந்து போனது. இனக்குழுவின் கூட்டு வாழ்க்கை முறை மட்டுமல்ல, குலக்குழுக் கூட்டு வாழ்க்கை முறையும் சிதைந்து தனி நபர், குடும்ப நலன்கள், சொத்து-சுகம் சேர்க்கை முறை பெருகி, பொது ஒழுங்கும் பண்பாடும் சீரழிந்தது அகந்தையில் மிதந்த பெருஞ் செல்வந்தர்கள் தமது இனக்குழு, குலக்குழுவைச் சேர்ந்த ஏழைகள், கைவினைஞர்கள், பெண்கள், அடிமைகளைக் கொடுமைப்படுத்தினார்கள். இதனால் சமூகத்தின் வேறுவேறு பிரிவினரிடையே முரண்பாடுகள் முற்றி வெறுப்பும் பதற்றமும் நிலவியது. இந்த நெருக்கடியில் இருந்து தப்பித்து ஓடும் துறவுக் கோட்பாட்டைப் போதிப்பதற்குப் பதில் முகம்மதுநபி புதிய நகர-வர்த்தகப் பொருளாதாரத்துக்கான நெறி முறைகளைப் போதித்து ஆதரித்தார். அதே சமயம் பழைய இனக்குழு - குலக்குழு கூட்டு வாழ்க்கை முறையின் சில நற்பண்புகளை சீர்திருத்திப் பின் பற்றுமாறு போதித்து முரண்பாடு கொண்ட சமூக, வர்க்கப் பிரிவுகளிடையே ஒரு சமரசத்தை நிலை நாட்டுவதற்கு மதத்தை ஒரு சாதனமாக முகமது நபி தெரிந்தெடுத்துக் கொண்டார். பொருள்களை வீண்-விரயம் செய்வதைத் தவிர்ப்பது, குடி-சூதாட்டம் விபச்சாரம் போன்ற சுகபோகங்களில் ஈடுபடுவதைத் தடுப்பது, மணவாழ்வுக்குப் புறம்பான, வரை முறையற்ற பாலுறவுகளைத் தவிர்ப்பது, குடும்பம் என்கிற நிறுவனத்தின் ஒழுங்கு-புனிதத்தைத் காப்பது, எழுத்து-வாய்மை விதிமுறைகளின் படி வர்த்தக ஒப்பந்தங்களைப் பதிவு செய்து நெறிப்படுத்துவது, ஏழை எளியவர்கள் - அனாதைகளுக்கு தர்மம் செய்வது ஆகியவை குர்ஆன் போதிக்கும் சிறந்த பண்புகள் இவை வர்த்தக வர்க்கத்தினரிடம் காணப்படும் சீரழிவுப் பண்புகளை சீர்படுத்துவதற்கான போதனைகள். (78)

இசுலாமிய அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்படும் எச்.ஏ. ஆர்.கிப், முகம்மதியம் என்னும் நூலில் பின்வருமாறு எழுதுகிறார், ''மக்காவின் செல்வச் செழிப்பின் இருண்ட பக்கம் ஒன்று இருந்தது. செல்வம் மிகுந்த வர்த்தக சமூகத்தில் வழக்கமாகக் காணப்படும் தீமைகளான மிக உயர்ந்த செல்வம், மிகத் தாழ்ந்த வறுமை, அடிமைகளையும், கையாள்களையும் கொண்ட கீழ் உலகம், சமூக வாழ்க்கையில் வர்த்தக அடிப்படையிலான தடைகள் ஆகிய தீமைகள் வளர்ந்திருந்தன. முகமது, சமூக அநீதியையும் மோசடியையும் மனங்கொதித்துக் கண்டனம் செய்வதைப் பார்க்கும் போது அவருடைய மனவேதனைக்கு ஆழ்ந்த, உள்ளார்ந்த காரணங்களாக இருந்தவற்றில் இதுவும் ஒன்று என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆனால் அவரது உள்ளக் குமுறல் சமூகப் புரட்சிப் பிரச்சாரமாக வெளிப்படவில்லை, அது மதத்தின் வடிவம் பெற்று வெளிப்பட்டது'' (பக்:17). இசுலாமின் இந்த தோற்ற காலப் போக்கு, ''இந்துமதம்'' பார்ப்பன சனாதன வர்ணாசிரம சாதி ஆதிக்கத்தை நிறுவி, அதை மீறுபவர்களைக் கொடூரமாகத் கண்டிப்பதில் இருந்து மாறுபட்டது என்பதாலேயே ஒடுக்கப்பட்ட மக்களை விடுவிப்பது என்கிற அம்சத்தை முன்னிறுத்தித் தோன்றியது, இசுலாம் என்று எழுதினோம்.

ஆனால் அதே சமயம், முகமது நபியின் தலைமையில் அதிகாரத்தைக் கைப்பற்றி, வலுவான அந்த அமைப்புகளையும் மத நிறுவனங்களை நிறுவிக் கொண்டதும் இசுலாமின் போக்கில் மாறுதல்கள் ஏற்பட்டன. முகமதுவின் ஆட்சிக் காலத்திலேயே சமூகத்தில் நலிவுற்றோருக்கான நிவாரணத் திட்டங்கள், உபதேசங்கள் ஆகிய சீர்திருத்தங்கள் இருந்தபோதும், அடிமை முறையும், ஆணாதிக்கமும், வர்த்தக முதலாளிகளிடம் செல்வம் குவிவதும் தடை செய்யப்படவில்லை. இவற்றை ஒரு வரம்புக்குள் வைப்பதற்கான முயற்சியே இருந்தது. இரண்டாவது அரபு அரசர் - காலிஃபான உமர் முஸ்லீம்கள் செல்வங்களோ, நில உடமைகளோ சேர்ப்பதைத் தடுக்க முயன்றார் என்று கூறப்படுகிறது. ஆனால் அதில் அவர் தோல்வியுற்றார். முகமதுவைச் சுற்றியிருந்தவர்கள், மூன்றாவது காலிஃமான உத்மானின் காலத்தில் ஏராளமான நிலங்களும் பணமும் சேர்த்தனர். உத்மானே பெரும் ரொக்கத் தொகையும், பரந்த நில உடமையும், அரண்மனைகளும், குதிரைகள் - ஒட்டகங்களும், ஆயிரக்கணக்கான அடிமைப் பெண்களும், தங்கமும் - வெள்ளியும் குவித்து வைத்திருந்தார். அவரைப் போலவே அப்த்-அர்-ரஹ்மான் பின் அவ்ஃப், ஜைத் பின் தாபித் அஸ்-ஸீபைர், ஸத் பின் அபி வக்காஸ், யாலா பின் முன்யா போன்ற ஆளும் வர்க்கக் குடும்பத்தினர் ஆதிக்கத்துக்கு வந்து விட்டனர். அராபியாவில் நிலவுடமைச் சமூக அமைப்பைத் நிறுவுவதற்கான ஆணைகளை உத்மான் விதித்தார். (இவை இசுலாமிய வரலாற்று மேதை என்று போற்றப்படும் இபின் கல்தூன் எழுதிய ''முகமதிமா'' என்ற நூலில் உள்ள விவரங்கள்) பாரசீகம், ஈராக், சிரியா, எகிப்து போன்ற நாடுகளை அராபியர்கள் போரில் வென்று கைப்பற்றி இசுலாமிய ஆட்சியின் கீழ் கொண்டு வந்த போது, அந்நாடுகளில் நிலவி வந்த நிலவுடமை அமைப்பை மாற்றவில்லை. அதை ஏற்பதாகவே இசுலாம் மதம் மாறியது. இந்த போக்கை மாற்றி மீண்டும் இசுலாமின் சீர்திருத்தங்களை அமுலாக்க முயன்ற முகமதுவின் மருமகனும் நான்காவது காலிஃபுமான அலி ஒரு குறுகிய காலத்திலேயே கொல்லப்பட்டார். அவரைக் கொன்று ஆட்சியைப் பிடித்த முஆவியா பரம்பரை ஆட்சி. இசுலாமை முழுக்க முழுக்க நிலவுடமை ஆதிக்க வர்க்க மதமாக மாறியது. இதனாலேயே கொடுங்கோலன் முஆவியாவின் (661-680) ஆட்சிக் காலத்திலேயே 15 கிளர்ச்சிகள் நடைபெற்றன. உத்மானின் ஆட்சியை வீழ்த்திய ''ஷியா'' இயக்கம், அலியின் காலத்திய ''காரிஜைட்'' இயக்கம், தொடங்கி ''அல்-முக்தாரின்'' கலகம், ''அபூமுஸ்லீம்'' கிளர்ச்சி, ''கராமிதா'' இயக்



படிப்பகம்

www.padippakam.com

கம் நீக்ரோ அடிமைகள் நடத்திய ''ஸஞ்ச்'' எழுச்சி என்று இசுலாமிய வரலாறு கண்ட போராட்டங்கள் அனைத்தும் இசுலாம் ஒடுக்கும் வர்க்கங்களின் கருவியாக மாறி விட்டதையே குறித்தன.

அரேபிய சமூகத்தில் வளர்ச்சி பெறாத, எழுதப்படாத மரபு வழக்கங்களையே கொண்டிருந்த பொருளாதார, சமூக, அறநெறித் துறைகளிலான இனக்குழுச் சட்டங்களை மாற்றி அன்றைய புதிய தேவைகளுக்கேற்ப குற்றவியல், சொத்துரிமை, வர்த்தக ஒப்பந்தங்கள் முதலிய பொருளாதார, மணஉறவு-விவாகரத்து முதலிய சமூகவியல் சட்டங்களைத் தொகுப்பாக முகம்மது நபி வகுத்தளித்தார். சிறுசிறு விவகாரங்களில் கூட விதிமுறைகள் வகுத்தளித்தார். அவை அரேபியர்களுக்கு ஒரு சித்தாந்தம், உலக தத்துவம், அரசியல்-பொருளாதாரம், நாகரிகம்-பண்பாடு ஆகியவற்றையும் போதித்தன.

குறிப்பாக ஆண்-பெண் உறவிலும், குடும்ப உறவிலும் அப்போது கட்டுப்பாடற்ற அராஜக அடிமை உறவுகள் நிலவின. அதைமாற்றி உடை அணிவது முதற்கொண்டு சமூக ஒழுக்கம், குடும்ப உறவு போன்றவை பற்றிய கட்டுப்பாடுகள் பலவற்றை முகமது நபி போதித்தார். அவர் சந்தித்த பிரச்சினைகளுக்கு அவர் கூறிய தீர்வுகளும், நடைமுறையும் தொடர்ந்து தலைமுறை தலைமுறையாக பின்பற்றும் சட்டங்கள், சான்றுகளாகின. பின்னாளிலும் புதிது புதிதாக எழும் பிரச்சினைகளுக்கு அதைப் போன்ற நிலைமைகளில் முகமது நபி என்ன சொன்னார், எப்படி நடந்தார் என ஆய்வு செய்து ஒப்பிட்டு முடிவுகள் எடுப்பது இஸ்லாமிய வழக்கமானது. ஆனால் பல நூற்றாண்டுகளில் ஒவ்வொரு பிரச்சினையிலும் மாறுபட்ட, முரண்பட்ட பல தீர்வுகள் இஸ்லாமிய மதப் பண்டிதர்கள், போதகர்கள், குருமார்களால் தரபபட்டுள்ளன. அவற்றில் ஒவ்வொரு பிரிவினரும் தமது தேவைக்கேற்ப தெரிவு

குரானியச் சட்டங்களின் மிக முக்கியமான அம்சம், அவை குறிப்பிட்ட நிலைமைகள் சம்பந்தப்பட்டவை என்பதால், அவற்றை அந்தப் பின்னணியில்தான் பார்க்க வேண்டும். அதன் விதிகள் அனைத்தும் அந்தக் காலம், இடத்தின் மரபுப் பழக்கங்கள் அடிப்படையிலானவைதாம். ஆகவே அவற்றை மாற்ற முடியாதவை, எல்லாக் காலத்துக்கும், இடத்துக்கும் பொருத்தமானவை என்று ஏற்க முடியாது.

செய்து கொள்கின்றனர்; அல்லது குர்ஆன், ஹதீஸ் எனப்படும் முகம்மது நபியின் மரபுச் செய்திகளுக்குத் தரப்படும் வியாக்கியானங்கள் அடிப்படையில் பல பிரிவுகளும் ஏற்பட்டன. ஆகவே இஸ்லாமிய மதம் என்பது ஒரே சட்டதிட்டங்கள், விதிமுறைகள் கொண்டதல்ல.

குரானியச் சட்டங்களின் மிக முக்கியமான அம்சம், அவை குறிப்பிட்ட நிலைமைகள் சம்பந்தப்பட்டவை என்பதால், அவற்றை அந்தப் பின்னணியில்தான் பார்க்க வேண்டும். அதன் விதிகள் அனைத்தும் அந்தக் காலம், இடத்தின் மரபுப் பழக்கங்கள் அடிப்படையிலானவைதாம். ஆகவே அவற்றை மாற்ற முடியாதவை, எல்லாக் காலத்துக்கும், இடத்துக்கும் பொருத்தமானவை என்று ஏற்க முடியாது. நாடோடி சமூக நிலையிலிருந்து வர்த்தக, விவசாய சமூகநிலைக்கு மாறியதைத் தொடர்ந்து, அதற்குத் தகுந்த, அப்போதைக்கு ஒப்பிட்டுரீதியில் முன்னேறிய நாகரீக-பண்பாடு, அரசியல் நிலையை அடைய விரும்பிய சமூகத்துக்குத் தகுந்த விதிகளை முகம்மது நபிகள் உருவாக்கினார்; அவை இன்றைய தொழில் வளர்ச்சியுற்ற சமூக, பொருளாதார, அரசியல் நிலைமைகளுக்குப் பொருத்தமற்றவை என்பது வெளிப்படை. இப்போது துருக்கி, அல்ஜீரியா, எகிப்து, ஈராக் போன்ற பல இசுலாமிய நாடுகளில் அந்த விதிகள், கடைப்பிடிக்கப்படுவதுமில்லை. உதாரணமாக ''எந்த சமூகம் தனது தலைமைத்துவத்தை ஒரு பெண்ணின் கரங்களில் ஒப்படைக்கின்றதோ அந்த சமூகம் ஒரு போதும் உருப்படாது'' (புகாரி) என்கிறது ஹதீஸ். ஆனால் அந்தக் காலத்தில் அரசிகளாகவும் தற்போது பிரதமர்களாகவும், தூதுவர்களாவும்கூட ''இசுலாமிய'' நாடுகளில் பெண்கள் இருந்துள்ளனர். பெண்கள் ''பர்தா'' முறையைக் கைவிட்டு நவீன ஆடை உடுத்தி, அறிவியல் கல்வி கற்று, நவீன உற்பத்தியில் ஆண்களோடு இணைந்து ஈடுபடுகின்றனர். ஷாரியத் உட்பட இசுலாமியச் சட்டதிட்டங்கள் பழைமை மதவாதிகளால் மட்டுமே திரும்பத் திரும்ப வலியுறுத்தப்படுகிறது; ஆனால் நடைமுறையில் அவை பெரும்பாலும் கடைப்பிடிக்கப்படுவதில்லை. அப்படிக் கடைப்பிடிக்காதவர்கள் எவரையும் இசுலாம் மதம் விலக்கி வைத்துவிடவில்லை. இந்த மாற்றங்களைக்கூட அல்லாஹ், நபிகள் ஆகியோர் பெயரில் கூறிக் கொண்டு செய்தால் அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

இப்படிப் பத்தாம்பசலித்தனம் செய்யாமல், பகிரங்கமாகவே குரானியச் சட்டங்களை விமர்சிப்பவர்களை மத எதிரிகள் என்றும், சீர்திருத்தங்களைக் கோருவோர் மத துரோகிகள் என்றும் பழைமை மதவாதிகள் முத்திரை குத்தித் தாக்குகின்றனர். குர்ஆன், ஹதீஸ், நபிகளின் வாழ்க்கை மீதான சந்தேகங்கள், வினாக்கள், கருத்துக்களை ஆரோக்கியமான விவாதம் மூலம் சந்திக்க முஸ்லீம் சமுதாயம் தயார் என்று வாசகர் தெரிவிக்கிறார். ஆனால் சல்மான் ருஷ்டி, தஸ்லிமா நஸ்ரீன் போன்றவர்களது விமர்சனம் கழிசடை, ஏகாதிபத்திய திரைமறைவு சதி என்றும் அவர்கள் ஓடுகாலிகள், ஏகாதிபத்திய விசுவாசிகள் என்றும் முத்திரை குத்தி மரண தண்டனை வழங்குவதுதான் அச் சமுதாயத்தின் பெயரால் பழைமைவாதிகள் செய்துவருகின்றனர். அவர்கள் விமர்சனம் கொச்சையாக இருக்கிறது; அவர்களது நடத்தை கேடானதாக இருக்கிறது என்பதல்ல பிரச்சனை. அவர்கள் இசுலாமிய கோட்பாடுகளைக் கேள்விக்குள்ளாக்காதவரை மதவாதிகள் போதிக்கும் வாழ்க்கை நெறியைப் பின்பற்றியதில்லை. இதே போல சிறுமிகளை மணப்பது, ஆபாச-வக்கிர வாழ்க்கை வாழ்வது, ஏகாதிபத்தியத் தரகர்களாக இருப்பதற்காக அரேபிய ஷேக்குகளையும் நடிகர்-நடிகைகள் ஆகிய சினிமாக்காரர்கள் உட்பட இசுலாமிய மேட்டுக்குடியினரை மதத்தை விட்டு நீக்கிவிடவில்லை.

குர்ஆன், ஷாரியத் சட்டங்கள் மற்றும் வாசகர் அனுப்பிய ''பெண்ணுரிமை பேணிய இஸ்லாம்'' உட்பட பல நூல்களைப் படித்த அடிப்படையில்தான் கூறுகிறோம் அவை பிற்போக்கானவை, பெண்ணடிமைத்தனத்தைப் போதிப்பவைதாம். சமுதாயத்தில் நாம் காணும் எல்லா ஒழுக்கக்கேடுகளுக்கும் ''பெண்ணைப் பூட்டி'' வைப்பதைத்தான் தீர்வாகக் கூறப்படுகின்றது; ஆண்களின் கேடான நடத்தைக்குக் கூட பெண்களைத் ''தண்டிப்பது'' என்பது எவ்வகையில் சரியாகும்! இந்துமதத்தில் இருப்பதைப் போலவே ஒரே குற்றத்துக்காக ஆணுக்கு எளிதான பரிகாரமும், பெண்ணுக்குக் கடும் தண்டனையும் தருகிறது இஸ்லாம். பெண் ஆணுக்கு ''விளைநிலம்'' என்றும், அவனது பாலுணர்வுகளுக்கு எந்தச் சமயத்திலும் இணங்கிப்போவது கட்டாயமாகவும் சில விவகாரங்களில் பெண்ணுக்குச் சொத்துரிமை மறுப்பதும் இரண்டு பெண்களின் சாட்சியங்களைத்தான் ஒரு ஆணுடையதுக்குச் சமமாகக் கருத முடியும் என்று சாட்சியம் வைப்பதும் இறுதியாக ஆணுக்குக் கீழானவள்தான் பெண்ணென்று போதிக்கிறது இஸ்லாம். ஒரு மனைவியின் உடல்நிலை பாதிக்கப்பட்டால் ஆணின் பாலுணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாமற்போகும் என்பதைக் கூறியே நான்கு தார மணமுறை நியாயப்படுத்தப்படுகிறது; இந்நிலை ஆணுக்கு ஏற்பட்டால் பெண் மட்டும் தனது பாலுணர்வைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்கிறது. ஆண் பொருளீட்டுபவன், பெண் குடும்பத்தைப் பேணுபவள் என்று கணக்கிட்டு அவர்களது பாத்திரத்தைத் தீர்மானிக்கிறது. அப்படிப்பட்ட குடும்ப ஏற்பாட்டிலும் ஆணின் உழைப்புக்கான சக்தியை மறுஉற்பத்தி செய்வதற்கும், அதற்காக குடும்பத்தைப் பேணுவதற்கும் அவனது ஊதியத்தில் சம பங்குக் குரியவர் பெண் என்பதே சரி! இப்படி எவ்வளவோ விஷயத்தில் இஸ்லாமும் பெண்ணடிமைத்தனமே பேணுகிறது. இந்து சமூகத்தோடு ஒப்பிட்டு பெண்ணுக்குள்ள மண விலக்கு, மறுமண உரிமை, சொத்துரிமை ஆகியவற்றைக் காட்டி இஸ்லாம் பெண்ணுரிமை பேணுவதாகக் கூறப்படுகிறது. ஆனால் வேறு சில விதிகள் மூலம் அவ்வுரிமை பறிக்கப்படுகிறது என்பதே உண்மை.



படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

### ★ அந்நிய உதவியுடன் களிவெறியாட்ட அரங்கம்.

அமெரிக்காவைத் தலைமையாகக் கொண்டு இயங்கும் மிகப் பெரிய ஹாலிவுட் திரைப்பட தயாரிப்பு நிறுவனம் ''வார்னர் பிரதர்ஸ்''. இந்த நிறுவனம் இந்திய நாட்டு முதலாளிகளுடன் கூட்டு சேர்ந்து 350 கோடி ரூபாய் முதலீட்டில் நாட்டின் முக்கிய நகரங்களில் 50 பிரம்மாண்டமான பொழுது போக்குகூடங்களை உருவாக்க உள்ளது. ஒவ்வொரு கூடத்திலும் ''10 திரையரங்குகள்; அதி விரைவு உணவுக் கூடங்கள்; மதுபானக் கூடங்கள்; சூதாட்ட மற்றும் அரைகுறை நடன அரங்குகள்'' என மேலை நாட்டுப் பாணியில் பணத்தைத் தண்ணீராகச் செலவு செய்வதற்கு வசதியாக இன்னும் பல வகையான பொழுதுபோக்கு அம்சங்களும் இருக்குமாம்! இது தவிர தணிக்கை செய்யப்படாத திரைப்படங்களை 24 மணி நேரமும் ஒளிபரப்ப ஸ்டார் டி.வி.க்கு அனுமதி வழங்கியுள்ளது ராவ் அரசு.

### ஐ.எம்.எஃப்-க்கு எதிராக ஜியார்ஜிய மக்கள்

முன்னாள் சோவியத் ஒன்றியத்தைச் சேர்ந்த ஜியார்ஜியாவில் அந்நாட்டு அரசு ஐ.எம்.எஃப் கட்டளைக்கு அடி பணிந்து ரொட்டியின் விலையை ஒரே சமயத்தில் 280 மடங்கு அதிகம் கூட்டியது! உடனே இந்த அநியாய விலையுயர்வை எதிர்த்து ஆண்கள், பெண்கள் மட்டுமின்றி கைக் குழந்தைகளோடு தாய்மார்களும் சிறுவர்கள், சிறுமிகள் என ஆயிரக்கணக்கானோர் தலைநகர் திபிலிஸியில் சாலை மறியலில் ஈடுபட்டனர். ரொட்டிக்கு மட்டுமின்றி எரிவாயு, மின்சாரம், போக்குவரத்து என அடிப்படை தேவைகள் அனைத்திற்கும் விலைகள் உயர்த்தப்பட்டுள்ளன. மக்களின் கடுங்கோபத்தினால் அரண்டுபோன அந்நாட்டு அதிபர், பின்னர் தொலைக்காட்சியில் தோன்றி மன்னிப்பு கேட்டுள்ளார்!

### முஸ்லீம்கள் அந்நியர்களாம்!? போலீஸ் மிரட்டல்

பம்பாய் நகர போலீசு அந்நகரத்தில் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்து வரும் பல நூற்றுக்கணக்கான முஸ்லீம் குடும்பங்களுக்கு, ''நீங்கள் இந்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதைத் தக்க ஆதாரங்களுடன் நிரூபிக்க வேண்டும்; இல்லையேல் அந்நிய தேசத்தவர்கள் எனக் கருதப்படுவீர்கள்'' என்று வாசகங்களடங்கிய கடிதத்தை அனுப்பியுள்ளது. இது அந்நகர முஸ்லீம்களிடையே மிகுந்த மனபாதிப்பை ஏற்படுத்தி பிரச்சனையாக உருவெடுக்க, ''தேர்தல் கமிஷன் அடையாள அட்டை வழங்குவதற்கு வசதியாக அந்நிய நாட்டவர்களை அடையாளங் காட்டச் சொன்னது; ஆனால் இத் தவறு எப்படியோ நேர்ந்துவிட்டது'' என தற்பொழுது மன்னிப்பு கேட்கும் தொனியில் கையை பிசைகிறது, பம்பாய் போலீசு.

### உமி கொண்டு வந்தவன் அவல் தின்ற கதை

ஆந்திர பிரதேசத்தில் ரவ்வா எனுமிடத்தில் 2 கோடி டன் அளவிற்கு கச்சா எண்ணெய் இருப்பதைக் கண்டுபிடித்தது எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனம் (ONGCL) இந்த பொதுத்துறை நிறுவனம் இந்தப் பணிக்காக 160 கோடி ரூபாய் வரை செலவழித்தது. எண்ணெய் இருப்பது உறுதியான பின், 'வீடியோகான்' என்னும் தனியார் நிறுவனம் 96 கோடி ரூபாய் மூலதனமிட்டு ஓ.என்.ஜி.சி.யுடன் கூட்டு சேர்ந்தது. இதன்படி 1.2 கோடி டன் கச்சா எண்ணெயினை விற்பதற்கு வீடியோகான் உரிமை பெற்றது. இதனை ஓ.என்.ஜி.சி. நிறுவனமே கூடுதலாக விலை கொடுத்து வாங்கிக் கொள்ளவும் சம்மதித்துள்ளது. இதனால் மத்திய அரசு அடையவுள்ள நட்டம் 1200 கோடி ரூபாய். வீடியோகானுக்கோ இரட்டை லாபம். இதே போன்ற ஒப்பந்தங்கள், முக்தா மற்றும் பன்னா எண்ணெய் வயல்களில் அம்பானியுடனும் அமெரிக்க நிறுவனமான என்ரானுடனும் ஆரம்ப முதலீடே தேவையில்லை என்ற சலுகையுடன் போடப்பட்டுள்ளன.

### புரட்சித் தலைவியின் புரட்டுத் திட்டம்

சென்னையில் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஸ்டான்லி மருத்துவமனையில் கட்டணம் செலுத்தி மருத்துவம் பெறுவதற்காக 32 தனி அறைகள் திறக்கப்பட்டுள்ளன. அறைக் கட்டணம் ஒரு நாளைக்கு ரூ.175/- லிருந்து ரூ.225/- வரை. மேலும் இவ்வறைகளில் தங்கி சிகிச்சை பெறுபவர்கள் உணவு, மருந்து, அறுவை சிகிச்சைக்குத் தனியாகக் கட்டணம் செலுத்த வேண்டும். இதைப் போன்றே சென்னை பொது மருத்துவமனையிலும் 30 கட்டண அறைகள் கட்டப்பட்டு வருகின்றன. இதில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு ஏழைகளுக்கு இன்னும் சிறப்பாக மருத்துவம் செய்யப் போகிறார்களாம்!

### அந்நிய மூலதனத்திற்கு சுதேசி முலாம்

தொலைத் தொடர்புத் துறையில் அந்நிய மற்றும் தனியார் நிறுவனங்களை அனுமதிக்கும் உத்தரவினை சென்ற மாதம் வெளியிட்டுள்ளது ராவ் அரசு. அந்நிய நிறுவனங்கள் தாங்கள் அமைக்கும் நிறுவனங்களில் 49 சதவீத பங்குத் தொகையை நேரடியாகவும் மீதியை இந்திய பங்குச் சந்தையில் திரட்டிக் கொள்ளவும் அனுமதிக்கப்பட்டுள்ளன. இது அந்நிய நிறுவனங்களுக்கு 'சுதேசி' முலாம் பூசும் ராவின் கபட நாடகமாகும். மேலும் இந்த உத்தரவு வந்த மறு நிமிடமே சென்னை, பம்பாய், கல்கத்தா, டெல்லி நகரங்களில் அதிநவீன நடமாடும் ''செல்லுலார்'' தொலைபேசி வசதி செய்து கொடுக்கும் திட்டத்தில் எட்டு தனியார் நிறுவனங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

### உப்புக் காய்ச்சத் தடை

அடுத்த ஆண்டு முதல் தமிழகம் முழுவதும், ''அயோடின் கலந்த உப்பினை மட்டும்தான் விற்க வேண்டும்'' என உத்தரவிட்டுள்ளது ஜெயா அரசு. அயோடின் குறைவினால் ''முன்கழுத்து கழலை'' என்ற நோயினால் மக்கள் பாதிக்கப்படுவதால் இந்நடவடிக்கை என்று விளக்கமும் அளித்துள்ளது. ''உலகத்தில் எந்தவொரு அரசும் இது போன்று நடவடிக்கை எடுத்ததில்லை'' என வியக்கும் மருத்துவர்கள், ''இந்நோய்க்கு அயோடின் கலந்த மருந்துகளே போதுமானது. மேலும் இமய மலை போன்று உயர்வான பகுதிகளில் வாழ்பவர்கள் தான் அயோடின் கலந்த உப்பை எடுத்துக் கொள்ள வேண்டும்; ஏற்கனவே அயோடின் அதிகம் சுரப்பதினால் பாதிக்கப் பட்டுள்ளவர்களுக்கு இந்த உப்பு ஏற்றதல்ல'' எனக் கூறி இந்தத் தடை உத்தரவை எதிர்த்துள்ளனர்.

அரசுக்கு எதிராக உப்புக் காய்ச்சுபவர்களின் போராட்டம்



Published and owned by R.SHANMUGARAJ, 4, Samiyar Thottam, Alandur Road, Saidapet, Madras - 600 015
Printed by him at EZHIL PRINTS, 321, Arcot Road, Madras - 600 024, Editor: R.SHANMUGARAJ

படிப்பகம்

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா



இதோ தனது தந்தையை ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருக்கும் இப்பெண்ணின் பெயர் சசிகலா. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். மருத்துவ படிப்பிற்கான நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்ற இவருக்கு, சென்னையிலுள்ள சாராய உடையாரின் கல்லூரியில் இடம் ஒதுக்கியது தமிழக அரசு. களிப்புடன் கல்லூரியில் காலடி வைத்தவருக்கோ தலையில் இடி இறங்கியது. தனியார் மருத்துவக் கல்லூரிகளில் அரசு நிர்ணயித்துள்ள கட்டணமோ ரூ.8000/- நிர்வாகம் கேட்டதோ ரூபாய் இருப்பத்திரண்டாயிரம். தயங்கி நின்றவர்களிடம், '' இரண்டு லட்சம் தர ஆள் தயார்'' என எகத்தாளம் வேறு பேசியது. எட்டாயிரத்துக்கே குடியிருந்த வீட்டை அடகு வைத்தவர்களிடம் இன்னும் கட்டு என்றால் எங்கே போவார்கள்?

இது ''சமூக நீதி காத்த வீராங்கனை''க்கு நெடுமாறன் வீரமணியிலிருந்து அப்துல் சமது வரை அனைத்துத் துதிபாடிகளும் சேர்ந்து நடத்திய பாராட்டுக் கூட்டம். 69 சதவீத இட ஒதுக்கீட்டை அரசியல் சாசனத்தில் இடம் பெறச் செய்ததை, ''வரலாற்றுச் சாதனை'' என்றார் ஒருவர். வீரமணி, ''இப்பாராட்டுக் கூட்டம் ஓர் அச்சாரம் மட்டும் தான்'' என்றார். ஜெயாவோதான் ''வேள்வித் தீயில் புகுந்து வந்ததாக'' சுயபுராணம் பாடினார். தனியார் கல்லூரிகளின் திருவிளையாடல்களை பத்திரிகைகள் பக்கம் பக்கமாக எழுதியதையெல்லாம் கண்டு கொள்ளவில்லை இவர்கள். தமிழகத்தில் பெரும் புரட்சியைச் சாதித்த விட்டதாகப் பேசி ஒருவருக்கொருவர் முதுகு சொறிந்து கொண்டனர்.

ஒரு புறம் உலக வங்கிக்கு அடிபணிந்து ''அனைத்தும் தனியார் மயம்'' எனக் கூறும் ஓட்டுக் கட்சிகள், மறுபுறம் அரசியல் லாபம் கருதி ஓட்டுப் பொறுக்குவதற்காக ''கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் இட ஒதுக்கீட்டை செய்து கொடுத்து விட்டோம்'' என அடித்தட்டு மக்களின் காதுகளில் பூ சுற்றுகின்றன. இந்த அரசியல்வாதிகளின் மோசடிதனத்திற்கு நாம் முடிவுரை எழுதுவது எப்போது?

